உ

திருச்சிற்றம்பலம்.

காசிகாண்டமூலம்.

அதிவீரராமபாண்டியன்

அருளிச்செய்த

இஃது,

பெங்களூர்

ஆ-நமச்சிவாயமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

பாரிப்பாக்கம்

முனியப்பமுதலியாரவர்களால்

சில ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சிசெய்வித்து

பெங்களூர்ஆப்காரிஇஜாராதார்

ஆ-தொப்பைமுதலியாரவர்கள் குமாரர்

இராமசாமிமுதலியாரவர்களாலும்

ஷை யூர் - சவுளிதலால்

ஆ-பாலகிருஷ்ணமுதலியாரவர்கள்குமாரர்


ஏகாம்பரமுதலியாரவர்களாலும்


புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையினது

விவேகவிளக்கவச்சக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

சாலிவாகனசகம்-௲௭௱௬௰௮ஆவணிமீ. 1846





கடவுள் துணை.

காசிகாண்டம்.

மூலம்.

பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கணபதிகாப்பு.

மாற்றரிய தொல்பிறவி மறிகடலினிடைப்பட்டுப் ... ...*
போற்றுறுதன்குனா கழற்றுட்புணைபற்றிக் கிடந்தோனைச் *
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக் ...*
காற்றெறியுந் தழைசெவியகடாக்களிற்றை வணங்குவாம்...*

பரமசிவன் துதி.

சீர்பூத்தசெழுந்தரங்கத்தீப்புனன்மந்தாகினிதண்டேனூர்கொன்றைத், தார்பூத்த செஞ்சடையி லணிந்துமதன் மேல்விழைவு தணியானாகிக், கார்பூத்த விருவிசும்பிற் கங்கைநதிசூழ்கிடந்த காசிவாழும், ஏர்பூத்ததனிமுதலி னிணையடிப்பூங்கமலமல ரேத்துவாமே.(க)

உமையவள் துதி.

அலகிலாக்கருணையென்னு மந்தளிரீன்று தொல்லை, யுலகெலாம் பூத்துக்கன்லை யுவட்டெடுத் தொழுகுஞ்சென்னி, மலையினிற்படர்ந்தபச்சை மரகதக்கொடியை ஞானக், கலையமுதொழுகு தீஞ்சொற் கனியினைக்கருத்துள்வைப்பாம்...... .... (உ)

விநாயகர் துதி.

கரைபொருகங்கையாற்றிற் காளிந்திமடுப்பதென்னச், சொரிமதக்கலுழிவெள்ளஞ்சுழித்துவார்ந்தொழுகக்காசித், திருநகரினிதுவைகுந் திங்களங்குழவிக்கோட்டு, வரைபுரைகளிநல்யானை மலரடிவணங்குவாமே.. (௩)

முருகர் துதி.

இலைமுகப்பைம்பூண்டாங்கி யோர்குடியிருந்த கொம்மை, முலைமுகிழ்பூத்தவள்ளி முயங்குதோள் வெற்பினானை, மலைமுகம்புழுங்கமாட்டி, மாமுதறடிந்துவெய்ய, கொலைபழுத்தொழுகும் வைவேற்குழகனைவணங்கல்செய்வாம்..... ....(௪)

திருஞானசம்பந்தர் துதி.

கேழ்கிளர்புனிற்றுத்திங்கள் கிடந்தொளிர்சடையோன்பங்கி, னூழிருங்கூந்தற்பேதை தடமுலைத்தீம்பான்மாந்தி, யேழ்நிலவரைப்புமுய்ய வீர்ந்தமிழ்மாரிபெய்த, காழிமாமுகிலின்செய்ய மலரடிகருத்துள்வைப்பாம்....................................... ....(௫)

சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

கதழெறிநேமிதூண்டிக் கராங்கவர்குரவனீன்ற, மதலையையழைத்தசெங்கண் மாலெனவருந்துரும, லதிர்கடலமிர்தமென்ன வருந்தமிழ்ப்பதிகம்பாடி, முதலைவாய்ப்பிள்ளைதந்த முதல்வனைவழுத்தல்செய்வாம்..................................... ....(௬)

திருநாவுக்கரசுசுவாமிகள் துதி.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கருவாழிக்கரைகாணாச்சாக்கியர்கள்கற்றூணிற்சிக்கயாத்துப், பெருவாழியிடைவீழ்ப்ப வதுபுணையாக் கரையேறிப் பெட்பினுள்ள, முருகாமெய்ம் மயிர்பொடிப்ப வோங்கெயின்மூன் றெரித்தோனையுவந்துபாடுந், திருநாவுக்கரசனிரு சேவடிப்பூங்கமலமலர் சென்னிசேர்ப்பாம்... (௭)

திருவாதவூரர் துதி.

கொழுதியினவரியளிகள் கூட்டுண்ணுங்கொன்றையந்தார்க் குழகன்றாளிற், பழுதறுசொற்பாமாலை புனைந்தேத்தி யெறிதிரைநீர்ப்பரவையாடை, முழுதுலகமதிக்கவிகை தனிநிழற்றி யொருசெங்கோ

ன்முறைநடாத்தும், வழுதிமுனம் பரியழைத்த வாதவூரிறைவனடி வழுத்தல்செய்வாம்...(அ)

குருமூர்த்திதுதி.

திருக்கிளர்வெண்பிறைக்கொழுந்துஞ் செஞ்சடையுமறிமானுந் திண்டோளெட்டு, முருக்கிளர்வெம் புலியதளுங் கரந்துமானிடவடிவினுலகிற்போந்து, மருட்கிடனுமெனப்பிணித்த வல்வினையின் றொடரனைத்து மாயநூறி, யருட்கடைக்கணளித்தாண்டசுவாமிதேவன்றிருத்தாளகத்துள்வைப்பாம்..................................(கூ)

அறுபத்துமூவர்துதி.

முறுவற்றண்கதிர்மதியுமுரிபுருவக்குனிசிலையுமூசிவண்டு, கரிகத்குமலர்க்குழலுங்குழைதடவுங் கருந்தடங்கட் கயலுந்தாங்கு, மறுவற்ற மதிமுகத்து மானிடத்தர் மழுவலத்தர் மலர்த்தாள் சேர்ந்த, வறுபத்துமூவர்மலரடியிணைகளெமதுசிரத்தணிதல்செய்வாம்(ய)

சிவனடியார்கடுதி.

அவிராழிச்சுடர்ப்படைகொண் டுலகளிக்குநெடுமாலு மயனுங்காணாத், துவர்வாய்மெல்லியல்பாகன் திருவருள்பூண் டிரங்குதிரைசுருட்டுதெண்ணீ, ருவராழிசூழ்கிடந்த விருநிலத்திற்பாதலத்திலும்பர்நாட்டில்,சிவவேடந்தரித்தவர்மற் றெவருளரங் கவர்மலர்த்தாள் சென்னிசேர்ப்பாம்.....................................(யக)

அறந்தவாதொழுகும் வைதிகசைவ நெறியினிலகனில மருங்கிற், பிறந்துளோர் பிறவா தின்றுளோர் பிறப்போர் பெய்கழற் றுமைப்போதின், மறந்திடாதன்பு பூண்டுளோர்யாவ ராயினுமுவந்து மற்றவர்தஞ், சிறந்தபூங்கமல மருட்டிவீடளிக்குஞ் சேவடிசென்னியிற்சேர்ப்பாம்....................................(யஉ)

வாழ்த்து.

அருமறை முனிவர்வாழ்க வானினம் வாழ்கத்தெண்ணீர், விரிதிரையுலகங்காக்கும் விறல்கெழு வேந்தன்வாழ்க, மருவிய திங்கடோறு மழைவளஞ் சுரக்கவெங்கோன், பொருவறமொழிந்ததொன்னூல் பொற்பொடும்பொலிகமாதோ.............................(யங)

நூல்வரலாறு.

புவிபுகழுங் காசிகாண்டம் பொருவில்பராசன்புதல்வன் புகன்றவாறே, செவிவழியி னமுதுகுத்த தேனமதுரம் பொழிதமிழாற்

றெரித்தல்செய்தா, னவவுமதிக்குடைநிழற்ற வோராழித்திசையுருட்டி யொலிநீர்வேலி, யவனிபுரந்தருள்வழுதி யதிவீரராமனிக லரசரேறே...(௧௪)

நூலாசிரியர்சிறப்பு.

நீற்றொளிபழுத்தநெற்றியன்றென்னூ னிகழ்த்தியவறநெறியமிழ்த, லூற்றிருந்தொழுகு நாவினனெண்டோ ளொருவனை யெண்ணியவுளத்தன், மாற்றருஞ்சிறப்பிற் கண்டிகையால மருளறவிளக்கியமெய்ய, னூற்றருந்தவத்துச்சூதமாமுனிவ னைமிசாரண்ணியத்தினடைந்தான்...(௧௫)

சூதமாமுனிவன் வரவெதிர்நோக்கித் துகளறமுக்குறும் பெறிந்து, மாதவக்கிழமை பூண்டுளோர்யாரும் வருகெனமுகமனன்கியம்பித், தீதறயாங்களிலழைத்தநற்றவத்தின் செய்தியாற்போந்தனையென்ன, வாதரம்பெருகி யருக்கியமுதல யாவையு முறையினி லளித்தார்...(௧௬)

வழிவரல்வருத்த மாற்றியபின்னர்ச் சூதமா முனிவரன் மகிழ்வான், மொழிதருபதினெண் புராணமுமுன்னர் மொழிந்தனைகாந்தத்தின் மொழிந்த, பழுதறுகாசி காண்டநீயின்றுப் பகர்ந்திடல் வேண்டுமென்றிரப்பப், பொழிதருகருணை வியாதனைவணங்கிச் சூதமா முனிவரன் புகலும்...(௧௭)

பாயிரம் - முற்றிற்று.

முதலாவது,

விந்தவரையைநாரதர்கண்ட அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர்மகதிவீணைத் தெய்வமாமுனிவன்றெண்ணீர், நருமதை யாற்றின்மூழ்கி நானிலத்துயிர்கட் கெல்லாங், கருதிய வனைத்துநல்கும் குடிலையங் கடவுட்போற்றி, வருதலும் பொருவில்விந்த மால்வரையினிதுகண்டான்...(௧)

குழைத்துவின்படருங்கோட்டுங் கொழுநனையதவம்யாவும், பழு
த்தனநின்றதோற்றம் பைந்துழாய்ப்படலைத்திண்டோ, ளழற்பொ
லிதிகிரிமாய னளப்பருமண்டமெல்லாம், விழுத்தகுமெய்யிற்றாங்
கி நின்றெனவிளங்கிற்றன்றே.. ....(௨)

மின்றிகழ்கமஞ்சூற்கொண்டல் படிதலும்வேழமென்னுச், சென்
றொருவேழமேற்பச் செவிவளிவிசையிற்சிந்திக், குன்றினின்றகன்ற
மேகங் கொல்சினக்களிநல்யானைப், பின்றொடர்ந்தேகவஞ்சிப் பெ
யர்ந்தமாலியானைபோலும் .... (௩)

தளிமுகிற்படலமந்தண் சாரலிற்றவிழவோங்கி, வெளிமுகடண
வுசென்னி மீக்கிளர்மரங்களெல்லாம், தளிர்நிலாமணிக்கற்பாறைந
கைமதிதவிழமல்கு,குளிர்புனற்றிவலைமாற்றிக் குழைத்தனவளரும
ன்றே.................................... ....(௪)

வண்டொடுஞிமிறுந்தேனு மலர்ப்பொறி யவிழ்த்துவார்ந்த, த
ண்டுளிநறவமார்த்துதண்ணறுஞ்சாரற்றாழ்ந்த,கொண்டலினனைந்த
கூந்தற் குறத்தியர்குழாங்கொண்டேகி, விண்டொடுகுடுமியேறி வி
ரித்துநீர்புலர்த்துவாரோ.. .... (௫)

தடஞ்சினைமரங்களெல்லாஞ் சந்தனவேழமெல்லாங், கடம்பொ
ழிபுழைக்கைநால்வாய்க் கழற்சினக்களிநல்யானை, யடைந்துலாம்வி
லங்கியாவு மருங்கடிநரந்தநாவி, மிடைந்துறுபறவையாவுங் கின்ன
ரமிதுனமாதோ... .... (௬)

இனையனவளங்கொள்விந்த மானிடவுருவமெய்திக், கனைகதிர்ச்
செல்வனென்னக் கதிர்பரந் தெறிக்கப்போந்த, வினையறுதவத்து
மிக்க வீணைமா முனியைக்காணுப், புனைகழல் வழுத்தவெண்ணிப்
போயெதிர் கொண்டதென்றே............................ (௭)

நீர்தொடை மகதிவீணைத் தெய்வமா முனிவன்றானி, லேற்தெ
ழிற்குடுமிக்குன்றங் குழைவொடுமிறைஞ்சிற்றென்றூற், பார்தனின்
பிடரின்மேய படுகடலுடுத்தபாரின், வாய்ந்தநற் றவத்தின்மிக்க
துளவென வகுக்கலாமோ........................ .... (௮)

வணங்கலுந்தழீஇக் கொண்டன்பின் வரம்பிலாவாசிகூறும், பிண
ங்குநூல் மார்பனுள்ளம் பெட்புறவுவகையோங்க, விணக்கியெருக
மனெடு மருக்கிய முதலவீர்த்து, தணிந்துதாள் வருடிப்போந்த
வருத்தமுந் தவிர்த்ததன்றே........... ....(௯)

மாதவவிவணிபோத மனத்திருளகன்றதம்பொற், பாதநல்டுக
ளாலின்றென் பவக்கடற் றுறந்ததிற்றைத், தீதறுநாளுநன்னு ளா
யது சேணினேருங்கு, பூதரமென்னும்பேரு மெனக்கினிப் பொ
லிந்ததன்றே.. (௰)

என்றலுமுயிர்ப்புவிங்கி நாரதனிருப்பநோக்கித், துன்றிருபுவி
களெல்லாஞ் சுமப்பவன் யானேமற்றைக், குன்றெலாஞ் சுமக்கு
மென்னல்கூற்றலாற் றரிக்கலாற்றுப், பொன்மிணிற் திருக்குநீரான்
மேருவும் பொலிந்ததன்றே.................................. (௰௧)

உயிர்தருமத்தமில்லா நிடதமு மவுணரோங்குஞ், செயிருடை
யுதயவெற்புஞ் செம்மையி னிலக்குன்று, மியல்புற நடத்தல்செல்
லா ரேவதக்கிரியுநாகம், பயிலியற் பொதியவெற்பு மெனக்கிணை
பகரலாமோ.. ......(௰௨)

கன்னின்மந்தரமும்வெய்ய கடும்பனி நனியவோங்கு, மண்
ணலங்குடுமிக்குன்று மகநிலஞ் சுமக்கலாகா, விண்ணுயர் சையமு
ங்கிரவுஞ்சமும் வேலைஞாலத், தெண்ணுறு கிரிகள்யாவு மெனக்கி
ணை யல்லமாதோ.................................. ...... (௰௩)

என்றிகல்விந்தங்கூற விருஞ்சடைக் கடவுள்வைகுங், குன்றமே
முதலாயுள்ள குலவரை யனைத்துநிற்க, நன்றுகொ லிதனுக்குற்ற
மனச்செருக் கென்றுநக்கு, மன்றலங் கமலப்புத்தேன் மகனுளத்
தெண்ணிச்சொல்வான்.......... ... . (௰௪)

உடைதிரைப் பரவைஞாலத் துயர்விசும் பகடுதோயுங், கடவுண்
மால் வரைகட்கெல்லா மிறையெனக்கழறலென்னே, வடவரைதின்
னையாது மதிக்கிலா துணைத்தமாற்றந், தடவரைக் கிறைவதின்பாற்
சாற்றுவான் புகுந்துளேனல்.......... ....(௰௫)

நின்னுழை யடைந்தபோழ்தி னெட்டுயிர்ப்பெறிந்தவாறு, மன்
னது கருதியென்னு வறைந்துநன் முகமன்கூறி, யின்னிசை மகதி
வீணை யிருந்தவற் கிறைவன்வானோர், பொன்னக ரதனைநோக்கிப்
போயினன் போயபின்னர்.................................. (௰௬)

நீ தி கூ றல்.

கலிவிருத்தம்.

வீழ்புன்வழிமனம் விடுநர்வாழ்க்கையுஞ், சூழ்வினைமுடித்தி
டார் துய்த்துவாழ்வதுந், தாழ்விலன்புடையதன் றமரிகழந்திட,
வாழுநர்வாழ்க்கையும் வாழ்க்கையாகுமோ.................... (௰௭)

திருந்தலர்புகழொடுஞ் செல்வந்துய்த்திட, வருந்தியுங்கருணை யோ டடிசில்வாய்மடுத், தருந்தியுந்துயின்றுநல் லின்பமாற்றியு, மிருந்துயிர்சுமப்பதி லிறத்தனன்றரோ.................. (௧அ)

புத்தியைக்கொடியவெம் பசியைப்பொற்பினை, யந்தமிழ்முயற்சியைத் துயிலையாற்றலை, நந்தலிலுயிரினை நன்னர்நெஞ்சினைச், சிந்தையொன்றெய்திடிற் சிதைக்குமென்பவே.................(௧௯)

உருத்தெழுவெப்புநோய் பழகினுய்யுமா, றருத்தியமருந்தினிலமையுஞ் சித்தைவெப், பெரித்துநாள்பற்பல கழியினீண்டுமால், வருத்துவரோவிஃ தாற்றவல்லரோ.......................... (உ௰)

மெய்ம்மைநூற்றுறை படிவினைவல்லவன், பொய்மொழிபுகல்வனென் றெண்ணல்புல்லிதே, யம்மவோமேருவு மமருக்கெண்ணுமே, னம்முடையெறுழ்வலி நன்றுநன்றரோ................ (உ௧)

பொலனெடுங்கிரிக்குறு புகழ்ச்சியாதவன், வலம்வருகின்றதால் வந்ததாமிவன், செலவினைத் தடுப்பனென் றெண்ணித்தெண்டிரை, யுலகளந்தவனென விசும்பினோங்கிற்றே.................... (உஉ)

மழகதிர் கனைகடன் மூடகட்டின் வந்துமே, லெழுவது செய்கடனிறுத்தற்கெண்ணுபு, பழமறையந்தணர் பார்க்குந் தன்மைபோ, னிழலுமிழ் மணிவரை நோக்கிநின்றதே.................... (உ௩)

விந்தவரையை நாரதர் கண்டவத்தியாய முற்றிற்று.

இரண்டாவது,

தேவர்கள் பிரமலோகமடைந்த

அத்தியாயம்.

கலிவிருத்தம்.

அருமறையந்தனர் கடன்களாற்றிட, மருவிரிகமலமேல் வண்டு பாண்செய, விரிகதிர்திசைதொறும் பரப்பும்விண்ணவன், மூரிதிரைக்கருங்கடன் முகட்டிற்றோன்றினன்.......................... (௧)

எழுந்தவெய்யவனழற்கிறைவனிற்கினைக், கிழிந்துபோய்ச்
சேர்தமிழ்க் கடவுண்மால்வரை, தழங்கிசையருவியிற் றவிழ்ந்தெ
ன்றலங், கொழுந்துலாந்தென்றிசைக் குறுகன்மேயினான்... (உ)

கனைகதிர்ப்பரிதியங் கடவுள்வானவன், றுணைபரிப்புரவிக டூண்
டச்செலின், வெள்ளையரோதடுப்பவ ரென்னவெண்ணுரு, வனைகழ
லருணனும் வணங்கக்கூறுவான்.................(௩)

என்னுடைப்பணியினா லன்றியெல்லொளி, மன்னவபொலங்கிரி
வலங்கொளேலென, மின்னகுயணிதிகழ் விந்தமால்வரை, தன்னு
டைவழியினுந் றடுத்த தாமென்றான்................ (௪)

என்றலுமிருட்குறும் பெறியும்வெய்யவன், றுன்றிருவிசும்பெ
லா மறைத்ததோற்றத்தா, னன்றுநன் றிதன்வலி யென்றுநன்மணி
க்குன்றினைவியப்பொடுங் குறித்துநோக்கினான்..............(௫)

வடதிசைக் குணதிசை மருவிவாழுநர், படர்வெயி லன்றலிற்
பையுளெய்தினார், குடதிசைதென்றிசைக் குழுமிவாழுநர், மிடை
யிருட்பிழம்பினா லுள்ளம்வெம்பினார்...................... (௬)

அருமறை வேள்விகண் முதலவாகிய, கருமமென் றுரைத்தவை
யாவுங்காய்கதி, ரிரவியன்செல்வினை யின்றியின்மையால், விரிகட
லுலகெலாந் துயரில்வீழ்ந்தவே.............................. (௭)

தோற்றுவித் தளித்தவை துடைத்தல்காலங்கள், போற்றுதல்வெ
ங்கதிர்ப் புனிதனன்றிமற், றூற்றுந ரின்மையா லுலகம் யாவையு,
மாற்றருஞ்சித்திர மென்னவைகுமால்........................ (௮)

ஓரிடைவெயிலிருளோரிடத்ததாய்ச், சேர்தலினுரகருந் தேவர்
யாவரும், பார்மிசைமுனிவரும் பங்கயாசனன், வார்கழற்றாமரை
யடைந்துவாழ்த்தினார்..(௯)

பிரமதோத்திரம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருவமா யுருவமாகி யாதியாயநாதியாகிப், பிரமமாயடைதற்
கெட்டாப் பேரின்பவீடதாகி, யிரணியகருப்பனாகி யாருமாயெ
வையுமாகித், தெரிவரும்பொருளாய்நின்ற நின்னடிசென்னிசேர்ப்
பாம்.. (௧)

எழுதருமறைகட்கெய்தா தெங்குமாய்நின்றாய்போற்றி, மொழி யுடன்மனதுக்கெட்டா முழுப்பரம்பொருளேபோற்றி, தொழுத குமனத்தோர்நெஞ்சத் தூய்வெளியதனிற்றோன்றி,யழிவருஞ்சோ தியாய வருமறைக்கொழுந்தேபோற்றி........................(௰௧)

விச்சையாய் விச்சையாகி விளங்குமுக் குணத்திற்றோன்றி, முச் செயல்புரியாநின்ற மூவராய்க்காலமேவா, திச்சையிற்புருடனாகியி றைஞ்சுநர் பவத்தில்வீழு,மச்சம தகற்றிநின்ற வமலனே போற்றி போற்றி......... .... (௰௨)

ஐம்பெரும்பூதமாகி யவற்றுறுகுணங்களாகி, யைம்பொறியாகி யந்தக்கரணமாயறிவுமாகி, யைம்பெருங் கருமமாகி யனைத்தினுந் தோய்ந்துந் தோயா, வைம்பெருங் கடவுளாகு மாதிநின் னடிகள் போற்றி.. .... (௰௩)

வெருவருங்காமமாதி வெஞ்சுறவெறியநீங்கா, விருவினைத்திரைக ளெற்றும்பிறவியங்கட லுளெய்தி,மருளுறுமுயிர்களெல்லாம்வருந் துறுதெடுப்பளான, வருளுருவெடுத்தவுன்ற னடியிணைக்கன்புசெ ய்வாம்..(௰௪)

உயிர்ப்புறுமறைகள்வேறிவ்வுலகெலாஞ்செய்யபோற்றாள், பயி ர்ப்புறுநிலநின்சென்னி பரமவாகாயமாகும், வியப்புறு சுழிகளுந் தி நடுவெளி யாகுமெய்யின், மயிர்த்தொகை யனைத்துமெண்ணில் வான்றருக்குலங்களாமால்............ .... (௰௫)

கடவுணின்மனத்திற்றோன்றுங் கலைமதிகண்ணிற்றோன்றும், பட ர்வெயிற்கற்றைகான்றி பாயிருள் பருகும்வெய்யோன், மிடைதரு புவனமெல்லாநின் னுழைமேயவேத்தப்,படுபுகழ்புகழ்வோன்போ ற்றப் படுநிலநீயேயாமால்..... ....(௰௬)

என்றடிதொழுதுபோற்றி யிமையவர் திற்பவோங்கு, குன்றிரு ஞ்சிறைகளீர்ந்த குரிசில்வாண்முகத்தைநோக்கித், துன்றிருவிசும் பினின்று போந்தமைசொல்லுகென்ன, மன்றலங்கமலப்புத்தேண் மனமகிழ்ந் துரைக்கலுற்றான்........................ ...... (௰௭)

வழுத்துமித்துதியாலென்னை முகுந்தனைமழுவலானை, முழுத்த போன்புமுற்றி முறையினிற்பரவினோர்க்கும், விழுத்தகுபொருள்

களாதிவேண்டுப வெறுப்பநல்கித், தொழத்தகு மறைகளேத்துந் தூயவிடலித்துமன்றே.......................................(௰௮)

வெருவரலொழித்துநெஞ்சின் வெந்துயர்தவிர்கநீவி, வருமறை முதலவாய விஞ்சைநல்மகங்களான்ற, பொருவறு வாய்மைநீதி புனிதமாதவங்கள்யாவு, மருவுகொண்டெம்மைநீங்கா துவட்பொடு மினிதுவைகும்.......................................(௰௯)

ஒலிமுதல்புலன்களைந்து மொடுக்கியுட் கரணஞ்செற்றோ, ரலகி லுன்மறையுந்தெள்ளி யறநெறித்துறையுணின்றோர், பலன்விழை யாதுநோற்போர் பத்தினிப்பெண்டிராவின், குலமினிதருந்தலை ம்புற் கொடுப்பவர்தவத்தின்மிக்கோர்.......................................(௨௰)

பிறர்மனைவிழைதல்செல்லார் பெற்றதாய்தந்தைதாளி, னறுமல ர்த்தூவித் தாழ்வோர் நான்மறைக் கிழவர்பாதத், துறுபுனனுகர் வோர்கங்கைக் கரையினிலுடலநீத்தோர், மறைபுகழ்பிரயாகைதன் னின் மாகநீர்படிந்ததூயோர்.......................................(௨௧)

ஒளிமதியயனஞ்சார்ந்தோ ருபையகோமுகியையீந்தோ, ரளியு டனிறந்தோர்க்கெல்லாங் கயையினிலன்னமீந்தோர், தெளிவுடன்பு னிதராகித் திங்களொன்றிடையிட்டுண்போர், களிதருகாமமாதிகழி மலங்கழுவுநீரார்.......................................(௨௨)

ஈங்கிவர்யாருமெம்பா னினிதுவீற்றிருந்தபின்னர், நீங்கருங்காசி தன்னிற் பிறந்துவெண்ணீற்றுமேனிக், கோங்குறழ் முலையாள்பங்க ன் குரைகழற்கமலம்போற்றி, யாங்கவனருளான்மீளாப் பேரின்ப மடைவர்மாதோ.......................................(௨௩)

உறுபுலனடக்கிவேத நெறிவழியொழுகிநின்ற, வறுதொழிலோ ரும்யானுங் குலமொன்றுமவருளாய்ந்து, மறுவறுமறையோர்தம் பான் மந்திரமனைத்தும் வைத்தேன், றெறுவிடை யவிகள் யாவந் தோமறத்தொகுத்துவைத்தேன்.......................................(௨௪)

பசுவின்மகிமைகூறுதல்.

ஆன்குளம்படியிற்சேர்ந்த வருந்துகடோயட்பெற்ற, வூன்பயி ல்யாக்கைகங்கை தோய்ந்ததா மருட்பினுச்சி, வான்புனற் கடவுட் பேர்யாறிருக்கும்வாலில்வுகாலுங், கூன்பிறைமுடித்தசெல்விகொ ம்பிடைவதியுமாதோ.......................................(௨௫)

கோசலந்தெய்வநன்னீர் நருமதைகோமயந்தா, ஞசறுயமுனை நீம்பா லலைபுனற்கங்கையாகு, மாசில்வெண்டிங்கட்கண்டி யரசனு மயனு மாலுந், தேசுடை யதனிலென்றுஞ் சேர்ந்தினி திருப்ப ரன்றே...(௨௬)

உலகெலாமுறுப்பின் வைகுமாவினையுவந்துபோற்றி, வலம்வரி ற்றேவை யெல்லாம்வலம்வரு பயனுண்டாகுங், குலவும்வாலுதி யான் மெய்யிற்றைவரிற் கொடுநோய்துன்பங், கலதிபோய்நறு மென் கூந்தற்கமலைவந் தடையுமன்றே.........................(௨௭)

குடமிசர் செருத்தநல்லான் கோதறு முனிவர்வேதங், கடவுண் மீன் கற்புமாதர் வள்ளியோர் வாய்மைகாப்போ, ரிடைவிடாதுவ ந்துதானம் வழங்குந ரொரூவராவார், புடவிகீழ் விழாதெஞ்ஞான் று மெளிதினிற் பொறுக்குநீரார்.................................. (௨௮)

விளங்குநம் முலகின்மேலாய் வைகுந்தமதன்மேர்கந்தன், வள ங்கெழு முலகப்வெற்பின் மாதுல கதனின்மேலாங், களங்கனியனை யகண்ட னுலகதன் மேலாம்பாங்க, ருளங்கவர் வனப்பின்மேவுங் கோவின துலகமாமே...(௨௯)

கூறுநான் மறைவல்லோருக் கானினைக் கொடுக்குமேலோ, ரீறி ல்பே ரின்பந்துய்த்து நனாதிரை மூப்புமின்றி, யாறெலாம் பாலா ய்ச்செய்ய வளறுபா லடிசிலாய, வீறுயர்கோலோகத்தின் மேவி வீற் றிருப்பர்மாதோ.. (௩௰)

எதமின்மறைகடேரா ரிருபிறப் பாளரல்லா, ராதியிற்றோன்றி நின்ற வேதமுமங்கமாறு, மோதியபுராண நூலுங் கண்களோடுள்ள மாகு, மேதகுமவையிலாதார் விழியொடு மனமிலாதார்... (௩௧)

விந்தமால் வரைபொற்கோட்டு மேருவோ டிகலிவெய்யோ, னந்தரத்தியங்காவண்ணந் தடுத்ததா லமரரீங்கு, வந்தநீர் காசிதன் னில் வான்றவம் புரியாநின்ற, செந்தமிழ் முனிவனல்லால் யாரது தீர்க்குநீரார்...(௩௨)

காசியினுறையுமுக்கட் கனியருட்கடலின்மூழ்கி, யாசறவிளங்கு கின்ற குடமுனிக் கரியதுண்டோ, தேசுடைமுனிபானீவிர் சென் மின்க ளென்னவோதி, வாசமென்கமலவீட்டு மறையவன் மறைந் துபோனான்...(௩௩)

உடைதிரைப் பரவையேழுங் குடங்கையில்வாரியுண்ட, கடவுண்
மா முனிவன்றன்னைக் காண்பது நிமித்தமாகப், படவரவணைத்த
முக்கட் பரமன்வீற் றிருக்குங்காசி, யடைதுநா மென்றுநெஞ்சங்
களித்தன ரமரரெல்லாம்.............................. (௫௪)

காசியைக் குறித்துச்செல்லுங் கால்களே கால்களாகுங், காசியை
வழுத்துநாவே நாவெனக் கழறலாமால், காசியின் கதைகள்கேட்
குஞ் செவிகளே செவிகளாகுங், காசியையினிதுகாணுங் கண்களே
கண்களாமால்.. (௫௫)

எனவுள மகிழ்ச்சிபொங்க விமையவர் குழாங்கொண் டேகித்,
அலைதிரைக் கங்கைசூழுங் காசியிலடைந்தாரொல்லு, வினையறுதவத்
துச்சுதன் வேட்கையோடிருந்துநோற்ற, முனிவரனினிதுகேட்ப
முகமலர்ந் துரைத்தானன்றே.............................. (௫௬)

இரண்டாவது, தேவர்கள் பிரமலோகமடைந்த
வத்தியாய - முற்றிற்று.

ஆ_அத்தியாயம் - மூன்றுக்கு - திருவிருத்தம். ௭௬.

மூன்றாவது,

தேவர்கள் அகஸ்தியர் ஆசிரமத்தில்வந்த அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மாசிறவத்தின் றுறைபோய மறைதேர்முனிவர் மகிழ்கூர்ந்து,
காசியடைந்துவிண்ணவர்களிழைத்தவாறுங் கடல்பருகு, மாசின்
முனிவர்ச் சேர்ந்தவ மன்றேவல்விர்த மடக்கியதும், பேசுகென்
னச்சுதமுனி பிறழாதினிதின் மொழிந்தனனால்.............. (௧)

ஆயுங்கேள்விச்சுகனுமறை யலையும்வைசம் பாயனனும், நீயுங்
கேண்மின் விண்ணவர்போய் நெடுநீர்மணிக்கல்விகையாடிக், கா
யுக்கதிரோன் குணக்கெழுந்த காலைக்கடவ கடன்கழித்துத், தூய
மறையோர் மனக்கவிப்பத் தகமேர்தானத் தொழில்முடித்தார். ()

பொங்கிப்பரந்த திரைக்கங்கை புனல்சூழ்காசி நகருறையுந், திங்கட்கண்ணிமுழுமுதலின் செய்யமலர்த்தா ளிணைதொழுது, கொங்கிற்பொலிந்த நறுமலர்தூய்க் கோயில்வலங்கொண் டோரைந்து, கங்குற்பொழுது கழித்துமனங் களிகொண்டுருகிக் களிந்தனரால்.

எறிநீர்க்கங்கைசூழ்கிடந்த வின்னநகரினெஞ்ஞான்றும், பறவையினமும்விலங்குகளு மிறக்குங்காலைப்படர்சடையெம், மிறைவன்புகலுந்தாரகப்பிரம வுபதேசத்தாலீறில்கதி, பெறுபவென்னிலிங்குறைவார் பெறுபேறியாமோபேசுவதே...................... (௪)

இன்னநகரினிடைப்பிறந்த மலத்தின்புழுவுமீறெய்தின், மன்னும்பிறவிக்கடற்படிந்து வருந்தாதழியாவீடெய்து, முன்னரிழைத்தநல்வினைகண் முழுதுமுலப்பின்விசும்பொழிந்து, பின்னுநிலத்தினிடைவந்து பிறப்பேபரமதுபேறினிதால்.................. (௫)

மற்றநகரின்வீற்றிருந்து மதிவெண்கவிகைதனிநிழற்றுங், கொற்றவேந்தராதலினுங் குளிர்வெண்டரளமணிவரன்றி, யெற்றுதிரைநீர்க்காசிதனில் யாரோயேனுமிறத்தலினித், தொற்றைநுதற்கட் பெருமானு முறையுந்தன்மைத்தாதலினால்......................... (௬)

முளரிப்பொகுட்டில் வீற்றிருக்கு முதல்வன்பகற்போ தெட்டிலொன்றிற், குளிர்வெண்மதிச்செஞ்சுடர்ப்பரிதி குடுமிவரையில்சிறகரிந்த, மிளிருங்குலிசப்படைசுமந்த வேந்தன்முதலோரிறந்திடுவ, ரளவில்பிரமரழிந்திடினு மழியாரிந்நகருறைவோர்..... (௭)

மறிமானேந்துமொருபாகன் வாழுங்காசிக்கேகுதுமென், றறியான்சொல்லுமடிக்கடியோர் புரவிமகப்பேறடைந்திடுவன், குறியாநடந்துகுரைதிரைநீர்க்கங்கையாடிக்கொன்றைபுனை, யிறையோன்பாதந்தொழுமவர்பே றெம்மாற்கூறுந்தகைமைத்தோ..........(௮)

கடவுட்கங்கைப்பேரியாறு காணிலாடிற்கடன்கழிக்கிற், றெடில்வானெறிசென்றடைந்திடுவர் சூழ்ந்துகோயில்வலம்வந்து, மிடியார்காசிமுழுமுதலை வணங்கிமுத்திமண்டபத்தோர், நொடியாயினுமுள்ளுறைந்திடுவோர் நுவலற்கரியவீடடைவார்........... (௯)

என்றுகாசிவீறனைத்து மெண்ணியெண்ணிவியப்பெய்தி, மன்றற்றருவினீழலுறை வைரப்படையோன் முதலமரா, மொன்றிநீங்காமுக்குறும்பு மெறிந்துபுலன்களோரைந்தும், வென்றகலசமுனியுறையு மிருக்கைநோக்கிவிரைந்தெழுந்தார்..................... (௰)

விலங்கு-பறவை-நீதிகூறல்.

அழலுங்கனலும்வெய்யவனு மழற்றுவாகிமருண்மாலைக்,குழவி
மதிபோற் குளிரத்தூங்கும் புரிகோட் டிரலை யிளங்கன்று, முழையி
னுறைவெம்புலிப்பறழும் விளையாட்டயருமாள்ளெயிற்றுத், தழல்
கட்பாம்பினகல்வாலைய யளையென்றெலிகடனித்துயிலும்... (௧௧)

அரிமானேற்றிற்கூன்பிறைக்கோட் டண்ணல்வேழமுமதுகுரிஞ்சு
ம், வெருவாச்சரபந்தலையணையா வெங்கணரிமான்விழிதுயிலும்,பு
ரிகோட்டிரலைபுனிற்றுமறி பொங்கியெழுந்துவால்குழைத்துப், ப
ரிவாற்கடைவாய்ப்பாலொழுகப்பாய்வெம்புலியின்முலையுண்ணும்.

கேழற்பன்றிமருப்பினிலங் கிளையாகுமலிமேற்றுயிலும், பேழ்
வாய்க்கரடிமயிருளர்ந்து முதிர்குன்மந்திபேனெடுக்கு, மூழிக்கனை
ல்பாய்ந்தொழுகுவிழி யுரகங்கீரிமேலுறங்கு, மாழைச்சிறுமான் கு
ழக்கல்லுற வந்துநரிகடைவருமால்........................ (௧௩)

பொருவின்மறையினுபநிடதப் பொருள்கடேர்ந்துபூவையொ
டு, முருவச்செந்தார்ப் பசுங்கிள்ளை யுணாயாநிற்கும் பலவிலங்கும்,
வெருவல்செய்யாநடுசினத்த வேடர்சிலையின்முதுகுரிஞ்சுங், குரு
குவாவியருகிருந்து முகளுமீனங்குத்தாவால்.............. .....(௧௪)

கவரியினங்கள்சடைகுழன்று கருமைவார்ந்தவாலதியைக், குவி
மென்கொங்கைக்குறத்தியர்தங் குழலோடொப்புக்காணுமிக,நவை
யென்றெண்ணிக்கூரெயிற்றுக் கொடுவெம்புலியுநயந்துதசை,கவர்
தல்செய்யாதெஞ்ஞான்றும் பசுந்தோட்டறுகுகறித்திடுமால்.(௧௫)

புழுவுந்தசையும்வெள்ளெலும்பும் பொதிந்தகுரம்பைவீக்குதற்
கு,கழிபூனுகர்ந்தோர்கொடுநரகிற்கற்பகாலங்கிடந்தழுந்தி,விழை
வின்முன்னர்த்தாநுகர்ந்த விலங்குமவர்தம் மெய்த்தசையை, யழி
வெம்பசியாற்பறித்தருந்த லென்னும்பான்மையறிந்தேயோ(௧௬)

கொன்றுவிலங்கின்றசைநுகருங் கொடுமையோரவ்விலங்கினுட
ல், றன்றுமயிரொத்தனையாமத்துணையகாலம்வெந்நரகி, ஞென்றி
னுகர்வாய்ப்புழுவொழுக வுழப்பரெல்லையுணர்ந்தேயோ, கன்று
சினவெங்கொடுவிலங்கும் புலனுன்றின்னக்கருதாவால்........(௧௭)

ஒருமீன்புலவுவாய் மடுப்பதொழியுந் தசைகளனைத்தினையும், பரி
வானுகர்ந்தோர்வீழ்கின்ற பாழ்வெந்நரகிற் படிவமொன்றும், மரு
மாமறையின் பொருடேர்ந்தோ வந்தாமரைநான் மலர்ப்பொது
ளும், விரிநீர்வாவி பயின்மீன்கள் விழுங்காதலவும் புள்ளினமே.

நளைசயானரவு வாய்மடுத்தோர் நரகில்லளப்பி ளுளழுந்தி, வளைச யான்மீட்டுங் கள்ளுண்ணு மாந்தராக நிலத்துதித்து, மிளைசயாதன வு மிளைசவனொனும் வேதமொழியின் பொருளுணர்ந்தோ, யிளைச தேர்சுருப்பர் மதுகரமென் றிருந்துந்தேற லருந்தாவே... (௰௯)

சேவலன்ன மளைட்பதற்குச் செல்லவிருடி யுளைறவிடமென், ஞுவியனைய பெடைவிலக்கு மந்தண்மாவி னிளைங்குயிலுர், கூவல் செய்யாப் பவக்கடலைக் குழவிமறி வேணியனைன்றி, யாவர்கடத்து வாரொன்றுப் பூவைகிளியோ டியம்புமால்.................. (௨௰)

இனையதாயவாச்சிரமத்தெறிக்கும் வடவைப்பேரொளியுங், கனை வெங்கதிரு மொருங்கெழுந்து கதிர்விட்டெறிக்கும் பான்மையெ னத், தனிநான்மறையோர் வடிவெடுத்த தன்மையென்ன வொளி தழைத்து, வினைதீர்தவத்துக் குறைமுனிவ னுறைதனோக்கி விழி களித்தார்.. (௨௧)

மடமென்பிணையி னிளம்புனிற்று மறியுந்தறுகட் கூரெயிற்ற, கொடுவெஞ்சினத்த புலிப்பறழுங் குலவியாடு முற்றத்துக், கடவுட் கற்பி னிகரில்லாக் காதற்பன்னி கமலமல, ரடிமென்சுவடு கண்ணு றது மமரர்யாரும் வணங்கினரால்.......................... (௨௨)

குறைகூறுதற்கு வந்தடைந்த குலிசப்படையோன் முதலமரர், நறவூற்றிருந்த பொதியவிழ்க்கு நளிமென்கமல மலர்ப்பொகுட் டின், உறைவோனென்ன வினிதியற்றும் யோகமொழிந்து வீற்றி ருக்கு, மறையோன்கமல முகநோக்கி வாழிவாழி யெனவுரைத் தார்.. (௨௩)

எத்துமமரர்தமைநோக்கி யெழுந்தமுகமனினிதியம்ப, வாழ்த் தியுவந்தாங் கவர்க்கியன்ற விருக்கையீந்து வானுலக, நீத்தெங்குடி விற் புகுந்ததென்னை யென்றுனெறியிலைம்பொறியுங், காத்துமறை யின் பொருடெரிந்த கடவுட்பெருமா தவத்தோனே...... (௨௪)

மூன்றாவது, தேவர்கள் அகஸ்தியர் ஆசிரமத்தில்வந்த

அத்தியாய - முற்றிற்று. ஆ விருத்தம் - ௬.

நால்காவது,

கற்பிலக்கணங்கூறிய அத்தியாயம்.

கலிவிருத்தம்.

நீதெரிந்த தமிழ்முனிசெப்பலும், யாதுசொற்றனர் விண்ணவ
ரென்றருள், மாதவத்தினர் கேட்பமகிழ்வுடன், சூதமாமுனிசொல்
லலுற்றனரோ.. (௧)

அரியநால்மறை தேருமகத்தியன், பரிவினன்மொழி கேட்ட
லும்பண்புடைக், குரவல்வான்முக நோக்கினர்கோதிலா, விருவி
சும்பி னிமையவர் யாருமே.. (௨)

பனிவிசும்பி னிழிந்துபரிவொடும், புனைகருங்கழல் விண்ணவர்
போந்தமை, முனிவகேட்டி மொழிகுவல்யானென், வினிதினந்
தனை நோக்கியியம்புவான்.. (௩)

மன்னுகானினு மோங்குவனாயினு, முன்னருந்தவ மாற்றுமுனி
வரி, லன்னமூர்தியை யஃதியருந்தவ, நின்னையொப்பவர் நீணிலத்
தியாவரே.. (௪)

கங்கைசூடிய கண்ணுதற்சாமிதன், பொங்குபேரருள் பூண்டவ
ருந்தவ, வங்கண்வானத் தமரர்குறையுறி, னெங்குமேவுவர் நின்னி
டத்தலிதியே.. (௫)

செயிரில்கற்பின் திகழ்மணிக்குன்றனை, மயிலன்னனின் மனைக்
குரியாளெனி, லுயாருந்தவ வுன்றனுளத்திடை, முயலிலேது முடி
த்தற்கரியதே.. (௬)

விளங்கருந்ததி மேனைசுநீதியுட், டுளங்குசாவித் திரியனசூயை
னின், களங்கமற்றதோர் கற்புடையாளொடு, முளம்பொருந்தி நிகர்
சொலவொன்னுமோ.. (௭)

கொழுநனுண்டபின் னுகர்கொள்கையும், விழிதுயின்றபின்
றுஞ்சலுமென்றுயி,லெழுதன்முன்ன மெழுதலுமேயன்றே,பழு
தில்கற்புடைப் பாவையர்செய்கையே.. (௮)

எரிமணிப்பொலம் பூண்சுமந்தின்னுயிர்க், குரியகேள்வருவப்ப
முன்னெய்தவார், பிரியுங்காலையிற்பெய்கலன்யாவையு, மொருவி
மாசடலுண்டிடலைகுவார்.. (௯)

இனியகேள்வர்முனியினெதிர்நின்று, துனிசொணெஞ்சொ டெ
திர்மொழிசொல்கிலா, ரினையகேள்வ ரெறியினுமன்பொடுங், கனி
வர்நெஞ்சகங் கற்புடைமாதரோ................................(௰)

எய்துமிற்றுறந் தேகலரில்லகல், தையலார்முகங் காணினுஞ்சா
ம்புவார், மையில்காதலர் வந்தெவையாயினுஞ், செய்திறொன்றனு
ஞ் செய்தனமென்பரால்.............................. (௰௧)

விழைவுகண்ணுறன் மேதகுநோன்புறல், பழுதிற்றானதி யாடுத
ல்பண்ணவர்த், தொழுதுவாழ்த்துத றேமறுகற்பினோர், கொழுந
ரேவலி னன்றிக்குறிக்கொளார்.............................(௰௨)

வனைபுந்தங்கலன் மாற்றவட்கியினு, முனிவுசெய்திலர் மூப்பின
ர்சேர்வுறுத், தனியிற்சேர்கலர் தாம்பிறரிற்புகார், புனிதநெஞ்சு
டைப் புண்ணியமாதரோ............................ (௰௩)

திருந்துமாயுள் சிதையுமென்றெண்ணித்தம், பொருந்துகாதலர்
நாமம்புகன்றிடா, ரிருந்தபோதன்றித் தாமுனிருந்திடா, ரருந்து
மிச்சி லமிழ்தினுகர்வரால்.............................. (௰௪)

அறந்தவாத் தமதன்பரருளினுற், றுறந்துளோர் பிறப்போர்
தொழில்செய்குநர், சிறந்ததொல்குலத் தெய்வம்பசுவிருந், திறந்
துளோர்க்கும் பகுத்தினிதுண்பரால்......................... (௰௫)

மேவுகாதல ருள்ளம்விழைந்தன, வேவுமுன்னர்குறிப்பினியற்
றுவார், தாவிலன்பர் தமையலர்தூற்றிடும், பூவையன்னவர் புன்
முகநோக்கிலார்.................................. (௰௬)

இல்லறத்திற் கியைவனவிட்டுவா, ரல்லசெய்தே வறிதினழித்தி
டார், புல்லுகாதல ராயுட்பொலிவுற, மல்லலோங்கணி மஞ்சளணி
வரால்.. (௰௭)

கொழுநன்சொற்கடவாதுறை கொள்கையே, வழுவினல்லறம்
வான்றவமாற்றுத, றொழுதுதெய்வம்பராய்மலர்தாவுதல், பழுதில்
கற்புடைப் பத்தினிக்கென்பவே...........................(௰௮)

அழகின்வீக்கஞ் சிறிதிலராயினு, மொழிவினோய்த்திரம் புற்றன
ராயினுங், கிழவுத்தன்மைய ராயினுங்கேள்வனைப், பழுதுசொல்
கலர் பண்பின்முயங்குவார்.......................... (௰௯)

அன்பர்துஞ்சிடிற் றுஞ்சுதலாங்கவர், துன்பமெய்திடிற் றுழு மத்துன்புற, வின்பமுற்றிடி லின்புற்றிருத்தலே, மன்பெருந்தகைங் கற்புடைமாதர்க்கே.......................... (௨௰)

வாள்விழிக்குல மங்கையரன்பர்பொற், றாள்விளக்கிய தண்புனற்கங்கையைக், கேள்வரோகிளர் தேவர்கண்மூவரி, லாளுமெய்ம்மையடிகளென் றெண்ணுவார்.......................... (௨௧)

ஆலயத்தினர் பூப்பினகன்றுறை, மூன்றுநாளு முகமலர்காட்டலர், தோன்றயாதுஞ்சொல்லார்புனறேய்ந்தபின், சான்றகாதலர் தம்முகநோக்குவார்.......................... (௨௨)

புனிதமாநதிப் பூம்புனலாடுநா, ளினியகாதலர் வேற்றிடமெய்திடி, லனையகேள்வரை யன்பின்மனக்கொடு, பனிவிசும்பிற் பரிதியை நோக்குவார்.......................... (௨௩)

வசையில்காதலர் தாய்தந்தைவருதில், யசைதியாடில ரன்பரழைத்திடின், மிசையுநல்லமு தேனும்விடுத்துநர், நசையினோடு பொருக்கென நண்ணுவார்.......................... (௨௪)

தாதைதன்னினுந் தன்னையர்தம்மினு, மாதர்மென்மொழி மைந்தர்கடம்மினுங், கோதில்கற்புடை யார்தங்கொழுநர்பாற், காதல்கூர்ந்து களிமகிழ்வெய்துவார்.......................... (௨௫)

உரவிலம்பியி லோங்குமுலக்கையிற், பரவும்வாயிற் படியின் முறத்தினிற், றிருவகல்றிடு மாலெனச்சேர்ந்திரார், பொருவில்கற்புடைப் புண்ணியமாதரே.......................... (௨௬)

உரியகேள்வருவந்துபணிந்திடா, தரியநோன்பொடு பூசனையாற்றுவார், கரியகூற்றுவன் றூதர்கடிந்திட, வெரியுந்திநரகத்திடை யெய்துவார்.......................... (௨௭)

கடிமணஞ்செயுங் காதலர்தப்பழி, மடமையோடு மொழிபவர் மற்றவ, ருடன்வெகுண்டுரை யாடுநரோரியாய், முடுவலாகப் பிறப்பர் முடிவினே.......................... (௨௮)

கொழுநர்சிதிற் குறுகுமுன்லவைபவ, ருழுவையாகப் பிறப்பருருத்தநேஞ், சமலமாற்றவட் சிறுமறிவிலோர், கழல்கட்கூகைப் பிறப்பிற்சழிவார்.......................... (௨௯)

ஏதிலான்ற னெழில்கண்டுவப்பவர், பேதுசெய்தழல் பேயுருவெய்துவார், காதலல்பசிக்கக்களித்துண்பவர், பாதகஞ்செயும் பன்றியிற்றேன்றுவார்... (௫௰)

மருவுகாதல ராருயிர்மாய்ந்திடி, லெரியின்மூழ்கி யிறந்துபடுவதற், கருநெறித்தல வைக்குநன்மாதர்கள், புரவிநன்மகப் பேறுபொருந்துவார்.. ......(௫௧)

முற்றுச்செந்தழன் மூழ்கியகற்பினோர், புற்றராக்கொடு புள்ளரசேகல்போ, லெற்றுகால படர்க்கலைப்பறித்தினி, துற்றகேள்வரொடும்பரினேகுவார்.............................. ....(௫௨)

கொழுநன்பாவி யெனினுங்கொழுநனே, டழலின்மூழ்கினள் கற்புடையாளெனின், விழியிலன்னவட்காணில்வெங்கூற்றுவ,னுழுவலன்பணைக் கைவிடுத்தோடுமே......... ....(௫௩)

வடபுலத்து வயங்குமருந்ததிக், கடவுட்கற்பினர் காந்திதங்கண்ணுறிற், படர்சிறைக்கனல்வெங்கதிர்பான்மதி, சுடர்மழுங்கிப்பொலிவிலதோன்றுமால்.. ....(௫௪)

நீடுகாதல னோடுயிர்நீத்திடும், வீடில்கற்பினன் மெய்ம்மயிரொன்றினுக், காடகப்பசும் பொன்னிலத்தாயிரங், கோடிகாலங்கொழுநனொடின்புறும்.. (௫௫)

கற்புமேய கனங்குழை மாதனைப், பெற்றுளோர்தம் மரபும் பெருந்தவக், கற்பினுற்கொண்டகாதலனுருயிர்ச், சுற்றம்யாவுந்தூறக்கத்தினெய்துமால்... (௫௬)

பொருவில்கற்பின்வழீஇயபுன்மங்கைப, ருரியமுன்று மரபினுள்ளோரையும், வெருவந்தேங்கி விழுங்கியுமிழ்கிலா, வெரியுந்தீநரகிற்குடியேற்றுவார்... (௫௭)

நண்ணுகற்புடை நங்கையர்சீறடி, மண்ணினெவ்விடந்தோயினுமற்றலீ, தெண்ணுகின்ற தலங்களெவற்றினும், புண்ணியத்தல மென்றுபுகல்வரால்...(௫௮)

கவ்வைவெண்டிரைக்கங்கைமுதலவாந், தெய்வமாநதியாவுஞ்செறிந்ததம், வெவ்வமற்றிடக்கற்பினியைந்திடு, நவ்விநோக்கியராடனயக்குமால்.. .... (௫௯)

மன்னுநன்மணிவேய்ந் துவயங்கிய, வண்ணன்மாடங்களாயினு ங்கற்புடைப், பெண்ணினல்லவ ரில்லெனிற்பேய்க்கண, நண்ணுங் கிற வனமெனநாட்டுவார்.. (சய)

சாற்றும்வெய்ய கனைகதிருங்கடற், றேற்றுதண்ணில வுஞ்சுடர்த் திங்களும், போற்றுகற்பிற் புரிகுழற்பூங்கொடி, மேற்றெடும்பொ மு துள்ளம்வெருவுமால்... (சக)

மேவுகாதலன் வீயப்புனல்பொழி, காவியங்கட் கலன்கழிமாத ரை, யாவிநீத்துக் கிடந்திடும்பாக்கைபோல், யாவருந்தொட நீதெ ளிவியம்புவார்.. (சஉ)

மாற்றருங்கல னீத்தமகளிரா, யாற்றெதிர்ப்படி னேகலசாயலா ர், போற்றிவாழ்த் துதல்பூண்கழிமாதரில், வேற்றுமாதர்சொல் வெ வ்விட மென்பரால்.. (சங)

கைம்மையாகிய கற்புடைமங்கையர், தம்மொழுக்கந் திறம்பிடி ற்றுமலா, லம்மதங்குலத் தோரையுமாரழல், வெம்மைசேர்நாகத்தி டைவீழ்த்துவார்.. (சச)

நிழல்செய்பொற்கல னீத்தமடந்தையர், குழலினைக்குறை யா துமுடித்திடி, லழல்கட்கூற்றுவன் றூதர்மற்றுங்கவர், விழையுங்கே ள்வனைப் பாசத்தில்வீக்குவார்.. (சரு)

மருவுகாதலன் மாய்ந்திடின்மங்கைய, ரொருபகற்பொழு துண் டரும்பாக்கிலை, விரியும்பாயல் வெறுத்துமன் மேற்றுஞ்சி, யரிய நோன்புக ளாற்றிடவேண்டுமால்.. (சசு)

சுடர்செய்பொற்கல னீத்திடுந்தோகையர், கடவுள்பூசனைகாதலி னுத்தியு, முடலமாகண வுள்ளுயிர்நீத்திடா, தடகுழுல மருந்திட வேண்டுமால்.. (சஎ)

எரிசெய்பொற்கல னீத்தவரின்னணம், விரதம்பூண்டு விழுத்தவ மாற்றிடிற், பரவுகின்ற பதிபுலசெய்துப, பொருவிலாவருட்போக நகர்வரால்.. (சஅ)

இன்னவற்றுவியம்பியகற்பிய, லன்னைதின்னிடத் தெய்தினளா தலி, னுன்னைபேத்தி வினையொழிந்தோமென, மன்னுமாதவன் ப ன்னிபைவாழ்த்தினர்..(சகூ)

பொருவில்கற்புடை யாள்பதப்போற்றிய, தெருளுநெஞ்சுடை விண்ணவர்தேசிகன், மூரிதிரைக்கட லுண்டமுனிவனைப், பாவியின் மொழி பற்பலகூறுவான்.............................. (ருய)

குடிலைநீயிவள் கோதறுமாமறை, வடிவினற்றவ நீயிவள் வான்பொறை, யடிகளாதலினின்னுளத்தாயுங்கான், மூடிவுறுதவில்லை மொழியினே.............................. (ருக)

ஐயவானத் தமரர்கள்யாவருஞ், செய்வதொன்றிலராகித்திசைகைப்புற, மையல்விந்தம் வளர்ந்ததுவானுற, வெய்யவல்நடந் தேனை விலக்கியே.............................. (ருஉ)

பொன்னங்குன்றெழுடிகவிவிண்போருய, ரன்னவெற்பின்வலி யையடக்குவார், முன்னமேழ்கட லுண்டமுனிவர, நின்னையன்றி நிகழ்த்திடின் யாவரோ.............................. (ருங)

என்றுதேவர் குரவனிசைத்தலுங், குன்றின்வீக்கங் குறைப்பல மாறநீர், சென்றுநும்பதி சேர்கெனவோதினன், துன்றுவேலைப் பருகியதூயவன்..............................(ருச)

நான்காவது - கற்பிலக்கணங்கூறிய-அத்தியாயம்-முற்றிற்று.

ஆ-விருத்தம் - ௩௫௪.

ஐந்தாவது,

அகஸ்தியர்விந்தத்தையடைந்த வத்தியாயம்.

* கலித்துறை.

விண்ணவர்யாவரு மேகியபின்னர்விரிகொன்றைக்... *
கண்ணியிலைச்சுஞ் செஞ்சடைமுக்கட் களிற்றன்னை *
யெண்ணிமனத்தா லைம்புலனென்னு மிகல்செற்றோ *
னண்ணுமலோபா முத்திரையோடு நவில்கின்றான் *

---

* யாப்பருங்கலம் ஐஞ்சீரடியினடித்தொகை நான்மையோடெஞ்சா தியன்றனவெல்லாங் கலித்துறை.

ருன்றமனேத்தும் வார்சிறைபீர்ந்த குலிசத்தோ, னின்றெருவெற்பை யடக்கும்வலித்திற மில்லான்போல், நின்றுதவத்தைநிரப்பும்வேதியனென்னுமெ, னன்றுகொனம்முறைம வந்தநுகற்பி னலமிக்கோய்.. (௨)

பன்னிருவெய்யவ ரீறுசெய்கூற்றுப் படர்செந்தீ, மன்னியவட்டவசுக்கண்மருத்துவர் வானோர்க, ளுன்னினுமண்ட மனைத்துமிடித்திடு மெல்லார்போ, லென்னுழையெய்தி யிரந்தமையென்னுறிலென்னேயோ.. (௩)

இருநிலமேத்திய காசியில்வாழ்தப் கிடையூறு, வருமெனமாதவரோதியமாற்றம் வழுக்காகும், பொருவறுதேவரு தம்மையிரந்துபுகன்றார்பூங், கருநெறிசேர்தரு டீன்குழலிங்கது கண்டேமால்.

தத்துவம்யாவு முணர்ந்துதனிப்பொரு டானுகிக், கைத்தலமேவிய நெல்லியெனும்படி கண்டோர்கள், சித்தமுவந்துறைகாசியிலீசன் றிருவுள்ள, மித்திறமாக விளைந்திடின்மாற்றுவ தெவ்வாறே.

மெல்லியபங்க னுவந்துறைகாசியைவிட்டேனைத், தொல்லைநெடும்பதி தன்னைவிரும்புதல் சூழுங்கா, னல்லமிர்தந்தன தங்கையிருப்பவு நச்சாமற், புல்லறிவோடு புறங்கையைநக்குதல் போலாமால்.. (௬)

அறத்தினிருப்பிட மாகியகாசி யடைந்தோர்கள், வெறுத்தறிவில்லவர்போல துதன்னைவிடுத்தக்கான், மறுத்துநினைத்திடிலெய்துவதெங்ஙன மாசின்றித், திறப்படமுத்தி விழைந்தவர்விட்டயல் செல்லாரோ.. (௭)

மூவிருப்பிட மாய்முகிலூர்தி முதற்றேவர், மேவருதற்கரி தாயருண்முத்தியின் வீடாயிப், பாவமகற்றுறு காசியில்வாழ்வுபடைத்தோர்கள், யாவரவர்க்கரிதாயவிழுப்பொருள் யாதேயோ...(௮)

வையகமேழு மிடிக்திடுகாலயு மாயாதே, மையநெடுத்தொளிர் சூலநுதிக்கு ளமைந்தோங்கு, மெய்புணர்வோருறை காசியைவிட்டொரு தற்றுன, மெய்தமனத்தை விடுக்குநர்பேதைமை யென்னேயோ.. (௯)

மாசறுபேதைமை தம்மைமறைப்ப மறைந்தானு, வாசையெனுங்கற வெற்றுபவக்கட லாழ்கின்றே, னீசனுவந்துமை யோட

கலாம லிருந்தோங்கு, காசியெனும்புனை யன்றியெவ்வாறு கடப்பாரோ..(௰)

செய்யவழுத்தலை நின்றுதவம்பல செய்தாலு, மெய்தரும்யோகமளப்பிலநாளு மிழைத்தாலு, மையறுகாசியை வார்பிறைசென்னி வனைந்தாடு, மையனருட்சிறி தின்றியடைந்திட லாகாதே... (௰க)

அறம்பொருளில்ப மியற்றுதவத்தி னடைந்தாலுங், கறங்குதிரைக்கட னஞ்சநுகர்ந்தருள் காமாரி, யுறைந்தவளங்கெழு காசியினல்லதை யொன்றாலு, மிறந்துபிறந்துழல் வோர்தனிமுத்தியினெய்தாரோ..... ....(௰உ)

அருமறையாகம மாகியநூல்க ளனைத்தேயும், பொருவறுகாசியை யன்றிவழுத்தல் பொருந்தாவா, விருவினைவிட்டொரு மும்மலமாயை யிகழ்ந்தோர்கள், திருவமர்காசியை விட்டயலோர்பதி செல்லாரோ.............. .... (௰௩)

இடைகலைபிங்கலைவாலைசிறந்துடனிவைகூடு, முடிவறுவாராணசி நடுவுயர்சுழிமுனையென்னு, விடையமறுத்துயர்மெய்த்தவமேவிய காபாலி, யடைவினுணாத்தனனிந்நகருக்கிணையாதேயோ... (௰௪)

இத்தலையெய்தியிறக்குநர்யாருமிளைப்பாற, வுத்தரிகங்கொடுமாதுமைவிசிடவுமையோர்பால், வைத்தவரும்பொருண்மேவருதாரக மறையோதி, முத்தியளித்திடுமிப்பதியார்விடமுயல்வாரோ...(௰௫)

ஆசில்வளங்கெழுமூவுலகத்தினுமாயுங்காற், காசிநகர்க்கிணையாகியநற்பதிகாணேமால, மாசறுதிங்கண்முடித்துயர்மன்றுண்மகிழ்ந்தாடு, மீசனையொப்பவர்தேவகணத்திடையாரோயோ...... (௰௬)

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

என்றருகுறுமுனிநினைந்து காலராசனையருள்கூரியக்கர் கோனைத், தன்றமரார் முற்பிரமன் சம்பிரம னேத்துதண்ட தரனையார்க்குந், துன்றுபவக்கடல்கடத்துந் துண்டிவிநாயகனைவரிச்சுரும்பர்வீழு, மன்றனறு மலர்தூவிச் செய்யபொலந் தாமரைத்தாள் வணங்கியேத்தி................................. ....(௰௭)

ஆசாகேச காசிசிந்தா மணியேயொற்றி சித்திவிநா யகனென்றுய, தேசாரும் விநாயகரோ ரைவரடி பணிந்துவரி சிந்திநீண்ட, வேசாநல் லெழிலுங்கட் கொற்றவைதல் றுணைப்பாத மிறைஞ்சினுஞ்

சீர், பேசாரிற் றமியனையிக் காசியைவிட் டகற்றுவது பெருமைத்
தானே.. ......(௧௮)

தேவருறு பகை தொலைப்பத் ததிசிறாது கென்பளித்தான் றிரு
மால்வேண்ட, வோவருசி றெரும்வலித்தோள் கொடுஞ்சினைய பு
னாசு மூர்த்தியானும், மாவலிமூ வுலகளித்தால் மதுனைகையிடவரு
ளுசிரமும் வழங்கினரால், மேவரிய காசியைவிட் டும்பருறுகுறை
முடித்தல் விழுமிதாமால்.... .... (௧௯)

என்றினைய பலகூறிக் குழவிமதி புனைசடிலத் தெய்மான் காசித்,
தன்றுசரா சரம்பலவுந் தொழுதுவலங் கொண்டகல்வால் சுருங்க
வோங்கு, குன்றினுறு வலிதணிப்பான் குறுமுனிவ னேகுதலுங் கு
ழைந்துடமாழ்கிப், பொய்மினர்தம் முகம்போன்ற பொலிவழிந்த
துயர்விந்தப் பொருப்புமாதோ.. .. .. (௨௦)

ஆற்றலரும் பெருந்தவத்துக் குறுமுனிவன்காசிநக ரகன்றுளா
லப், போற்றுபெருங்கற்புடைய லோபாமுத்திரையினொடுபோத
லோடு, மூற்றிருந்து நறவொழுகுங் கமலநாய கனியங்கா தும்பர்
யார்க்கு, மாற்றரிய வலியுடைத்தா யெழுந்துதிசை யளந்தோங்கு
ம் வரையைக்கண்டான்..... .... (௨௧)

கடலேழு மொருகுடங்கைக் கொண்டகுறு முனிவருதல் காண்
டலோடு, முடக்வேர்வு வரவுள்ளம் பதைபதைப்பத் தலைபணிப்ப
வுயிர்ப்புவிங்கிப், படியூடு புகுதுமெனப் பணிந்துமறைக் கிழவ
ரொழிற்படிவந்தாங்கித், தடமேரு வுடனிகலும் விந்தவரை முனிவ
னடி தாழ்ந்ததன்றே.................................. (௨௨)

தன்றுணைத்தா டொழுதெழுந்த விந்தவரை முகநோக்கித் தவத்
துயிக்கோ, னின்றுமுதல் பொதியவரை நீங்கியா னிவ்வுழிமீட் டெ
ய்துகாறு, முன்றனது பேருருவ மிவ்வண்ண மிருக்கவென வுரை
த்துப்போனான், றென்றலிளங்குழவியொடு தீந்தமிழு மினிதுலவு
ந் தென்பான் மன்னோ................................ (௨௩)

அருந்தவத்தோ னேகுதலும் விந்தமால் வரையுளத்தினச்சநீங்கி
ப், புரிந்துபுரிந் தவனேகும் வழிநோக்கிநோக்கியுடல் புளகம்பூப்
பப், பெருந்தவத்தோன் சபியாம லேகுதலா லின்றலின்றே பிறந்
தோமென்று, வருந்திதனி பணிந்திருப்பப் பரிதிவானவன்மேருவ
லங்கொண்டானால்..... .... (௨௪).

மலர்தலைய வுலகமெல்லாம் பண்டுபோற் றருமநெறி வளர்ந்து
நாளுங், கலனிழந்த மகளிரிளை மூலைபோலவித்தவனா கவின்க டீர்
ந்த, நிலைவறுநற் றவமுனிவ னமலனுறை காசிநக ருள்ளத்தோரா,
வளர்கமலப் பொகுட்டுறையுந் திருமகள்சேர் சினகரத்தை யடை
ந்தான்மன்னோ..................................(உரு)

மூவுலகுமிடரியற்று மடலவுண ருயிரொழிய முனிவுகூர்ந்த, பூ
வையுறழ்திருமேனி யருட்கடவுள் கணமார்பிற் பொலிந்து தோன்
றித், தேவருலகினும்விளங்கு புகழ்க்கொல்லாபுரத்தினிது சேர்ந்து
வைகும், பாவையிருதாடொழுது பழைமறைதேர்குறுமுனிவன்
பழிச்சுகின்றான்........................ .... (உசா)

கொழுநியிசை யளிமுரலுந் தாமரைமென் பொகுட்டிலுறை
கொள்கைபோலு, மழையுறழுந் திருமேனி மணிவண்ண னிதயம
லர் வைகுமானே, முழுதுலகு மினிதீன்றவருட்கொம்பே கரகமல
முகிழ்த்துநாளுந், கழிபெருங்காதலிற்றொழுவோர் வினைதீர வரு
ள்கொழிக்குங் கமலக்கண்ணாய்............................ (உஎ)

கமலைதிரு மறுபார்பன் மனைக்கிழத்தி செழுங்கமலக் கையாய்
செய்ய, விமலைபசுங் குழைகுழைக்கும் வேனிலான்றனையீன்ற விந்
தத்தாய, வமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலு ளவதரித்தோய
ன்பர்நெஞ்சத், திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரோ யெ
னவணக்கஞ் செய்தான்மன்னோ...............................(உஅ)

மடற்கமலநறும்பொகுட்டி லரசிருக்குஞ் செந்துவர்வாய் மயி
லேமற்றுன், கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ண னுலக
மெலாங் காவல்பூண்டான், படைத்தனனுன் முகக்கிழவன் பசுங்கு
ழவி மதிபுனைந்த பரமன்றானுந், துடைத்தனனின் பெருஞ்சீர்த்தி
யெம்மனோ ராலெடுத்துச் சொல்லற்பாற்றோ...............(உகூ)

மல்லனெடும் புவியனைத்தும் பொதுநீக்கித் தனிபுரக்கு மன்னர்
தாமுங், கல்வியினிற் பேரறிவிற் கட்டழகி னிகரில்லாக் காட்சியோ
ரும், வெல்படையிற் பகைதுறந்து வெஞ்சமத்து வாகைபுனை வீ
ரர்தாமு, மல்லிமலர்ப் பொகுட்டுறையு மணியிழைநின் னருளேக்
க மடைந்துளாரோ.......................................(ஙய)

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு மெழின்மேனித்தி
ருவேவேலை, யங்கணுல கிருடுறக்கு மலர்கதிராய் வெண்மதியா ய

மார்க்கூட்டியே, பொங்குழலாயுலகளிக்கும் பூங்கொடியே நெடுங்கா
னிற் பொருப்பின்மண்ணி, லெங்குளோ நீ யவணன்றே மல்லல்வள
ஞ்சிறந்தோங்கி யிருப்பதம்மா.......................... (௫௧)

என்றுதமிழ்க்குறுமுனிவன் பன்னியொடுமிருநிலத்தி லிறைஞ்ச
லோடு, நன்றுணரா ததிமகிழ்ந்தே னான்மறையோ யித்துதியை
நவின்றோர்யாரும், பொன்றலரும் பெரும்போக நுகர்ந்திடுவ ரீங்
கிதனைப் பொறித்தவேடு, மன்றமனை யகத்திருப்பின் வறுமைதருந்
தவ்வையவண் மருவல்செய்யாள்......................... (௫௨)

அந்தணனின் றுயரறிந்தேங் காசிநகரகன்றெவரே யாற்றவல்லா,
ரிந்துவகிர் புனைசடிலத் திறையவனுங் காசிதனைத் தேகியோங்கு,
மந்தரவெற் பினையடைந்து காசிபிரிந் துறைவிரகமம்மர் நோயா
ல், வெந்துயருற் றவண்மேவ விரிஞ்சன்முதல் வானவரை விடுத்தல்
செய்தான்...(௫௩)

கஞ்சமல ரயன்முதலோர் கண்ணுதல்பான் மீளாது காசிமேவி,
யெஞ்சலினல் வளநோக்கி யிருந்தனர்பைத் துளவணியு மெம்மா
னீருழந்த, வஞ்சனையான் முழுமுதலுங் காசிநகர் தனின்விரும்பிம
கிழ்ந்தா னென்று, னெஞ்சுதனிற் காசிதனைப் பிரிந்தேக நினைப்ப
வரோ நெறியிலாதார்...................................... (௫௪)

அருமறையோய் காசிவரு மிருபத்தொன்பானுகத்தி லடைதிநீ
யும், குருபரனைக்கலைமுழுது முணர்த்துசுடர்வடிவேற்கும
ரன்றன்னை, மருவுவையீண் டகன்றேகி னணித்தாகக் கங்கைநதிவள
ங்கொள்காசிப், பொருவருஞ்சீர்த் தலமுழுது மற்றவனே நீயுண
ரப் புகல்வனென்றான்....................................... (௫௫)

உரவுநீர்க்கடலேழுமொருகுடங்கை தனிலேந்தியுண்டமேலோ
ன், விரைகொள்பூந் தாமரையின் மெல்லியலை யடிவணங்கி விளங்
குகற்பின், பொருவில்சீர்ப்பூவையொடுந்திசைமுகனை யருஞ்சிறை
யிற் புகுத்தஞான, முருகவேளினிதுறையும் பதிதேடி யவன்பாத
முன்னிச்சென்றான்.. (௫௬)

ஐந்தாவது அகஸ்தியர் விந்தவனாலய மடைந்த அத்தியாயம்

முற்றிற்று. ஆ௳ விருத்தம் - ௩௯௰.

ஆறுவது,

தீர்த்தமகிமையுரைத்த

அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

அங்கணுலகிருணீக்கி யருந்தவத்தோ னேகுமொரு நெறியினூப்
பன்-டிங்களிளைம் பசுங்குழவிக் கோடுரிஞ்சநறியமுகை சிதைத்து
தண்ணெனல்-கொங்குகமழ் நறுங்கொன்றைத் தேனருவி யலைத்தொ
ழுகு கோடீரத்துக்-கங்கைநதி யுவட்டெடுக்குங் கடவுளுறை திருச்
சைலங் கண்ணுற்றனே.,,............................... (௧)

கலிவிருத்தம்.

பன்னிகேளிப்பருப்பதம்யோசனை - யுன்னிலெண்பத்து நான்
கைன்றோங்கிடு - மன்னுமியாவு மிலிங்கவடிவின - துன்னுவார்தம்
பவங்க டுடைக்குமால்... (௨)

ஆதலாலிவ்வனாவலங்கொண்டலால், போதுதூவிப் பணிகெ
னைப்பொற்றொடி, யீதுநன்னணிற்பிறப்பறு மென்றிடிற், றீதில்காசி
யைச் சிந்திப்பதென்கொலோ.. (௩)

என்றுபன்னி யியம்பவுமுத்திவீ, டொன்றநல்கு பதிபலவுண்
டென, மன்றநற்றவ ரோதினர்மாணிழை, நன்றுகேட்டி யெனற
வின்றனரோ.. (௪)

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அதிர்புனற்பிரயாகை விளங்குமோங்கார மவந்திகாலாஞ்சர ம
யோத்தி, மதுரைகோகன்னம்புட்கரம்பிரபாசம்மகராலயத் துவா
ரகைகாஞ்சீ, வெதிரிகாச்சிரமந் திரியம்பகங்கங்கைவேலையிற்புகுமி
டஞ்சிந்து, நதிசரச்சொதியோ டொல்றிடங்குருக்கே தேதிரமொடு
நயிமிசாரணியம்.. (௫)

விரிபுனற்கங் காத்துவாரை நற்றுறக்கம் வீடருணீடிருச்சைலம்
பிருகுகச்சஞ்சீர்பெற்றுயர் பிருகுதுங்கமென்றில்னனவன்றித், த
ரைபுகழ்தாராதீர்த்தம்வெண்டரங்கச் சத்தகோதாவிரித்தடமென்,
றுரைபெறுகடவுட் டீர்த்தமாநிலத்தி லுண்டெனவோதின ருயர்ந்
தோர்.. (௬)

சத்தியந்தானஞ்சமதமில்சொற்சாற்றுதலொருவழிப்படுதல், புத்தியேமுதலகரணமோர்நான்குமடக்குதல்புலன்கள்போம்வழி யி, னுய்த்திடாதமைத்தல் பொறைதிடஞான முயிர்க்கெலாந்தன் னளிபுரித, லித்திறமனைத்துமானததீர்த்த மெனவெடுத்தியம்பினர் மேலோர்.. (எ)

அறத்துறைபயிலுமானததீர்த்த மாடலராகிநீராடிற், புறத்தழுக் கொழிவதல்லதுபுனித ராகிலர்பூந்திரைசுருட்டுஞ், சிறைப்புனலத னின் முளைமுழுதாழ்பகுவாய்த் தீவிழிச்செறியெயிற் றிடங்கர், சுறக் குலமுதல வளப்பருங்காலந் தோய்ந்ததாற்றுறக்கமுற்றனவோ. அ

கலிவிருத்தம்.

முறுக்குறைவிலாதவர் மொழிபுந்தெய்வநல், னதிப்புனலாடினு நவையுநீங்கலா, மதுக்குடம்பன்முறைவரம்பின்மாநதிப், புதுப்பு னலாடினும் புனிதமெய்துமோ.. (கூ)

கற்றதங்கல்வியுங் கடவுட்பூசையு, நற்றவமியற்றலு நவையிருன மும், மற்றுளவறங்களு மனதின்பாலழுக், கற்றவர்க்கேபய னளிக் குமென்பரால்.. (ய)

பொறிவழிப்புலன்செலா தடக்கிப்புந்தியை, நிறைபரம்பொரு ளிடை நிறுத்திநின்றல், ருறைவிடமல்லதை யுள்ளந்தாங்கொலோ, வெறிபுனற்றீர்த்தமென் றியம்பப்பட்டதே................... (யக)

உளாப்பெருமானத தீர்த்தமோதிடிற், சுருக்கமில்ஞானநீர் தோய்தன்மற்றது, விருப்பொடுவெறுப்பென விளம்பப்பட்ட தோர், கருப்புகுத்திடுமலங் கழுவுமென்பவே.... .... (யஉ)

உடலுறுமவையவர் துத்தமாங்கம்போற், றெடுகேழல்வளாப்பி னுட் டோயுமாற்றினுட், கடவுண்மாநதியுள வவற்றிற்காதலாற், படிகுநாழிவிலாப் பதத்திற்சேர்வரால்..................... (யஙு)

புண்ணியதீர்த்தங்கள் பொருந்தியாடினோர், மண்ணிடைப்பர வைகள் விலங்குமற்றுள, வெண்ணருமியோனிகள் யாவுமெய்தி டார், விண்ணுடைக்கடவுள ராகிமேவுவார்................... (யச)

அறத்திறத்திறப்பிறே ரருளிலாதவர், துறக்கமொன்றில்லெனச் சொல்லும்புன்மையோர், சிறப்புடைப்பயனுறுத் தர்க்கஞ்செய் குநர், பெறற்கருந்தீர்த்தநற் பயன்பெற்றார்களே......... (யரு)

அருளுடன்றீர்த்தங்க ளாடவேண்டினோ, ரொருபகலுணவொழிந் தொழுகுமும்மதக், கரிமுகன்றுளிணைக் கருதிமற்றைநாட், பரிவொடுபாரணம் பண்ணியேகுவார்.........................(யசு)

மன்பெருந்தீர்த்தங்க ளாடிமாநிலம், பொன்பசுமுதலிவை வழங்கிப்பூசுரர்க், கன்பினாலமுதுற வடிசிலூட்டிப்பின், றென்புலத் தவர்கடன் செய்யவேண்டுமால்.........................(யஎ)

ஒருத்தனைத்தன்மனத் துன்னிவான்புனற், றிருத்தகுதீர்த்தங்க ளாடல்செய்திடிற், றருப்பையாலவனுட றன்னையொப்பதோ, ருருப்படவியற்றுநல் லுதகமாட்டுவார்.................(யஅ)

ஆடகமளித்துநீ ராடிவித்தவர், கூடுவரோரிரு நான்குகூறுமற், றூடுநரொருபதி னாறிலொன்றுதாங், கேடில்பேறடைகுவர் கிளக்குங்காலையே.........................(யகூ)

அலைபுனற்றீர்த்தங்க ளடைத்தவற்றைநா, ளுலைவரப்பாகிலையுண் டிநீத்துப்பின், றலைமயிர்குறைத்துநீர்த் தடத்துமூழ்கிடி, னிலைபெறுபாவங்க ளனைத்துநீங்குமால்.........................(உய)

காசிமாயாபுரி யவத்திகாசிமற், றேசைகொளயோத்திவண் டுவ ணாயொப்பறு- மேசிலாமதுரையென் றிசைக்குமேழ்பதி- மாசறு முத்தியை வழங்குமென்பவே.........................(உக)

ஒலிபுனற்பிரயாகைகேதாரமோங்குசீர்- மலிதிருச்சைலமென்றுரைக்குமாண்புடை - நிலைபெறுதலங்களு நினைத்தற்கெய் துறு-வலைவறுமுத்தியை யினிதளிக்குமால்.........................(உஉ)

நெடுநிலவரைப்பினி னிகழ்த்துதானங்கண் - மடிவறுமுத்தியை வழங்குமென்றது- கடலுணீர்க்கங்கைசூழ் காசிமாநக- ரடைவதற் கேதுவாயமைந்தவாற்றினால்.........................(உங)

ஏர்தருதானங்கள் யாவுங்காசிபோன்- மேதகுமுத்தியை விளைத்திடாவெனச்- சீதரன்கணத்தினோர் சிவசன்மாவினுக் - கோதியகதையினை முனிவனோதுவான்.........................(உச)

ஆறுவது - தீர்த்தமகிமையுரைத்த - அத்தியாயமுற்றிற்று.

ஆ-விருத்தம் - உாயச.

ஏழாவது

சத்தபுரியின்சிறப்புரைத்த

அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மல்லல்வளஞ்சிறந்தோங்கு வடமதுரைப்பதிதனிலோர் மறைவ
லாள - னெல்லையினற்றவமாற்றி யினிதீன்றசிவசன்மா வென்போ
ன்மேனாட் - டொல்லைமறைப்பொருளோர்ந்து துகளறு சீர்ப்பல
கலையின் றுறைகள்போகிக்-கல்வியெனும்பெருங்கடலின் கரைகட
ந்துறுதியீட்டிக் களித்தானன்றே.................................. (க)

இயற்றரியபலவினையம் யாவுமுயன்றறநிதிய மெனைத்துமீட்
டி - யுயிர்க்குயிராமழலைமொழிக் கிண்கிணிக்காற்சிறுவர்களை யுவப்
பினின்று - பயிர்ப்புறுமிற்கிழத்தியொடு மளகையர்கோனெனப்
போகம் பலவுந்துய்த்து - வியப்பொடுதன்புதல்வர்பெற வீட்டு
நெறியனைத்தினையும் விழைவினீர்த்தான்.............................. (உ)

மழவிடைபோற்செம்மாந்து மகளிர்வரிவிழிகளிப்ப வாழுநா
ள்போ-யெழிலிளமையுருவகலக் கோலூன்றிநரைதிரைவந் தெய்
தநோய்செய்-கிழவுறலுமறனியற்றுதித்துணைநாள் கழிந்ததெனக்
கேடிநெஞ்சம் - குழைவுறக்கண்பனிதூங்கச்சிவசன்மாவுளத்தினி
டைக் குனிதல்செய்தான்.. (௩)

தாளாண்மை யுடனிதியம் பலவீட்டி விருந்தையினுற் றார்க்கமே
ற்று - வாளாதற் பகலனைத்துங் கழித்தனஞ்செஞ் சடைமௌலிவ
ரதவன்பர்க் - காளாகி யாங்கவரைத் தொழுதிலன்வண் டூதாயலங்க
லண்ணலுருவின் - மாளாதவன்பினொடுங் கொழுமலர்தூஉயவணங்கி
மகிழ்ந்திலேனால்.. (௪)

ஐங்கரனைச்செவ்வேளை யலர்கதிர்வா னவனைவழிந் தமுதங்கானு
ந்-திங்களினைக்கன்னிபுனை செல்விதனைவழிபாடு செய்திலேனீண்-
மங்குறவழ் குடுமிநெடுஞ் சிகரங்கள் டேவுறைய வகுத்திலேன்
யான் - பொங்குபுனற் றடக்கூபங் குளத்தொடேரற் றருமமிவை பு
ரிந்திலேனால்.. (ரு)

அருநெறியினிழல்பரப்பத் தழைகுழைக்கும்பராரைமர மனை
த்திலென்றன்-மருவுயிர்க்கு நறுந்துளவ மொன்றேனு மினிதுவை
த்து வளர்த்திலேனல்-விரைகமழுநறுந்தண்ணீர் வேனில்வாய் வே
ட்டவருக் களித்திலேனுட்-கருதரிய வருமகங்கள் பலவாற்றித் தே
வர்கடன் கழித்திலேனால்.................................... (௬)

அழிபசியால் வருந்தாம லந்தணருக்கின் னமுத மளித்திலேன்
செல்-வழிவருத்தந் தீர்ந்தேக வாங்கவர்க்குக் குடைசெருப்பு வழங்
கிலேன்வண் - டளைபசுந்தோட் டறுகுபறித் தானருந்தக் கொடு
த்திலன்றண் கழனிமைப்போ -னிறைபூதவழுங் கொம்மைமுலைக் க
ன்னியரை மறையவர்கட் கீந்திலேனால்........................ (௭)

முதல்வனுருத்திரசமகம்பவமானநாடோறு மொழிந்திலேன்
வெங்-கதமொழியிலெட்டுவிக்க ழிபெரும்பாவக்கடலைக்கடந்திலேனு
ம்,புடையிருளும்வெள்ளியுமோர்பதின்மூன்றாந்திதியுடனே பொ
ருந்து செங்கேழ்க் - கதிரவன்வார் முகமொழிந்த நாளரசைவலங்
கொண்டு களித்திலேனால்.. (௮)

தகரமதியாலவட்டம் பாகிலைநல்விரைகமழுந் தண்ணீர்ப்பந்தல்-
துகடீர்ந்தபுனனிறைக்கு மணிக்கும்பங்களையினதடுலங்குசோதி-ய
கலாத சுடர்முதல தானமுழுது மறையோருக் களித்திலேனு - லிக
லோடுங்காலபடர்கொடும்பாசத்திறுக்கிலினி யென்செய்கேனே()

ஆய்ந்தமுதுமறையவர்க்குமதிதியர்க்கும்பூசைபுரிந்தறிகிலேனு
லேய்ந்தவிருவினை தொடருமல்லாம னமதேயெனவிருந்தவில்லு
ம் வாய்ந்தமனைக்கிழத்தியரும்புதல்வருமிவ் வுடலுமுடன்வருவது
ண்டோ-வீய்ந்துகொடுநரகமுழந்திரல்கூரவாய்மறுமையினு மெலி
குவேனே.. (௰)

என்றினைய பலகூறி நிலையில்லா யாக்கையினி யிருக்குங்காறுங் -
குன்றினும்வார் திரைசுருட்டு கடலாடைப் புவியிடத்துங் கோதிறீ
ர்த்தஞ்-சென்றுகொடுந் துயரகல வாடுவலென் றுளத்தினிடைசிந்
தைசெய்தான் - மன்றவருந் தவமாற்றும் வடமதுரைப் பதிவாழு
மறைவல்லோனே.. (௰௧)

தெள்ளுமுது மறைக்கிழவன் சத்தபுரியிடத்தினியாஞ்சேறுமெ
ன்று - வெள்ளியநல் லோரைதனிலைங்கரன் பொற்றாமரைத்தா
ளுவந்துபோற்றி - முள்ளரைய செழுங்கமல முகையுடைத்து வ

ழிநேறன் முருகுநாறு-மள்ளலஞ்சேற் றகல்வயல்சூ ழயோத்திமா
நகரிதனி லடைந்தானன்றே.............................. (௰௨)

சரையுநதிப் புனல்படிந்து தென்புலத்தோர் கடன்கழித்துத் த
மல்செய்வேள்வி - யருமறையோ ரினிதுவப்ப வமுதுறமு மின்ன
டிசி லமையவூட்டிப் - பரிவினொடு மந்நகரிற் பஞ்சராத் திரியுறை
ந்து பவளஞ்சிந்தி - விரிகதிர்வெண் மணிகொழிக்கும் வீங்குபுனற்
பிரயாகைதனின் மேவினனே................................(௰௩)

உடைதிரைநீர்ப் பிரளயத்து மார்க்கண்டன்முதன்முனிவ ருறை
வதாய-வடதருவைப் புனிற்றுமதி யலைபுரட்டுங் கங்கையொடு வனை
ந்தவேணிக் - கடவுளைவெண் மதிகொழிக்கும் பாலாழி துறந்துசெ
ழுங் கமலையோடு -மடியர்துய ரகற்றுவலென் றினிதடைந்த மாத
வனை யாங்குக்கண்டான்............................ ....(௰௪)

பெறலரிய தருமத்தின் பேறெல்லாம் விரிதெண்ணீர்ப் பிரயா
கையாற்று-ளறவிலொரு நுண்மணற்கு நிகர்தூங்கா கொடும்பாவ
மினைத்துமன்ன-துறுபெயர்கேட் பினினடுங்கு மாடுநரு மான்றுவ
தின் றுயிர்விட்டோருங் - குறைவில்பர கதியடைந்து வீற்றிருப்ப
ரெனமறைகள் கூறக்கேட்டான்............... .... (௰௫)

செங்கதிர்ச்செல் வனுமாதி கேசவனுங் கண்களாய்த்தெய்வநன்
னீர்ப்-பொங்குதிரை மணிகொழிக்கும் வானையசிகைக்ளாய்ப்புன
லிற் றோய்ந்தோர் - வெங்கொடும்பா தகந்துலைத்து வீடுதருந் திரு
வேணி வேணியாய-கங்கைவிரி புனலாடைக் காசியணங் கினைநோ
க்கிக் களித்தானன்றே....................................(௰௬)

மதிதவழு முயர்பொலங்கோட் டிமையநெடு வரைமுதல வரை
களியாவுந் - ததைமலர்ப்பைந் தருமுதல தருக்களுமெண் ணறும்
புவனந் தனிலுள்ளோரும் - விதிமுறையி னுங்கடைந்து புகழ்மாக
த் திங்கடனில் விளங்கும் வெய்யோன் - கதிர்மணித்திண்டேர்கடவு
ட் புலரியின்வாய்ப் புனலாடக் கண்ணிற்கண்டான்............(௰௭)

கண்டுகளி மகிழ்தூங்கி யாங்கதனின் வளமனைத்துங் கருத்தினே
ர்ந்து-மண்டுபுனற் பிரயாகை தனிலோர்திங்க ளுறைந்ததற்பின் வ
ளங்கொள்கங்கை-தண்டுறைசூழ் காசிநகர் புகுமளவின் மலர்தூவி
த் தாழ்ந்துதாழாத்-திண்டிறல்வெங்கரிமுகத்தோ னிலங்குபொலந்
தாமரைத்தாள் சென்னிசேர்த்தி.............................(௰௮)

கடவுண்மணிகன்னிகையின்புனல்படிந்துதிரைபுரட்டுங் கங்கை
யாடி, யடைவிலரு முனிவர்கடன் றென்புலத்தோர் கடனாற்றி
யோனாந்தாய, விடயமறுத்திடுமறையோனைம்பெருந்தீர்த்தமு
மூழ்கிவிரிந்தகொன்றைத், தொடைபுனையுமகிலேசன்றாள்வணங்
கியந்நகராத்துதித்தல்செய்தான்............ ....(௧௯)

தூயசெழுங்கங்கையலை சுழித்தெறியும்புனலிலொருதுளியுண்
டோருந், தாய்முலைப்பான்மீட்டருந்தாத்தன்மையாலாங்குடல
ந் தனைவிட்டோர்க்கு, வேயனையதோளிபங்கன்றாரகத்தை வலச்
செவியில்விளம்பறன்றாற், சேயுயர்விண்ணவருலகோகாசிநகர்க்
கிணையாகச்செப்பும்வாறே....................................(௨௰)

முத்தியளித்திடுநகரிந்நகரொனவேயறிந்துமூதுக்குறைவிலாரிச்,
சத்தபுரியிடத்தினும்போய் வருதமெனுஞ் சங்கற்பந்தவிரு
மென்றுப், பித்தரிற்றீவினைகள்பிடர்பிடித்துந்தப்புறம்போகிப்
பிறைசேர்வேணி, யத்தனினிதுவந்துறையுமல்லல்வளஞ்சிறந்
தோங்கு மவந்திசேர்ந்தான்....................................(௨௧)

ஆதியுகமொழிந்துவருமூன்றுகத்துமகாகாளமவந்திமற்றை,
யோதுவளஞ்சிறந்தோங்குமுச்சினியெனுநகரினுடன்றுகூற்றை
க்காதியிடுமாடகேசுரர்தாரகேசுரர்மாகாளரொன்னச், சேர்தவட
தருவினிழலினிதுறையும்பரமனடிதொழுதுபோனான்...(௨௨)

காதலிற்சென்றிறந்தோர்க்குச் சாரூபஞ்சிவனளிக்குங் காஞ்
சிக்கேகி, யாதரத்தினேழ்பகலாண்டிருந்திறந்தோ ரொன்பனைத்
உற்றஞான்றுயர் சிவநிசிபாதலினுவந்து, கற்றைவார்சடைக் கடவுளையருச்சனைபுரியு, மற்றோர்வேதியன் பின்றொடர்ந்தால யமருவி, யற்றநோக்கினனேற்றுமின்னமிழ்தெடுத்தயில்வான்( )

முருந்துவாணகைபங்கனையருமறைமுதல்வன், புரிந்துபூசனை கண்டுயில்பொருந்திலனாகி, வருந்திநோக்குபுவைகறையாமத்தி னளவு, மிருந்துமற்றவன்றுயில்வதுகண்டனனெழுந்தான் (௩௩)

ஆண்டெழுந்துபோயீசன்முன்னமிழ்தினையெடுப்பக், காண் டல்செய்திலன்மழுங்கியகனைசுடர்விளக்கைத், தூண்டல்செய்து வெண்சோற்றினையெடுத்தனன்விளாவின், மீண்டுபோழ்திலோ ர்வேதியன்காலிடைமிதித்தான் ... ... (௩௪)

மிதித்தபோதிலவ்வேதியன் றன்னைவிழித்து, மதித்திடா திவன் வந்திடுகள்வன்யாரென்னக், கொதித்தநெஞ்சினன் கூக் குரலெழுப்பலுங்காப்போ, ரதிர்த்துவந்துகைப் படுத்துமற்ற வன்றலையறுத்தார் ... ...(௩௫)

ஆக்கைநீத்திடுசிறுவனையந்தகன்றூதர், வீக்கியேகலும் விடுமி ன்கள் விடுமின்களென்றுதீ, திக்கனன்றுமிழ் மூவிலைச்சூலவே ற்றிரித்துக், காக்குமாறெழு கண்ணுதற் கணங்கள்வந்தடைந் தார் ... ... ன (௩௬)

நுதல்கிழித்தொளிர்விழியினன் கணங்களைநோக்கிப், பதம்வ
ழுத்திவெங்கூற்றுவன்றூதுவர்பகர்வார், முதுகுலத்தொழுக்கெ
ன்றுதாய்மொழிவதுமுனிந்து, மதிமருட்டுவெஞ்சூதினைவைகலு
மிழைத்தோன் ... ... (௩௭)

பஞ்சின்மெல்லடிப்பாவைதன்மனைவயிற்பதைப்ப,வஞ்செஞ்
சிறடிக்கூத்தியரணிமுலைதோய்ந்த, வஞ்சனெந்தைநின்மாலியங்
கவர்ந்தனனிவன்மற், றுஞ்சுபோவதற்கிழைத்ததெத்தவமெனவு
ரைத்தார் ... ... (௩௮)

ஈதுகேட்டலுஞ்சிவநிசிதனிற்றுயிலின்றி, மாதுபாகனையன்
பொடுவழிபடக்கண்டான், சோதியுஞ்சுடரொளியுறத் தூண்டி
னனவற்றாற், றீதொழிந்தனன் கலிங்கநாட் டிறைவனாய்ச்சேர்
வான் ... ... (௩௯)

என்றுகூறியசிவகணநாதரை யிறைஞ்சிக்,கன்றுவெஞ்சினக்கூ
ற்றுவன்றூதுவர்கயிற்றி, னென்றவிழ்க்கியசிறுவனையொல்லையின்
விடுத்துத், தென்றிசைக்கிறைநகர்வயிற்சென்றடைந்தனரால் ()

நீர்க்குடக்கனிசுமந்துநீண்முடம்படுதெங்கின், கார்க்குலந்து
யில்கழனிசூழ்கலிங்கநாடளிக்கு, மார்க்கும்வண்கழலருந்தமன்
புதல்வனாகென்னப்,போர்க்கணிச்சியோனடியராங்குரைத்தனர்
போனார் ... ... (௪௧)

ஈசனன்பர்களருளினாற் குணநிதியென்பான், காசுகண்படுபு
ரிசைசூழ்கலிங்கர்கோன்மகவாய், மாசிலாதநல்லோனாயின்மகி
ழ்வுறத்தமனென், றோசைபோகிய பெயரொடு முதித்தன ன
ன்றே ... ... (௪௨)

முற்பவத்துறுதொடர்ச்சியின் முதுக்குறைவெய்திச், சிற்பர
ன்றிருவாலயமெங்கணுந்தீப, மற்பினாலமைத் தளப்பருமறம்பு
ரிந்தீசன். பொற்பதத்தினில்வைகலும்பூசனைபுரிந்தான் ...(௪௩)

இன்னநல்லறம் பற்பலநாளிருந்தியற்றிப், பின்னர்மாய்தலு
ம் பிஞ்ஞகனாலயந்தோறு, மின்னுசெஞ்சுட ரேற்றலாற்சுடர்
மணிவிளக்க, மன்னுகோநகரளகைக்குமன்னவனானான் ...(௪௪)

அளகைமாநக ரீங்கிவன்முன்னினி தாண்ட, வொளிறுவேலர
செவனெனமறையவனுரைப்பக், களிறுகூப்பிடக் கருணைசெய்
கடவுளைப்பரவும், வெளிறெறிந்தநற்கேள்வியோ ரிவைவிளம்பு
வரால் ... ... (௪௫)

விதியளித்திடப்புலத்தியனுதவுவிச்சிரவா, மதலையாகியவச்சிர வணனரல்மலர்த்தா, டுதிசெய்தாங்கவனருளினுற் சுடர்மணியள கைப், பதிபுரந்தனன் பதுமகற்பத்தினிற்பரிவால்.........(சு௬)

கற்பமாங்கதுகழிந்தபின் கமலவீட்டுறைவோ,னற்பினுறுயர் சராசரமனைத்தையுமளிப்பப், பொற்செழுந்தருநீழல்வாழ்புரந் தரன்முதலோ, ருற்பவித்தனுமீங்கிவன் குபேரனுயுறைத்தான்.

முன்னமாலயத் தொண்சுடர் தூண்டலான்முறையே, யின்ன தன்மையுமளகையும் பெற்றனமென்னுப், பொன்னந்தாதுகு கொன்றையான்காசியம்புரியின், மன்னியாங்கொருசிவலிங்க ம திந்வோடமைத்தான் ... ...(சஅ)

மாசில்சித்தமாந்தகளியி னன்புநெய்வாக்கி, யீசனன்றிவேறி ல்லெனுந்திட்பநுண்டிரியிற், றேசுடைத்தனி ஞானவொண்செ ழுஞ்சுடரேற்றி, யாசில்கொள்கையோன் பற்பகல்யோகினில டைந்தான் ... ... (சகூ)

அன்னகாலயினுங்கவன்றவத்தினைவியந்து,முன்னமூவெயின் முருக்கியமுக்கணெம்பெருமான், பொன்னவாஞ்சுணங் கரும் பியபுணர்முலையுமையா, டன்னெடுஞ்சுடர்ப்பிழம்பென வவ்வு ழிச்சார்ந்தான் ... ... (ருய)

அளகைகாவலவாற்றியவருந்தவமகிழ்ந்தே, முளம்விழைந்தன வுளாத்தியாமுதவுவமென்னுக்,களைகணுகியகருமிடற்றெந்தையா ங்குளப்பத், துளிகண்போர்த்திடநோக்கரிதாயிவை சொல் வான்... ... ... (ருக)

மாசிலாதவரளப்பில செழுந்தெனவயங்குந், தேசுபூத்தநின் செழுமலர்ச் சேவடிகாணக்,கூசுகின்றனகண்ணிணை கூசிடாவ ண்ண, மீசநல்குதியன்னதே வரமெனக்கென்றான்... ...(ருஉ)

காக்குமாயனுங் கடிமலர்க்கமலநாயகனும், வாக்கினுயர்மன த்தினற்காணுவடிவ, நோக்குமாறருள் புரிதலுநோக்கிய ப்பரனை, நீக்கமன்றிவாழன்னையைப்பார்த்திதுநினைவான் (ருங)

முன்னவன்றிருமேனியினுறைந்திடமுயன்ற, தென்னதற்றவ மெல்லிதுமிவளெனநோனு, தன்னிநோக்கலுமொருவிழி ம

றைந்திடவிவல்யார், தன்னுவஞ்சகனெனவுமை யரனெடுஞ்
சொன்னுள் ... ... (ருச)

மாதுநில்றவப்பெருமையை மதித்தனனல்லா, தியாதுசொ
ற்றனன்முனியலையிவன் விழியருள்கென், றுநிநாயகனறைதனு
மம்பலத்தமர்ந்த, போதரிக்கணளித்தலும் பொற்கணனரு
வே... ... ...(ருரு)

இழந்ததன்விழிபெறுதலு மியக்கர்தம்பெருமான், குழைந்த
வெண்பிறைக்கண்ணியன்குரைகழல்வணங்கித், தழைந்தவன்பிரு
ற்பனையிருதாமரைசரணம், விழைந்துபோற்றிநல்லுவகை மீ
தூர்ந்தெழத்தொழுதான் ... ... (ருசு)

தொழுதவேந்தனைத் துணைமலர்க் கைகளாற்றைவந், தெழுக
வின்றுதொட் டென்னுயிர்த் தோழநீயென்னுப், பழுதினல்வ
ரமருளிநீபரவியவிலிங்கம், விழையுநின்னுடைப்பெயரினுல் வி
ளங்குகவென்றுன் ... ... (ருஎ)

இயக்கர்விஞ்சையர் குய்யகர்கிந்நரரிறைஞ்சி,வியக்கநீணி
திக்குபேரனும் பெயரொடுமேவிப், பயக்குநல்வளத்தளகையி
ற்பரிவின்வாழ்கென்ன, முயற்களங்கமின்மதிமுகத்துமையிவை
மொழிந்தாள் ... ... (ருஅ)

வரமளித்தபின்வரிமிடற் றஞ்சிறையறுகா, லரவவண்டிமிர்
கொன்றை யஞ்சடைமுடியண்ண, லிருவமேகலைபுமையொடும
றைதலுங்குபேரன், பரிவின்வாழுமிவ்வளகைபீதெனப்பகர்ந்த
னரால் ... ... (ருகூ)

யரு-வது-வாயுவுலகமுங்குபேரனுலகமுங்கண்ட

அத்தியாயம்-முற்றும்.

ஆ அத்தியாயம்-யரு-க்கு-விருத்தம்-ருஙஎ

பதினான்காவது

சிவசன்மா

ஈசானனுலகமுஞ் சந்திரனுலகமுங்கண்ட

அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

உலாத்தவிந்நகரிலீழ்பா னுலப்பறுசெல்வத்தோங்கித், தி
ருத்தகத்தோன்றுகின்ற வுலகெதுசெப்புகென்ன,வருத்தியின்ம
றையோன்கூற வாய்பிழிமலர்மென்கூந்தல்,முருக்கிதழ்க்கமலை
கேள்வனடியவர்மொழியலுற்றார் ... ... (௧)

ஈண்டுமுன்றோன்றுகின்ற நீசானலோகமீங்கு, மாண்டநற்ற
வத்தின்மிக்கோர் மழுவலான்றனிலன்பு, பூண்டுளோர் பயன்
வெஃகாது பொங்கழல்வேள்விசெய்வோர், காண்டகுசிறப்பி
ன்மிக்ககண்ணுதலுருவிற்சேர்வார் ... ...(௨)

பகருமிவ்வுலகங்காக்கு மவர்பதி னொருவரன்னோர், வகிர்மதி
க்கண்ணியெந்தை மருவியகாசிநண்ணி, நிகரிலீசானலிங்கநெறி
யினிலமைத்துப்போற்றிப், புகரினற் றவங்களாற்றிப் பூசனைபு
ரிந்தாரன்றே ... ... (௩)

பூசனைமகிழ்ந்துதன்னை புனிற்றிளந்திங்கட்கண்ணி,யீசன
ல்லருளாலன்னோர்க் கீறிலாவாயுளோடு, தேசுறு பரிதிநாணச்
செழுஞ்சுடர்ப்பிழம்பாயோங்கு,மாசறுதனதுதொல்லை மாணு
ருநல்கினனே ... ... (௪)

ஆறணிசடையுநீலகண்டமு மிலங்குசோதி,நீறணிமெய்யுஞ்செ
ய்ய நெற்றியிற்கண்ணுந்தோன்ற, மாறடுமழுவுமானுந்தரித்து
வண்கடுக்கைசூடி, யேறுயர்த்தீசனென்ன விங்கினிதிருக்கின்
றானே ... ... (௫)

எனவருக்கணங்கள்கூறக் கேட்டனனேகுங்காலைப், பணியிரு
விசும்பினூடேகவிடைநிலவுகாணுந்,தனிநகர்கண்டுமற்றிந்நகரெ
துசொற்றிகென்னப், புனைதுழாய்ப்படலைமார்பனடியவர் புகல
லுற்றார் ... ... (௬)

மலரயன்மனத்திற்றோன்று மத்திரிவரம்பில்கால, முலகிடை
த்தவஞ்செய்காலைத் தானுமேலோங்கியங்கட், புலன்வழியொழு
கிப்பத்துத் திசையினும்போர்ப்பத்திக்கா, மலர்முலைமாதர்தா
ங்கலாற்றலர்மண்ணின்வீழ்ந்தார் ... ...(௭)

சித்தியதிவலைபைங்கூழாயினதிரண்டுவீழ்ந்த, துந்துநீருலக
முய்யவிமானமேனுலகம்பூத்த,வந்தணன்றவத்தானென்னவாரு
யிர்பெற்றுமுக்க,ணெந்தைவாழ்காசிமேவியிலிங்கமொன்றமை
த்ததன்றே ... ...(௮)

பரமனைவணங்கிநூறுபதுமநற்றவஞ்செய்காலை, யருள்கனிந்
திறைவன்றோன்றி யந்தணரவனிபைங்கூழ்,விரியுநீரவற்றுக்கெல்
லாம் வேந்தனாயுறைதியென்ன, வொருகலைவாங்கிக்கங்கை யொ
ழுகுவார்சடையில்வேய்ந்தார் ... ... (௯)

ஒண்ணிறவுரோணிதன்னோ டுவந்தினிதிருப்பமற்றைப், பெ
ண்ணலங்கனிந்தமாதர் தந்தையோடதனைப்பேசத், தண்ணளியி
லாததக்கன் சபித்தலாற்பக்கந்தோறும், விண்ணிடைத் தேய்த
லோடும்வளர்தலுமேவினானே ... ...(௰)

போற்றிமூவுலகுங்காக்கும்புரவலனாகிப்பின்ன,ராற்றருமிரா
சசூயமாற்றியவுலகமெல்லாஞ், சாற்றுநான் மறையோர்க்கீந்து
னைதயலோர்பாகத்தெந்தை, மாற்றருமருளாற்சோம னெனும்
பெயர்மருவினானே ... ... (௰௧)

முறையினிற்சந்திரோசன் முன்னர்நல்வேள்விசெய்து,நிறைத
வம்புரிந்தபேற்றால் நிரையிதழ்முகைவாய்விண்ட, செறிமலர்க்
கொன்றைவேணிச் சிகாமணியாயதன்றிக், கறைமிடற்றரவப்பூ
ண்ட கண்ணுதற்கண்ணுமானான் ... ...(௰௨)

பரிதிவெங்கதிரால்வாடும் பற்பலவுயிருமுன்றன், விரிகதிர்
க்கற்றைதோயின்மெய்குளிர்ப்புறுகயாமும், பொருவில்பூர
ணையினின்பேர் புனைந்தவிலிங்கந்தன்னின், மருவுது மிமயனீன்
றமயிலியன்மடந்தையோடும் ... ... (௰௫)

மதியுறுமுவாவிற்றிங்கள் வாரம்வந்திசையின்முன்னாள்,விதியி
னிலுண்டிநீத்து விழிதுயிலாதுகாலைக், கதிர்மதிக்கூபமூழ்கியி
றந்தவோர்கடன்களாற்றி, னதிர்புனற்கரையிற்பிண்ட மிட்ட
பேறுடைவரன்றே ... ... (௰௪)

சித்திரைத்திங்கடன்னின் முழுமதிசேருங்காலை, யித்தலையெய்தி யித்தவிலிங்கத்தைவழிபட்டோர்கள், முத்தியிலடைவர் சித்தி யோகபீடத்தின்முன்னாட், பத்தியின் வழிப்பட்டுய்ந்தோர்பலரு ளராவரன்றே ... ... (௧௫)

அட்டமிதோறுமிந்தப் பீடத்தினருச்சித்தோர்க்கு, மட்டவிழ் கூந்தற்சத்திவரமினிதளிக்குமென்னாக், கட்டழலதனால்வென்றி வார்சிலைக்காமற்காய்ந்த, விட்டொளிர்திங்கள்வேணிவிமலனுமம ைந்துபோனான் ... ... ௧௬)

அன்றுதொட்டுலகமெல்லாங் குளிர்ப்புறவகல்வான்போர்த்த தன்றிருட்பிழம்புசிக்குஞ் சோமன்வாழுலகமீதா, மென்றுபூந் தளவேனன்பரிசைப்பவேவருதலும்பன்மீ, னொன்றியவுலகநோ க்கியாதெனவுசாக்கலுற்றார் ... ... (௧௭)

௧௪ வது-ஈசானனுலகமும்-சந்திரனுலகமுங்கண்ட

அத்தியாயம்-முற்றும்.

ஆக-அத்தியாயம்-௧௪-இ-விருத்தம்-௫௫.

பதினைந்தாவது

சிவசன்மா

தாரகையுலகமும் புதனுலகமுங்கண்ட

அத்தியாயம்.

*கலிவிருத்தம்.

நறுமலர்க்கமலவீட்டுறையுநான்முகன், மறுகழற்காற்பெரு விரலிற்றோன்றிய, செறிதவக்கிழவனுந்தக்கன்சீர்பெற, வறுபது மகவினையருளினனரோ ... ... (௧)

அங்கவர்தம்மின்மூவொன்பதந்நலார், திங்களுக்காசியின் வர க்ஷேத்திரத்தின், பாங்கரினிலிங்கமொன் றமைத்துப் பண்புடன் றுங்கருமலிவிற்றவமியற்றினார் ... ...(௨)

* பாட்டருங்கலம் "அளவடிநான்கின கலிவிருத்தம்மே;

அகில்வயிறுர்ந்துமிழம்மெலோதியர், திகழ்புருடாயுதமென்
றுஞ்செய்தவந்,தகவுடனுற்றலுமகிழ்ந்துதாழ்சடை, வகிர்மதிக்
கண்ணியான்வந்துதோன்றினான் ... ...(௩)

செய்தவமகிழ்ந்தனம்விழைதல்செப்புமின்,றையலீரொன்றனு
ந்தலைவநின்னிகர், மையறுகொழுநனை வழங்குவாயென,வையனு
ம்பெரிதுவந்தருளன்மேயினான் ... ... (௪)

கொலைபழுத்தொழுகிய வேற்கட்கோதைமீர், மலர்தலையுலகி
னிலிருளைமாற்றுதண்,கலைமதிக்கடவுளுங்கணவனாமென,வலர்மு
லைப்பாகனுங்கருளினானரோ ... ... (௫)

உயர்புருடாயுதமென்றுமொண்டவ, மயர்வறவாற்றலிற் புரு
டமாட்சிமை,யியல்புறவேண்டுழியடைதிரொண்ணிலாச், செயிர
றுமுடிக்களிற்சிறந்துவைகுவீர் ... ... (௬)

ஆர்வமுற்றமைத்தவிவ்விலிங்கமன்னலீர், தாரகைப்பெயரதா
ய்த்தயங்கியோங்குக, வீர்மதிப்பதத்தின்மீதிருத்திர்நீரெனா,வார்
சடையந்தணன்மறைந்துபோயினான் ... ... (௭)

மதர்விழிமங்கையர்திங்கள்வானவன்,பதியெனப்பயிலுறு பத
மற்றீதெனுங்,கதையினைக்கேட்டனனேகுங்காலையிற். புதனுயரு
லகினைப் பொருந்தநோக்கினான் ... ... (௮)

பொற்றருவிழுதுவிட்டனையபூஞ்சடை, நற்றவன்கணங்களைந
யந்துநோக்குறு,'சிற்பநூல்கிடந்தவித்தெய்வமாநக,'ரற்புதமொ
ழிகெனவறைதன்மேயினார் ... ... (௯)

கண்வழுக்குறுசுடர்காலுமோர்கலை, யண்ணறன் சடைமிசை
யமைத்தவாற்றினா,னெண்ணுமேழுலகமுமேத்தலான்மதி, விண்ண
வற்குள்ளமும்வேறுபட்டதே ... ... (௰)

மருவுகாதலின்மதிக்கடவுள்வானவன், வெருவினர்விலக்கவுங்
குரவன்மேவிய, குருகுவாய்மடுத்தளிமூசுபூங்குழற், றெரிவை
யைவலிதினிற்சேர்ந்திட்டானரோ ... ...(௰௧)

பானிலாக்கடவுளுங்குருவின்பன்னியை,மானமற்றின்புறமண
ந்ததன்மையாற், கூன்முதுகிளைம்பிறைமுடித்தகோனன்றி, வே
னில்வேள்பகழியார்விலக்கவல்லரோ ... ... (௰௨)

வெய்யகூற்றுருத்தெறிவேல்விலக்கினு, மெய்துமூழ்வினைத்தொ
டரொண்ணிமாற்றிலுந்,தையலார்முழுமதிமுகத்திற்றங்கிய,மைய
கட்காலவேன்மாற்றலாகுமோ ... ... (௰௩)

அரும்பெறற்செல்வம்வந்தடைந்தகாலையிற், றிருந்தியநல்லற
ஞ்செய்தநாடொறும், விரிந்தநற்புகழினை விளைத்தல்வீசுசால்,
புரந்தரற்காயினும்புரியலாகுமோ ... ... (கச)

தனித்தனிமுச்சுடரியற்றித்தங்கிய, வனைத்துலகிருளையுமகற்று
நான்முக,னினைப்பருஞ்செல்வம்வந்தெய்தினீடிய, மநச்செருக்
கெனுமிருளகற்றவல்லனோ ... ... (யரு)

ஏர்பெறுமிருநிதிச்செருக்குமெய்திடிற், றேர்செவியுடையரு
ஞ்செவிடராகுவ, ரோர்தருமுணாவலோருமராகுவர், கூர்விழியு
டையருங்குருடராகுவார் ... ...(யசு)

ஈர்மதிப்புக்கவனிளைநிலாநகைத், தாரையைவிடுக்கலன்றருக்கி
வைகலாற், கார்முகங்குழைத்துவின்காக்கும்வானவர், போர்மு
கத்தழன்றுளம்புழுங்கியெய்தினர் ... ... (யஎ)

விண்ணவர்சோமனைவெகுண்டுளாரென, வெண்ணுருவன்பமொ
த்தவமிமைப்பினுந்,தண்ணளிபுரிந்தினிதளிக்குந்தாழ்சடைக், க
ண்ணுதல்பிநாகவிற்கைக்கொண்டெய்தினன் ... (யஅ)

எய்தினரமருமமரினேற்றெதிர், மையுறழ்கண்டனும் வரிவி
ல்வாங்கினு,னய்புமேயுலகுபோமொழிப்பல்யானெனச், செய்ய
தாமலாமலர்ச்செல்வனெய்தினன் ... ... (யகூ)

புல்லறிவுடையவிப்புலவரோதிகர், வில்லொடும்போந்ததேக
ணைவிடுத்திடி,லல்லலுற்றுலகெலாமழியுமின்றென, வல்லியோர்
பாகனைவணங்கிக்கூறுவான் ... ... (உய)

எந்தைமற்றிமையவர்குரவன்பன்னியை, மைந்தினிற்கவர்ந்
தனன்மதியென்றோதலும், வெந்திறற்கணிச்சியோன்விடுதிநீயெ
னச், சந்திரன்விடுத்தனன்றாரைதன்னையே ... ...(உக)

நன்னியபன்னிதன்கருப்பநான்மறை, யன்னறன்முனிவினு
ல்வீழ்ப்பவாங்கது,மண்ணிடைவீழ்தலும்வானிறேங்கிய,விண்
ணவொளிகெடவிளங்குகின்றதே ... ... (உஉ)

மங்கையிக்கருவினையுயிர்த்தன்மாசறு,மெங்குலக்குரவற்கோ
வுவரியேமுடை, யங்கண்மாநிலத்திருள்பருகுமாய்கதிர்த், திங்க
ளுக்கோவெனத் தேவர்கூறினர் ... ... (உரு)

பூங்கமழ்ந்தேங்கியபொம்மல்வெம்முலை,நாண்சுமந்தோங்கி
மெய்ந்நகைக்கமெய்ப்புறச், சேண்பயிலமரரா முனிவுசெய்தலும்
பாண்சுரும்பிமிர்மலர்ப்பாமன்கூறுவான் ... (உச)

வெறிமதுக்கலுழியஞ்சேற்றின்மென்சிறை, யறுபதம்வழுக்கி
வீழ்ந்தரற்றும்பூங்குழ, லுறுசினத்தணிதிமற்றெவர்க் குயிர்த்த
னை, செறிகதிருமிழுமிச்சிறுவன்றன்னையே ... (௨௫]

தேர்ந்திலன்யாதுநீசெப்புகென்றலுங், காந்தண்மென்முகிழ்
விரல்கூப்பிக்கண்கவ,ரேந்திழையிருட்குறும்பெறியுந்தண்சுடர்
வேந்தனுக்கீன்றனனெனவிளம்பினாள் ... ...(௨௬)

பைந்தொடிநல்லுரைகேட்டுப்பாற்கதிர்ச், சந்திரன்கரங்களா
ற்றழுவியன்புடன்,மைந்தனையுச்சிமோந்துளமகிழ்ச்சிகூர்,புந்தி
யினாமமும்புதனென்றோதினான் .. ..[௨௭)

அன்னனுமறைந்தனனம்பொற்றுமனைப், பண்ணவன்மருவு
தன்பதியினெய்தினான்,றண்ணிலாமுகிழ்நகைத் தாரைதன்னொடு
ம், விண்ணவர்குரவனும்விசும்பினேகினான் ... [௨௮]

உருவினும்வலியினுமுவமைவேறிலாத், திருமிகுசிறுவனுந்தி
ங்கள்வானவ,னருளொடுங்காசியிலடைந்துநல்லருள், புரிதருமி
லிங்கமொன்றமைத்துப்போற்றினான் ... .(௨௯)

ஒருபதினாயிரம்பருவமூணிகழ்ந், தரியநற்றவமினிதாற்றுமே
ல்வையிற்,றெரிவையோர்பங்கமர்திங்கள்வேணியான், மருவுமவ்
விலிங்கத்தின்வந்துதோன்றினான் ... ...[௩௰]

கார்வரனோக்கியகளிகொண்மஞ்ஞையி, னார்வமோடினிதெழு
ந் தாடிக்கண்ணிணை, நீருகநெஞ்சகங்குழையமுக்கணான், வார்க
ழற்சேவடிவணங்கியேத்தினான் ... ... [௩௧]

மல்லலந்திருவொடுமகிழ்ந்துவாழினு,மல்லலம்படுகுழியமிழ்
ந்துமாழ்கினான், செல்வநின்றாளிலென்சிந்தைநீங்கிடா,நல்வரம
ருள்கெனநவின்றுபோற்றினான் ... ... [௩௨]

இறைவனுமரமகிழ்ந் துடுக்களியாவையு, முறைதருமுலகின்
மேல்விளங்கியொன்பதென்,றறைதருகோளிலொன்றாகிவாழ்கெ
னப், பெறலருநல்வரம்பெரிதுநல்கியே ... [௩௩)

விதியினிற்போற்றிய விலிங்கம்வீறுசால், புதனெனும்பெய
ரொடும்பொலிகவீண்டெனாத், தளைமலர்க்கொன்றையான்மறை
யத்தண்ணிலா,மதிமகனிப்பதிவைகினானரோ ... [௩௪]

அவ்வுலகிதுவெனவறைந்துசெல்வுழித்.தெய்வநன்மறையவன்
சிறப்பினோங்கிய, சுவ்வைசால் கவியுலகினிதுகண்ணுறூஉ, விவ்வு
லகியாதெனவியம்பன்மேயினர் ... ...(௫௬)

௰௫ -வது - தாரகையுலகமும் புதனுலகமுங்கண்ட

அத்தியாயம்-முற்றும்.

ஆக அத்தியாயம்-௰௫-க்கு-விருத்தம்-௫௮௮.

பதினாறாவது

சிவசன்மா-சுக்கிரனுலகங்கண்ட

அ த் தி யா ய ம்.

கொச்சகக்கலிப்பா.

கொடியவவுணர்திருந்தர்தொழுங் குரவன்பெயர்சுக்கிரனுகும்
படவெவ்வரவமருங்கசைத்துப் பரவைத்திரையினுதித்தெழுந்த,
விடமுண்டிருண்டகண்டனருண்மிருதசஞ்சீவினியென்னு,மொ
டிவில்விஞ்சையினிதுணர்ந்தவுரவோனீங்குவைகினனுல். (௧)

மிருதசஞ்சீவினியென்னும் விஞ்சையெவ்வாறிவனுணர்ந்தான்,
மருவுபெயர்சுக்கிரனென்ன வந்ததெவ்வாறோதுகென, வரியம
றைதேர்கலைமுனிவன்கேட்பவறுகால்குடைந்தாத'முருகுவிரிக்
கும்பசுந்துளவோனன்பர்வகுத்துமொழிகுவரால். (௨)

சுற்றம்வெருவவழுமிழுங் கொலைவேலந்தகாசுரனென், று
ற்றல்சான்றவவுணனெடுமமரியாருமமரினெதி, ரேற்றகாலைப்
பசுங்குண்டடன்முதலாமவுணரிறந்தொழியச், சீற்றமிகுமோரவு
ணர்பற்செலற்றகுராவற்கியம்பினனுல் ... ... (௩)

என்னிலவுணரமரர்விடுங்கணையாலாவியிறந்தொழிந்தா, ரன்
னவிவர்தளிப்பினல்லாதுப்யே மெலியமெனவுரைப்பத், தன்
னைப்பெற்றமுதவளவைசாதுந்தனிமுநிவன், றன்னெனன்
றேதிப்பர்க்களத்திற்சுடர்வேலவுணனெடுசார்ந்தான் ......(௪)

வீய்ந்தவவுணருயிர்பிழைப்பமிருதசஞ்சீவினியெனை, வாய்
ந்தவிஞ்சைமறைக்கிழவ னறையத்துயிலற்றவர்போல, மாய்ந்
தோரியாரு முடனெழுந்து வடிவாள்விதிர்த்துவாய்மடுத்துக்,
காய்ந்துசுழல்கட்டழல்சொரியக்கனன்றுமரிற்கைகலந்தார்.

இறந்தோரியாரும்வெஞ்சமத்தி னேகிமிக்கவெதிர்ந்தனவொன்
றறந்தாழ்நெஞ்சத்திமையோர்கள்வெருவா நந்தியுடனறையச், சி
றந்த விசும்புதனிபுரக்குந்தேவர்வெருவா திருத்திரொன, மறந்தா
ழ்கணிச்சிவானவனைவணங்கிச்சிலாதன் மகனுரைப்பான்...(சு)

ஐயநினதுதிருவருளாலருமாதவத்துப்பாற்கவன்முன்...*
னெய்துமரியவிஞ்சையினு லிறந்தவவுணரியாவரையு, முய்யச்
செய்தானினியமர ருய்யாரென்னவோதுதலுந், தையல்பாகன்
பாற்கவனைக் கொணர்திடுயென்னச்சாற்றினனுல் ... (எ)

சாற்றலோடு நந்தியருன்முக்கட் பரமன்முன்வணங்கிக், கா
ற்றுமனனும்புறங்கொடுப்பக்கடிதினேகியவுணரணி, வீற்றுவீ
ற்றுய்விரிந்தோடத்துரந்துவெள்ளிதனைப்பற்றி, யேற்றுக்கொ
டியோன்முன்னுய்ப்பவிறையுமவனைவிழுங்கினனுல் ... (அ)

. மறுவின்முயற்சியில்லாதமக்கட்போன்றுமாற்றரிய, பொறி
யின்மார்தர்தாளான்மை போன்றுமரன்மேலன்பில்லார், நெறி
யினுற்றுநல்விரதம்போன்றுதிகரில்சவியின்றி, யெறிவேலவுணர்
பெருஞ்சேனைப்பொலிவற்றிடரினுழ்ந்ததுவே ... (கூ)

வெருவலவுணர்பாற்கவனைமீட்பலின்னேயெனவெகுண்டு-மு
ரசமார்ப்பவளைநரல மூரித்தானைமுன்னடப்பக், கருவிமுகிலே
ய்தடங்குடுமிக்கைலையடைந்துகறைமிடற்ற, வரவாபரணன்கண
ங்களோடும்பொருதானந்தகாசுரனே ... ... (ய)

அவுணர்க்கிறைவன்விடுகணையானமரர்கணங்கள்வெருவெய்த, வு
வணமுயர்த்தோன்மயிலூர்தியுடல்வெஞ்சினத்தவேழமுகன்றவ
ளக்களிற்றுப்பெரும்பாகன் முதலாமமரர்தலைப்பெய்து, புவன
முழுதும்புதைப்படலம்போர்ப்பக்கணையால் புதைத்திட்டார்.(

தூர்க்கும்படையால்வளைப்புண்டு துளங்குமவுணர்வெரு
வெய்தி, யார்க்குமமலைசெவிமுதல்வந்திசைப்பவடுவெங்களிற்று
ரிவை, போர்க்குமமலன்வயிற்றறையும்வெள்ளிகோளாப் புலம்பு
ற்றுத், தீர்க்கவரிதாமிடரெய்திப் போமாறுளத்திற்சிந்தித்தான்

சித்திரத்திருக்குங்காலையிளந்திங்கட்கண்ணியிறைவயிற்றி, லுந் துதடந்தேரவுணருடன்றேவ ருடற்றுங்கொடுஞ்சமருங், கொந் துகமழுந்துழாயலங்கற்கொண்டன்முதலாய்வானவரு, மத்தமி ல்லாப்பகிரண்டமனைத்துநோக்கியின்புற்றான். ...(௰௩)

அன்னநோக்கியொருநூறுண் டியோகமொழியாதமர்வெள் ளி, மின்னாரிறைவன்சுக்கிலமாய்விழ்ந்துபெம்மானடிபரவ, மன் னுநமதுசுக்கிலமாய்வந்தவாற்றாற்சுக்கிரனென்-றுன்னைபுலகம்பு கலவினிதுறைதியெனலுந்தொழுதகன்றான் ... (௰௪)

அன்றேல்பெயரின்முறைவழுவாதறைந்தெங்கரியினுரிபோ ர்த்த,முன்றேனளித்தவிஞ்சைமுறைகேட்டிபிருகுமுனிபுதல்வ, லின்றேன்காசிநகரடைந்தோ ரிலிங்கமமைத்துமலர்தூவிப்,ப ன்னாள்வழிபாடியற்றிடவுப்,பரமன்றோன்றக்கண்டிலனால் (௰௫)

உலவாக்கொடியமும்மலமுங்கழுவிப்புலன்களுள்ளடக்கி, யி லையார்கணிச்சிப் பெம்மானை யிதயகமலத்தினிறுத்திக், கலை தேர்முனிவனெய்யரியின்புகைவாய்மடுத்துக்கண்முகிழா, வலை யாதோராயிரம்பருவமரியவிரதமாற்றினனால் ... (௧௬)

ஆற்றுமரியதவநோக்கியந்தாமனாயின்முகையவிழத், தோற் றும்பரிதியொருகோடி யெழுந்தாலென்னச்சுடர்மேனி, யேற் றுக்கொடியோன்றோன்றுதலுமிதயங்களிப்பமயிர்பொடிப்பப் போற்றியமரர்முடியுரிஞ்சுபொன்னங்கழலின்மிசைவீழ்ந்தான்

தொழுதுவீழ்ந்தமுனிவரனை யெடுத்துநமதுசுக்கிலத்தின், வி ழையுமகவாய்வருதியென்று மிருதசஞ்சீவினியென்னும், பழுதி ல்மறையுமளித்திவணி பழிச்சுமிலிங்கத்தின்பேராற், றழைகவென் னவருள்கூர்ந்துதழற்கட்பரமன்மறைந்தனனால் ... (௰௮)

இன்னவிஞ்சையிவ்வண்ண மடைந்த புகரினுலகமிஃ, தென்ன விளம்புமுனாவேளை வேகுநெறியினியன்முனிவன்,முன்னரங் காரகனுலகந்தோன்றலோடுமொழிகென்னப், பொன்னார்திகிரி நெடியோயனம்பாதனைப்புகல்கின்றார் ... ... (௰௯)

௰௩-வது-சுக்கிரனுலகங்கண்ட- அத்தியாயம்-முற்றும்.

௨௰-அத்தியாயம்-௰௩-இ-விருத்தம்-௱௭.

பதினேழாவது

சிவசன்மா

செவ்வாய் வியாழம் சனியுலகங்கண்ட

அத்தியாயம்.

*வஞ்சிவிருத்தம்.

செவ்வாயுலகேரிசித்தியவேல், மைவார்விழிமங்கையொழிந்திடு
டும், வெவ்வாளரவஞ்சடைமீதணியு, மவ்வானவனற்றவமாற்றி
னனால் ... ...(க)

தனைநோக்கியதாழ்சடையோனுதலிற், பனிவேர்வுயர்பார்மி
சைவீழ்ந்ததுவோர், கனிவாய்மகவாயதுகண்டெறிநீர், வனைமே
கலைமங்கைவளர்த்தனளால் ... ...(உ)

மண்மங்கைவளர்த்தலின்மண்மகனென், றெண்ணும்பெயரொ
ய்தியதிங்கிவனுங், கண்ணன்புகழ்காசியடைந்தெறிநீர்த், தண்ணந்
துறைவானதிசார்ந்தனனால் ... ...(௩)

வெங்காமமெறிந்துயர்மெய்ந்நெறியிற், றங்காவிழைவோடுதவ
ம்புரியப், பொங்காரழன்மேனிபொடித்தெழலா, லங்காரகனாயி
னனன்னவனே ... ...(௪)

நெறிசேர்தவநோக்கிநினைத்தருளான், மறையோதியமைந்தன்
முன்வந்தணுகி, யறைவார்கடனஞ்சமருந்தியசீ, ரிறையோனும
ளித்தனனிவ்வுலகே ... ... (௫)

எனவோதுதல்கேட்டினிதேகுதலு, முனமோர்நகர் தோன்
றமுதக்குறைவாற், றனிநான்மறையோனிதுசாற்றுகென, வி
னைதீர்கணநாதர்விளம்புவரால் ... ... [௬]

கலிவிருத்தம்.

பனிமலர்க்கமலவீட்டுறையும்பண்ணவன், முனமுலகியற்று
வான்முன்னுபோதவன், மனனிடையத்திரிமரிசியங்கிரா, வெனு
மிவர்முதலினேழுவர்தோன்றினர் ... ... [௭]

---

* யாப்பருங்கலம் “சித்தடிநான்காய்வருவனவஞ்சி
யெஞ்சாவிருத்தமென்மனார்புலவர்,,

அனையரின்மறைபயிலங்கிராவருள், புனையுமாங்கிரதனென்று
ளாக்கரும்பொற்புடை,முனைவனையின்றனனவனுமுக்கணு, ளினி
துறைதீம்புனற்காசியெய்தினான் ... ... [௮]

அருளினோரிலிங்கமாண்டமைத்துமீயுய, ரிருவிசும்புறைதரு
தேவராண்டினு,மொருபதினாயிரம்வருடமோங்கிய, பொருவரு
நற்றவம்புரிந்திட்டானரோ ... ... [௯]

எற்றிருங்கொடிவலனுயர்த்தியாணர்வெண், ணீற்றொளிபழுத்
தசெக்கணிலைக்கண்ணியா, னாற்றருந்தவத்தினுக்கிரங்கியாயிடை
த்,தோற்றியாங்கிரதனைநோக்கிச்சொல்லுவான் ... [௰]

அளப்பருந்தவமினி தாற்றியன்பினி, னுளத்தையிவ்விலிங்கத்
தோடொன்றநோக்குபு,திளைத்தலினுலகெலாஞ் சீவனென்றுனை
க், கிளர்த்துகநெறிவழாக்கேடில்சிந்தையோய் ... ... [௰௧)

அருளினானீயினிதமைத்திலிங்கப்பேர், பொருவருவியாழத்தி
ற்பொலிகமற்றது, பரவினர்மலர்கடுப்பழிச்சினோரெலாந்,தெ
ருளொடும்புத்தியிற்சிறந்துவைகுவார் ... ...[௰௨]

மன்பெருங்குணங்களையுடையவாற்றினு, மென்பெருங்கருணை
யின்னிலையந்ததானுநீ,பொன்பயிலிருவிசும்பளிக்கும்புங்கவற்,க
ல்புலடக்குரவனேயாதியீண்டென ... ... [கரு]

அந்தரதுந்துமிகறங்கியார்த்தெழப் - பைந்தொடியரம்பைய
ராடப்பங்கய, னிந்திரன்முதலினோரினிதினேத்திடச்- சுந்தரச்சு
டர்மணிமௌலிசூட்டியே ... ... (௰௪)

ஊற்றிருந்தழிதருவொழுகுகொன்றையோ, னேற்றவவ்விலி
ங்கத்தில்மறைந்திட்டானிய - லாற்றல்வாசவன்முத லடைந்து
ளோரெலாம்-போற்றுதம்பதியிடைப்போயினாரரோ .. [௰௫]

ஆதலால்வியாழத்தினுலகென்றுங்கவ- ரோதல்கேட்டேகும
ந்நெறியிலோர்பதி-தீதறக்காண்டலுஞ்சிவசன்மாவிஃ - தியாதெ
னமாதவன் சனமியம்புமால் ... ... [௰௬]

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருந்தவக்கிழமைபூண்டகாசிபற்கறமென்கூந்தற்- கருந்த
டங்கட்டவுண்கட்காரிகையதிதியென்னு- முருந்திளமுறுவற்ப
ல்லிமொட்டிருட்பிழம்புசிப்பிக்குந்- திருந்துசெங்கதிர்கள்பூத்த
திசைசால்நல்லொளிசிறந்தாள் ... ... [௰௭]

தூயநற்றவஞ்செய்தொட்டா வின்றருடுணைமென்கொங்கை யாய்பிழியறன்மென்கூந்தற்சஞ்ஞிகைதன்னையன்பிற், காயமழற்கடவுள்சான்றாய்க்கடிமணம்புரிதல்செய்தான். பாயிருள்பிழம்புசீக்கும்பரிதியஞ்செல்வன்றானே... ... ,... (௰௮)

மல்லலைத்தெழுந் துவீங்கிமறங்கிளர்திணிதோட்குன்றின், றொல்லுலகளிக்கும்வைவச்சுதமநுவினையும்வெய்ய, கொல்சினப்பகடுதூண்டுங்கூற்றையும்யமுனையென்னு,மல்லினுங் கனிந்தமேனியணங்கையுமினிதினீன்றாள ... ... (௰௯)

அன்னவள்வெய்யோன்மெய்யினழல்கதிர்க்காற்றாளாகித் * தன்னிழறன்னையாங்கோரணங்கெனச்சமைத்துநீங்கா. தின்னணமிருத்தியிவ்வாறியம்பனீயென்றுதாதை. தொன்னகர்க்கேகியன்னோர்க்குற்றவையனைத்துஞ்சொன்னாள் ... ... (௨௰)

ஆங்கதுகேட்டதாதையழலெழவிழித்துநோக்கி, யீங்கிதுபுரிவர்கொல்லோகற்புடைமகளிரென்னத்-தீங்கிழைத்தனை மீட்டேகிற்கதிரவன்சீறுமென்னாத் - தாங்கருந்தவங்கள்செய்வானுத்தரகுருவிற்சார்ந்தாள் ... ... (௨௧)

பதனழிசருகுதின்றுபரிதியைமனத்தினேர்ந்து-திதலைபூத்தலர்ந்தகொங்கைச்செய்தவம்புரியுமேல்வை-மதர்வைமென்னோக்கிச்செய்தமாயையமற்றிவளென்றெண்ணான்-றதைமலர்க்கூந்தற்சாயாதேவியைத்தழீஇனானே ... ... (௨௨)

சாவன்னியென்னுமெட்டாமநுவினைச்சனியைவெய்ய - வேவெனமிளிருமுண்கட்பத்திரையென்னுமானை - யோவறுமன்பினீன்றுமுன்னவளுவப்பினின்ற-மூவனாய்ப்போற்றல்செய்யான்முனிவொடுமிகழ்ச்சிசெய்தாள் ... ... (௨௩)

இகழ்வுமுனிதல்செய்யான்மநுவினிருப்பப்பொங்கி-வெகுளியின்மறலிதாயையுதைப்பத்தாளெடுக்கும்வேலைத்,தகைவறுமுளத்தாளாகிச்சமனையேபுழுங்கச்சீறி-மகவின்றாண்முறிகவென்றுவல்பெருஞ்சாபமிட்டாள் ... ...(௨௪)

கொச்சகக்கலிப்பா.

அன்னைமுனிந்தவாறனைத்துந் தாதைக்கடுங்கூற்றெடுத்துரைப்ப-வென்னைசெய்தபிழையென்னமற்றையாதனைத்து மினிதியம்பக் கன்னலனையதீங்குதலைப்புதல்வர்பிழைப்பினுளங்கனன்று- முன்னவரியகொடுஞ்சாபமீன்றோர்புகறன்முறையன்றே.....(௨௫)

மழைமானோக்கிக்கொடுஞ்சாபந்தீர்தற்குனதுமலரடியிற் *
புழுவாய்மடுத்துச் சிலதசைகளருந்திப்பொழிக வெனப்புகலா
விழைதாழ்பொம்மன்முலையணங்கினுள்ளமின்னே யறிவனெனு
ம்.விழைவாற்றனதுமனைக்கிழத்தியுளறயுமிருக்கைமேவினனால்.( )

அன்னமென்னவெதிர்போந்துவணங்குமணங்கின்முகநோக்கி
முன்னரீன்றமக்களொருமூவர்தம்மைமுனிவுசெய்து-பின்னரீன்
றமக்கடமைப்பெருகுமுவப்பிலளித்திடுத- லெல்லையென்னவுள
ம்வெருவியாதுமுளாயாதிருந்தனளால் ... (உஎ)

உளாயாதிருப்பநிகழ்ந்தவெலாம்' யோகினுணர்ந்துகொடுஞ்
சாபம் - புரிவானினைந்தவெங்கதிரோ னுள்ளமோர்ந்துபுழுகொ
ழுகு-மருவார்கூந்தற்செய்தியெலாமறையாதுணர்ப்பப்பொறை
யதனா-லருண்மீதூரமுனிவகற்றிமாமன்றன்பாலடைந்தனனால்.( )

இரவியடைந்தென்மனைக்கிழத்தி யாண்டையாளென்றுளாத்தி
டனும்- பொருவினினதுகதிர்வெம்மைக் காற்றுளாகப்பெரும்
போக-மருவிநுகருத்தரகுருவிற் பெட்டைப்பரியின்வடிவாகி *
யரியபெருமாதவமினிதொன்றாற்றுநின்றாளாயிழையே ...(உகூ)

அம்மெலோதியிடத்துறையினழற்றுநினதுகொடியகதிர்-வெ
ம்மையடக்கல்வேண்டுமெனவிடைகொண்டேகிப் பூண்சுமந்த *
பொம்மன்முலையாங்கிருந்துதவம் புரிதனோக்கி யிருள்சீக்குஞ்
செம்மற்கதிர்வானவனவள்பாற்பரியினுருவிற்சென்றடைந்தான்

மருவுபொழுதிற்குழைகிழித்துமதர்க்குங்குவளைக்கருநெடுங்கட்
புரிமென்கூந்தல்யார்கொலெனப்புரியுமருமாதவநீங்கி-வெருவி
யோடப்பின்றொடரும்வேலைத்தாதுமூக்கின்வழிச்-சொரிதலோ
டுமருத்துவரோரிருவரதனிற்றோன்றினரால் ... (ஙக)

ஆயகாலைவெருவேனின் னன்பன்யானென்றரும்பெறற்றன் *
மேயவுருவிற்றோன்றுதலும்விழை வினாற்றுந்தவப்பேற்றா- லே
யகொழுநற்சேர்ந்தனமென்றிரவியோடுமவளிருப்பச் - சாயா
தேவியிவிதில்றசவியுங்காசிநகரடைந்தான் ... (ஙஉ)

அங்குமேவித்தன்னுடைப்பேரதனாலிலிங்க மொன்றமைத்து
ட்-பாங்கிலியற்றுமருந்தவத்தானெடுவெண்டிங்கட்பைங்கண்ணி
க்-கோங்குமுலையாளொருபாகன்புரியுமருள்மேற்கொண்டுவகை
யோங்குவெய்யோன்றருபுதல்வனிவிதினுறையுமுலகிதுவே .( )

கங்கையெதிர்த்திரைகொழிக்குங் கடவுட்காசிநகருறையு-மங்கைபாகன்சினகரத்திற் றென்பான்மருவிவீற்றிருக்கும், பொங்குகதிர்வானவனீன்றசனிப்பேரிலிங்கம்போற்றுமவ - ரங்கணுலகிலெஞ்ஞான்றுமழியாப்பெரும்பேறடைகுவரால் ....(ருச)

என்றுகூறுமுனாகேளாவேகுநெறியிலைம்புலனும் - வென்றபெருமாதவமொழுவருறைதனேக்கிவிழிகளிப்பக்-கன்றுசினவெங்குறும்பெறிந்தமறையோரிவரார்கழறுகென -மன்றல்கமழுந்துழாயலங்கன்மாயனன்பர்வகுத்துரைப்பார்... ....(ருரு)

யஎ-வது-செவ்வாய் வியாழம் சனியுலகங்கண்ட-

அத்தியாயம்-முற்றும்.

ஆ அத்தியாயம்-யஎ-க்கு-விருத்தம்-௬௫௨-

பதினெட்டாவது

சிவசன்மா-சத்தவிருடிகளுலகங்கண்ட

அத்தியாயம்.

கலிவிருத்தம்.

அருந்தவப்புரியுமீங்கிவரையாய்மறை - திருந்துமேழிருடிகளென்றுந்தேமல-ரிருந்துலகியற்றுமேழ்பிரமரொன்னவும்- விரிந்தநூற்கேள்வியோய்விளம்புவாரரோ ... ... (க)

மலர்தலைநிலப்புகழ்மரீசியத்திரி - புலகனற்புலத்தியன்கிரிதுபோற்றரு-மிலகுபேரங்கிராவசிட்டனீங்கிவர்- நலனுறுபன்னியர்நாமங்கேட்டியால் ... ... (உ)

தேசுறவிளங்குசம்பூதிதேவரும் - பேசருளுயைவான்சமைபிரீதிமற்-றூசைபோஞ்சந்ததிமிருதியோங்கிய- வேசிலாக்கற்பருந்ததியென்றோதுவார ... ... (௩)

அருமறைநூற்பொருள்வடித்தவந்தணன்- பொருவறுமுலகெலாம்புனிதமாதவர் - தருதிரொன்றிசைத்தனு மவருந்தன்புனற்பிணாதவழ்காசியிற்சென்றமேயினர் ... ... (௪)

தம்பெயராற்றிகழிலிங்கந்தாபித்தோ- ரும்பர்வேட்டவியுண
த்தவமுயற்றலும்-வம்பவிழலங்கலங்கொன்றைவார்சடை- நம்ப
ன்முன்னின்றியிவ்வுலகநல்கினன் ... ... (௫)

இருடிகள்பன்னியரெழுவர்தம்முளங். கருணைசாலருந்ததிகட
வுட்கற்பினைத்-திருமறுமார்பனுமயனுஞ்செல்வியு - முருவுடை
வாணியும்விழைமையவோதுவார் ... ... (௬)

முப்புரிநூலணிமுனிவரெய்திய- மெய்ப்பொருளிலிங்கத்தை
விதியிற்போற்றுவோர்க்- கெப்பொருளெய் துதற்கரியமற்றவர்
செப்பரும் பிரமநன்பதத்திற்சேர்குவார் ... ...(௭)

௰அ-வது-சத்தவிருடிகளுலகங்கண்ட

அத்தியாயம்-முற்றும்

ஆ௨ அத்தியாயம்-௰அ-க்கு-விருத்தம்-௬௪௯.

பத்தொன்பதாவது

துருவன் செயல்.

கலிவிருத்தம்.

எனவுரைத்தேகுழிமேருவுச்சியிற், கனைகதிர்க்கயிறுகைப்பற்
றிக்கல்கவர், தனியொளிபரப்பியசோதிசக்கரந், தினைவினிலிய
ற்றுவான்யாவன்சொற்றிரால் ... ... (௧)

என்றருமறையவனியம்பவிர்ந் துழாய், மன்றனுறலங்கலம்
பரிதிமார்பினன், பொன்றிகழ்திருந்தடிபோற்றியைம்புலன், வெ
ன்றசிறடியவர்விளம்பல்மேயினர். ... ... (௨)

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

பைத்தோங்குமாயிரவாய்ப்பாம் பின்முடிக்கிடந்த புவிபரிக்
குந்தெள்ளீர், முத்தாரந்துயல்வருந்தோட்சுவாயம்பு மனுவா
யழிரிவேலை, உத்தானபாதனெனுமொருமகவை யுவட்பினொ
டுநீள்முனைக்கேனன், மைத்தாழ்பூங்கரியகுழற் சுருதியொடுசுநீ
தியையும்வதுவைசெய்தான். ... ...(௩)

கன்னல்பசுந்தேனொழுகு கனிபழுத்தாலனைய மொழிக்காலவேற்கட்,பொன்னவிருஞ்சுணங்கணிந்தபொம்மன் முலைச்சுருதியெனும்புரைதீர்வல்லி; யன்னவளுத்தமனென்னு மகவீன்றாள் சுநீதியெனுமறன்மென்கூந்த, லெந்நிலமும்புக ழோங்கவிங்கிவனையருந்தவஞ்செய்தினிதினீன்றாள் ... ... (௪)

மைதோய்ந்தமதர்நெடுங்கட்சுருதியருண்மைந்தனைத்தன்குறங்கின்வைத்து, நெய்தோய்ந்தவடிவேலானிறையுளமானரியணையினிருக்குமெல்லை, யைதேந்துமகலல்குற் சுநீதியுந்தன் மகவினைநல்லணிகள்பூட்டிக், கொய்தாமம்புனைந் துய்ப்பவவனும்போய்த்தாதையடிகுறுகினனே ... ... (௫)

சென்றடைந்தமழலைமொழிக்கிண்கிணிக்காற்றளர்நடைய சிறுவன்போந்து, வென்றிவடிவேல்வேந்தனரியணைச் சென்றேறுதலும்வெகுண்டுநோக்கிக்,குன்றிரண்டுதாங்கியெழிற்கனிந்தொழுகு கற்பகப்பூங்கொம்பரன்னாள், கன்றுசினத்தொய்ம் வேந்தன் மடியேறலெனவிலக்கிக்கனன்றுசொல்வாள் ... ... (௬)

நன்மரபுதனிற்றோன்றியரசன்மணி முடிக்குரியநங்கையாய, வென்வயிற்றிற்பிறவாமற் பொறியில்லாளவ்வயிற்றி னியைந்தமைந்தா, மன்னுவறையுமரியணையி லேறற்காதெனவுரைப்பமைந்தன்மாழ்கித், தன்னுழர்தாய்மருங்கணைந்து தளர்வோடுமிவையனைத்துஞ்சாற்றினனே ... ...(௭)

உரைக்குமகவினைத்தனதுகுறங்கிருத்திமெய்தழுவி யுச்சிமோந்து,வரைத்தடந்தோண்மன்னவன்றன்மனைவியரிற் றலைமைபெறுமாட்சிதன்னால், விருப்பமுறுதன்புதல்வர்க்கல்லாதிவ் வரசுரிமை மேவாதென்னுஞ்,செருக்கினுரைத்தனளவள்போற்றவம் புரியாவெளியமெவன்செய்வதென்றாள் ... ... (௮)

அருந்தவத்தாற்பெறலரியவரசுரிமை யாங்கவள்செய்தடைந்தாளென்னில்,வருந்தியருந்தவமாற்றிவானவர்க்கும்பெறற்கரிதாய்வயங்குசோதி, திருந்துமுயருலகடைவன்விடைதருதியென விருதாட்சென்னிசேர்த்தான், பொருந்துதிரைக்கடற்பிறந்தவமுதனையமழலைமொழிப்புதல்வன்றானே ... ... (௯)

இருநான்குபருவமின்னுநிறைந்திலது நெடுபடுகானிடையிற்போகி, யொருவாதுதவம்புரிதற்கொண்ணுமோதிற்பிரிந்துமுய்

வேள்கொல்லோ-வெருவாவுள்ளுயிர்பதைப்பமாற்றவடி மொழிவிடத்தால்வெதும்புவேனின், னரிதாயமழலைமொழி யமிழ்தருந்தாதாற்றுவல்கொலந்தோவென்றாள் ... ...(ய)

அளியரற்றநறுங்கூந்த லிவ்வண்ண மழுதாற்றியவலங்கூரத் தொளிபழுத்ததண்பணையிற்றுள்ளுகயல் செழுங்கமலப் பொகுட்டிற்றுஞ்சும், வளவயல்சூழ்நாடொருவி மழலைமொழிக்கிண்கிணிக்கால்மைந்தனேகி, முளியரில்சூழ்கொடுங்கானில்வெருவருமோர்தவமினிதுமுயலுமேல்லை ... ...(கக)

அழலூட்டிப்பின்றுகரு மருதொழிலேழ் முனிவரரான் டடைந்திக்கானத், தழைவேட்டுத்தவம் புரிந்தாயாரா நீயெனவவர்தாளுவப்பினேத்தி,மழையோட்டுக்கொடைத் தடக்கையுத்தானபாதனருள்மதலையென்றான், குழையோட்டிக்குமிழ் மறியுங்கொழுங்கயற்கட்சுநீதியருட்குமரன்றானே ... (யஉ)

உடைதிரைநீர்க்கடல்வலயம் பொது நீக்கித்தனி புரக்குமுரவோன்மைந்த, னெடுபடுகானிடைப்போந்து தவம்புரிதற்குற்றதெவனிசைந்துகென்ன- வடலரியாசனத் திருக்கைமறுத்தனடாயாங்கதனுலமரரியார்க்குந்-தொடர்வரியபதம்பெறுதற்கடைந்தனனியால்பெறுமுறைநீர்சொல்கவென்றான் ... (யங)

கன்னிதறும்பசுந்துளவின்குழையலங்க லயல்வருதோட் காயாமேனி-முன்னவன்பொன்னடிபோற்றின்முடியாத பொருளுளவோமுருகுநாறிப்-பொன்னவிழ்பூந்தாதவிழ்க்கும் பூங்கமலப் புத்தேளுமறவுமன்னேன்- றன்னுருவாகிய வெழுத்தோரீராறுதவின்றெவர்க்குந்தலைவரானூர் ... ... (யச)

கன்னியிளம்பசுந்தாற்றுக்கதலிவனம் விளிம்புடுத்தகழனிநாட்டு-மன்னனருந்தவம்பெற்றின் வருபுதல்வவுலகளந்த மாயோன்செய்ய- பொன்னடியைநினைந்தியப் பூங்கமலத்தினிதிருத்திப்புலவர்யார்க்கு-முன்னரியபதம்பெறுதி யெனவுணாத்துக்கடவுண்மறைமுனிவர்போனூர் ... ... (யரு)

யகூ-வது-துருவன்செயல்-முற்றும்.

ஆ அத்தியாயம்-யகூக்கு-விருத்தம்-எாசூச.

இருபதாவது.

துருவன்-தவஞ்செய்த

அத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

துருவனாண்டகன்றுமதுவனத்தெய்திச் சுடருமிழொருமணி
கிடந்த - திருமறுமார்பன்கழலிணைநினைந் துநிகழொளிதிசையெ
லாம்போர்ப்ப-வரியமாதவமொன்றியற்றலும்வெருவியார்பதம
டைவதற்கின்றோன்-புரிகுவதிதனைக்கெடுப்பனென்றமரர் புங்க
வன்புந்தியினோர்ந்தான் ... ... (௧)

கருங்கயன்மருட்டிக்கடைக்குழை யெறிந் துகாலவேல்பொரு
வுவாட்டடங்க-ணரம்பையர்குழாத்தோடளி விருந்தயருமைங்க
ணைக்கிழவனைவிடுப்பிற்-றிருந் துமென்மழலைச் சிறுவனாதலினாற்க
லவியிற்சிந்தைசெய்கிலன்மேல்- வருந்திநெஞ்சழிவானலகைகா
ளென்றுவன்பெரும்பேய்க்கணம்விடுத்தான் ... ... (௨)

விடுத்தவெங்கணற்கணலகைமற்றெவையும்வெருவரலியற்றவும்
வெருவான்-சுடர்ப்படைத்திகிரி யண்ணன்மேலன்பின்றுணிவுக
ண்டாங்கொர்பேய்விரகா - லடுத்தவனன்னையுருவுகொண்டெய்
தியரும்பெறற்குமரவுன்றனையான்- கெடுத்துயிர்வாழேனெனம
ருட்டிடவுங்கேடிலானுளந்துளங்கினனால் ... (௩)

மழலையஞ்சிறுவ னருந்தவம்புரியுமனவலி நோக்கியுண்ணடுங்கி
யழல்விழிப்பரூஉத்தாட்கூளிமற்றியாவு மமரர்கோன்மருங்கணை
ந்தெம்மால்-விழைவொடுஞ்சிறுவனருந்தவப்புரிதல்கெடுக்குமா
றரிதெனவிளம்ப- வுழையுறுமமரர் குழுவொடுமலரோனுறையு
ளிமெருல்லையினடைந்தான் ... ...(௪)

தாளதாமரையிலரசுவீற்றிருக்குஞ்சதுமுகக் கடவுளைவணங்கி
வாளராமுடியிற்கிடந்தபார்பரிக்கு மறுகுலத்தோன்றலாங்கியற்
று, நீளிருந்தவத்தாலார்பதம்பெறுவானினைந்தனன் கொல்லென
நிகழ்த்த-வாழுறும் பதத்தில்விழைவிலன் மேலாப்பதம்பெறும
ருத்தியினமைந்தான் ... ... (௫)

ஆங்கவன்மேலாம்பதம் பெறுநீவிரடைந்திடும்பத மெவற்றி
னுக்கு-நீங்கருமுறுதிபயந்திடுமென்னநான்முகனி சைத்தலுமகி
ழ்மாப்-பூங்கழல்வணங்கியமரர்தம்பதத்திற்போயினர் துருவனுண்
டியற்றுந் - தீங்கறுதவத்தாலுளமகிழ்ந்தருள்கூர்செங்கண் மால
வனுழைசேர்ந்தான் ... ... (௬)

கலைகடல்வயிறுகுழையமத்தெறிந் தாகடவுளர்க் கின்னமுதளி
த்த-வலைதழாயலங்கறுயல்வருந் தடந்தோண் மரகதவண்ணனை
நோக்கி-நிலைவரும்விழைவிற்கண்பனிதூங்கி நெஞ்சகங்குழைந்
துநெக்குருக- வினையறத்துயர்ந்தோரிதயம்விட்டகலா மென்ம
லர்ச்சேவடிபணிந்தான் ... ... (௭)

குவலயம்பொதிந்தருணைகழன்முளரிவணங்கியகுமரனையெடு
த்தாங்-குவலையங்கடல்வாய்மடைதிறந்தென்னவுளங்கவர் முகி
ழ்நகைபுரிந்தன்-றவமினிதுவந்தேஃவேட்டனயாவுந் தருகுவமி
யப்புதியெனவ், நவையறநோற்றவரசிளங்குமரனுரணற் பழிச்
சுகின்றனனால் ... ... (௮)

௨௰-வது-துருவன்தவஞ்செய்த-அத்தியாயம்முற்றும்.

ஆகூ அத்தியாயம்-௨௰-க்கு-விருத்தம்-௬௭௨

இருபத்தோராவது.

துருவன்பதம்பெற்றஅத்தியாயம்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குணைகழல்மரர்கணத்திலிந்திரனி கோட்களிற்பரிதிவானவனி
புனைபெறுமுலகி லுல்முகனுறையுமுலகநீபுடைதிரைக்கடலிற்-
றிரைகொள்பாற்கடலிகடவுள்மாநதியிற்றீம்புனற்கங்கைநீயுயர்
ந்த- வரைகளிலிமயப் பொருப்புநீயாலின் வளமிகுசரமிநீ யா
மால் ... ... (௧)

அரியநான்மறையிற்சாமநீயெழுத்தி லகரநீயருமறைப்பொரு ளிற்-புராதவதின்றவுபநிடதமுநீவேள்வியிற்புரவிதன்மகநீ-விரா வினில்வளிநீவருணம்மோர்நான்கில் வேந்தனீமருவியகரணத்- தா னாபெறுமனநீபூதமோனாந்நீஞெங்கிருவிசும்புநீயாமால்...(உ)

ஊறியமதனிலருமகப்பேருமூறியநீயுகநான்கி -லாறியாமுகநீ தருக்களிற்சிறந்தவரசுநீயுடுக்களியாவையினு - மேதகவிளங்குபூ சநீபுல்லிற்றருட்பைநீவிழையுநன்பொருளின்-மாதர்நீகருமமனை த்தினுஞ்சந்திவந்தனைமற்றுநீயாமால் ... ... (௩)

கொடிகளிற்சோமக்கொடியுநீயுலகங் கூறியயோகமோரொட் டி-லொடிவறுபிராணயாமநீபுவன மனைத்துநீயெனவுவந்தேத்தி யடிமலர்தொழுதருவனைநோக்கி யாய்பிழிக்குறுந்துளிபிலிற் றுங்- கடிகமழ்படலைப்பைந்துழாயலங்கற் கடனிறவண்ணனிது னாட்பான் ... ... (௪)

கழிபெரும்பதங்களெவற்றினு மேலாம்பதமுறக்கருநினைபுண ர்ந்தேம் - விழைவுறுபூதமியாவையுமன்னமயத்தினின்மேவுமவ் வன்ன - மழையினிற்றோன்றுமம்மழைதனக்குயருவுகாரணமெ னவிளங்கு - மொழுகொளிச்சுடரோனவன்முதற்கோளு நாட்க ளுமும்பரினுலவும் ... ... (௫)

காற்றெனுங்கயிற்றின்வீக்கியுள்ளொளிய கறங்கெனவிடைய று தழலு - மாற்றருஞ்சோதிச்சக்கரந்திரித்தவடவனாமுகட்டி னன்றோயோ-டாற்றலினிருத்திக்கற்பமொன்றிறக்கு மளவுமியுமி யானுமற்றிதனை- யேற்றுயர்கொடியோனருளினாலடைந்தேனிங் கிதுநினக்களித்தனனால் ... ... (௬)

சலந்தரனுடலம்பிளப்பதற்கிறைவன்றுமனாத்தாளினாலமைத்த வலம்படுதிகிரிப் பெறுவதைவிரும்பிவைகலும் வண்டுபாண்மிழ ற்ற-வலர்ந்தசெந்தோட்டுக்கமலமாயிரங்கொண் டருச்சனைபுரி யுழியொருநா-ளிலங்கிதழ்க்கமலமொன்றிலா தென்கணிடந்தவ னடியினிட்டனனால் ... ... (௭)

துகிர்விழுதோட்டிட்படர்ந்தெனக் கிடந்ததுய்ச்சடையண்ண லுண்மகிழ்ந்து-திகிரியப்படையன் றளித்தனனதனாற்றெண்டிரா க்கருங்கடற்புவியு-மகலிருவிசும்பும் பாதலமுழுது மளித்தனனி னக்குயானளித்த,புகலருப்பதமுநிலைபெற வேண்டிற்புராரியின ருள்பெறவேண்டும் ... ... (௮)

காளமுண்டிருண்டமணி மிடற்றெந்தைகாசியிற்கார்த்தி
கைமதியி-ருள்விழவயர்தரெழுவதற் குளத்தினயந்தனல்வருத்தி
நீயென்று-நீளிருந்தவஞ்செய் துருவனேடலங்க னேமியோனை
றாழ்வலிக்கதிறன்-றேளிடைப்போகிக்காசியினெல்லைத்தோன்
றழியதலினினிழிந்தார் ... ...(௯)

துருவனேடேகித்திரைபொருங்கடவுட் டேமணிக்கலிலிங்கையாடி,
யுருகியுண்ணெகிழக் கண்பனியுகுப்ப வுவகையின்மெய்ம்மயிர்
பொடிப்பக்,கருமணியனையதிருமிடற்றெந்தை கனைகழற்சேவடி
வணங்கி, யரிதிரேறிலிங்க,மிவ்வழியமைப்பி னதன்பலமளவிட
லரிதால்... ... .(௰)

என்றினிதுவந்தமழகதிர்விரிக்கும் பொற்றுகிலெழில்மருங்க
லைத்த, மன்றலந்துளவோ னுரைத்தலுந்துருவன்வயித்திய நாத
ரதம்மருங்கி, னொன்றியவுளத்தோ டிலிங்கமொன்றமையாவுரு
ந்தருந்தவமினிதாற்றக், கொன்றையங்கண்ணிப்படர்சடைக்கூத்
தன்விடைவொடுமாங்குவந்தடைந்தான் ... ... (௰௧)

பழிபடுபுலன்களடக்கிநீநோற்றபரிசினுற்சிறுவ விப்பதத்தி,ன
ழிவுறுதிருந்தியெனவரநல்கி யாதியம் பரமனேகுதலும், விடை
வொடுந்துருவனிப் பதமதனில்மேவி வீற்றிருந்தனன்பசிய, க
ழையிசைத்தாவில்கணங்குவித்தருளுங்கண்ணனுந்தன்னக ரடை
ந்தான் ... ... (௰௨)

துருவனுண்டமைத்தவிலிங்க மேத்திடுவோர் தூயநல்சரிதை
கேட்டருள்வோர், திரைபொருதுருவகுண்டநீர்க்கலாயிற்றென்
புலத்தவர்கடன்கழிப்போர்,விரிதிரையளக்கர்சேறுபட்டொழிய
மென்புனல்மொண்டுகொண்டெழுந்த, கருமுகில்விளர்ப்பவிரு
ள்படுமேனிக்கண்ணன்வாழ்பதத்தில்வீற்றிருப்பார்... ... (௰௫)

௨௧-வது-துருவன்பதம்பெற்ற-அத்தியாயம்-முற்றும்.

ஆக-அத்தியாயம்-௨௧-இ விருத்தம்-௩௮௫.

சிவசன்மா

மகலோகமுதல்நாலுலகங்கண்ட

அத்தியாயம்.

* கொச்சகக்கலிப்பா.

என்னத்துருவன்சரிதையெல்லா மியம்பியேகுமந்நெறியிற்,
றன்னவரியமகலோகந்தோன்றநோக்கிச்சிவசன்மா, மன்னுமு
லகமியாதெனலுமறங்கூறவுணர் மிடற்சாய்த்த, பொன்னத்திகிரி
வலனுயர்த்தபுத்தேளடியர்புகலுவரால் ... ... (௧)

இனையலோகமகலோக மிதனினறவமலிதுளவம், புனையுங்க
டவுள்பதம்பணிவோர்கற்பகாலம்பொருந்துவரொன், றனையோ
ருணர்ப்பமுன்றோன்றுமுலகமியாதிங்கறைதியெனச், சனகாதிய
ர்வாழ்சனலோகமிஃதென்றுணரச்சாற்றினரால் ... (௨)

ஏகுநெறியிலோருலகந்தோன்றலோடுமியாதெனலும், யோ
கினிருந்தோரோர்திங்களுண்டிநீத்தோரொருபருவ, மாகம்வரு
த்தம்விளையாமலுறைவோரூழ்ந்தசருகயில்வோர், மோகமெறி
ந்துமூச்சவித்தோர்திங்கட்கொருகான்மூச்செறிவோர் ... (௩)

இன்னொருறையுந்தவலோக மீதென்றியம்பியேகுதலு, முன்
னொருலகமெதிர்தோன்ற முளரிப்பொகுட்டின்வீற்றிருக்கு, ம
ன்னொனுலகமெனமொழியா வன்னமுயர்த்தமறைக்கிழவன்...*
பொன்னார்கமலச்சேவடிகள்போற்றலோடுமவன்புகல்வான்(௪)

வேயாலாவின்கணங்குவித்துவெற்பொன்றேந்தியினிதளிக்கு
ங்,காயாமலரினிறம்பழுத்த கமலக்கண்ணனுவந்துறையு, மாயா
புரியினிறந்ததனால்வழுத்தற்கரியவெவ்வுலக-மேயாதுனக்குநீ நி
னைப்பினெழுதாமறையின்பொருளுணர்ந்தோய் ......(௫)

ஆடகேசனுறைபுவன மதனிற்சிறந்ததிலாவளித, நீடுதரங்
கக்கடலுடுத்த தீவோரேழுதிகழொறிந்த, பீடார்சம்புத்தீவதனிற்
பிரித்தகண்டமொன்பானில், வீடில்பரதகண்டமொன்றே கரு
மபூமியெனவிளங்கும் ... ... (௬)

---

*தொல்காப்பியம் "தரவின்றாகித் தாழிசைபெற்றுந்-தாழிசை
யின்றித் தரவுடைத்தாகியு-மெண்ணிடையிட்டுச்சின்னங்குன்றியு
-மடுக்கியலின்றி யடிநிமிர்ந்தொழுகியும் - யாப்பினும்பொருளி
னும் வேற்றுமையுடையது- கொச்சகவொருபோகாகுமென்ப,,

கலைசேர்மற்றைக்கண்டமெட்டிற்கும்மாபோகக்குறைநுகர்வா
ரிமயத்தென்பாலொன்பானாயிரமெண்ணூறு மியோசனையி...*
லமையுமிமயவிந்தத்தி னமைந்ததிலப்புண்ணியபூமி, யமுனைந
திக்குங்கங்கைக்குமிடையாதிலமந்தாவேதி ... ... (எ)

பொருவில்கடவுணிலங்கடம்மிற்புகலுங்குருக்கேத்திரஞ் சிற
ந்த, துளாசானைம்மிசாரணிய மதனிற்சிறந்ததொலிக்குநெடுந்*
திரைசேர்பிரயாகையாங் கதனிற்சிறந்ததனிற் றெய்வநன்னீர்க்
கலாசேர்கங்கைசூழ்கிடந்தகாசிப்பதியேசிறந்தனவால்......(அ)

அன்னவாற்றலாங்கிறந்தோர்முத்தியடைவரருமறையோய்*
நின்னதுள்ளம்விழைந்ததுவுமஃதென்றுணர்ந்தேனெனமாயன்.*
றன்னையேத்துமடியர்தினக் குரைப்பவொனலுந் தாழ்ந்திறைஞ்சி
மன்னுங்கணங்களொடுமாயன் பதத்திற்செல்வான் வழிக்கொண்
டான் ... ... (௯)

௨௨-வது - மகலோகமுதலுலகங்கண்ட
அத்தியாயம்-முற்றும்.

ஆக அத்தியாயம்-௨௨-க்கு-விருத்தம்-௭௯௪.

௨௩-வது.

சிவசன்மாவுக்கு

அண்டத்தினளவுகூறியதும்-மாலுக்குமுடிசூட்டியதுமாகிய
அத்தியாயம்.

கலித்துறை.

கடந்தயோசனையெத்துணையெத்துணைகடப்பான், கிடந்தயோ
சனைமுத்தியென்றடைகுவன் கிளர்க்கென், றுடன்றமுக்குறும்
பெறிந்துயர்போகினிறுரு, மடைந்தவந்தணன் கேட்டலுமாங்
கவரறைவார் ... ... (௧)

எழ்தடங்கிரியேழ்பொழிலேழ்பெருந்தீவு, மாழ்பெருங்கட
லேழுடையவனியினெல்லை, கேழ்கிளர்ந்தசெங்கதிரவன்கிளைவெ
யிற்கற்றை, சூழ்கிடந்தனவெத்துணைசொல்லினத்துணையே (௨)

அன்னபூதலத்தும்பரினலர்கதிர்ச்செல்வன், மன்றுமண்டிலமில
க்கமியோசனைமதிக்கடவு, ளின்றுமண்டிலமதனின்மே லத்து
ணையதன்மேன், மின்றுதாரகைமண்டிலம்விளம்பினற்றுமால் (௩

ஈதின்மேற்புதன்மண்டிலமிலக்கமோரிரண்டா, மோதுசுக்கிர
னுலகதன்மீதிரண்டிலக்கங்- கோதில்சேயுலகத்துணை குணிக்கின்
மேலதனின்.மீதுபொன்னுலகத்துணையோசனைவிளம்பும் (௪)

இதனின்மேற்சனி மண்டலமிலக்கடிமோரிரண்டாங், கதனின்
மேலெழுமுனிவரரமர்ந்தினிதுறையுந், துறிகொண்மண்டிலமில
க்கமொன்றதனின்மேற்றுருவன், பதமிலக்கமொன்றியோசனை
யாமெனப்பகர்வார் ... ... (௫)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூதலத்தின்மேற்பதினைந்திலக்கமாரும் புவலோகமதனும்பர்
ச்சுவருலோக, மேதமறுமெண்பத்தைந்திலக்கமாகுமிதனின்மே
ன்மகலோகமிரண்டுகோடி, யோதுசனலோகமதன் மேலெண்
கோடியும்பரிற்பன்னிருகோடிதவலோகஞ்சீர், மேதகையவாங்க
தன்மேலீரொண்கோடிவிளங்குறுசத்தியலோகம்விளம்புங்காலே.

ஆங்கதன்மேற்பிரமபதமூன்றுகோடி யதன்மேன்மாயவனுல
கமூன்றுகோடி, யோங்குமதன்மேற்புனிற்றுத்திங்கள்வேணியும்
பாபிரானுறையுலகநான்குகோடி, யீங்கிதன்மேலிவைமுடுமண்
டப்பித்திடொருகோடி நிலமுதலாயீறுகாறு, நிங்கறுமைம்பது
கோடியாகுமேலோர்நிகழ்த்திடு மியோசனைமறைநூனெறியினி
ன்றேய் ... ... (௭)

ஒழியவிம்மூதுலகமனைத்துந்தோன்ற வுலப்பரியதிருவருளா
லினிதுநின்று, காதலுடன்காத்தழிக்கும்விச்சைக்கென்றுங் கார
ணமாய்க்காரணாதீதமாகிச், சாதல்பிறப்பிவையின்றியநாதியாகித்
தற்பரமாய்த்தனிதிகழுமவனேதெண்ணீர்ச், சீதநெடுந்திரைக்
கங்கைபுடைசூழ்காசித் திருநகரில்வீற்றிருக்குஞ் செல்வன்று
னே ... ... (௮)

தூங்குமெயிலொருமூன்று மெரியமூழ்கத் தாரகைகோட்
டியபாமன்சுடர்செய்நேமித், தாங்கியசெந்தாமரைக்கட்டேவை
நோக்கிச் சராசரங்களனைத்திறுநீதானேயாகி, நீங்கரியமுத்தொ
ழிலுமியற்றுமென்னநினையுமானரியனையி னினிதினேற்றி.. *

யோங்குகதிர்நவமணியின்முகடுவேய்ந்த வொழுகொளிச்சாம
ரைகளிரண்டுவெட்பினல்கி ... ... (௯)

பழைவயிரச்சலாகையொரு கோடிவேய்ந்து பாயிருள்சீத்
தொளிர்காம்புகொளுவிச்செய்ய, வழலுமுழுமணிகுயின்றமகு
டஞ்சேர்த்தியாயிரமியோசனைபரப்பினளவைத்தாக,வழுவறுநா
ற்கடல்கடந்த தெய்வத்தச்சன் மனத்தினுன்மிகவருந்தியினிதிற்
செய்த, முழுமதியினெழில்கவற்றிநிலவுகாலு முத்தநெடுந்தனி
க்குடையொன்றுவந்துநல்கி ... ... (௰)

புலவுகமழ்சுடரிலைவே லமரர்விஞ்சைப் புரவலர்கின்னரரி
யக்கர்சித்தர்நாகர், குலமகளி ரொருகாழ்முத் தணிந்துவிங்கு
கொம்மைமுலைப்பொறைசுமந்துகுழைந்துதேம்பி,யலம்வருநு
ண்ணிடைவருந்தநடிப்பவின்னோ ரஞ்சலிசெய்தலர்மாரி பொ
ழிந்துபோற்ற, மலைமகடன்செழுங்கரத்தாற்கலன்கள்பூட்டிமல
ர்மகளையாங்கவன்பாலமைப்பமன்னோ •... (௰௧)

பொழிகதிர்த்திலங்கொழிக்கும் புணரியேழிற் புரிவளைகு
லுளைந்தலறி முத்தங்காலு, மொழுகுபுனற்கங்கைமுத னதியிற்
றெண்ணீரொள்ளொளிப்பொற்குடத்தேந்திமுறையினூட்டி, ம
ழகதிரு மிருளவெயிற்கற்றைகாலு மணிமவுலி சூட்டிமலர்ப்
பொகுட்டின்மேயப், பழமறையோன்முதலமரரியாரும்போ
ற்றிப் பணிகவெனமதுமலர்த்தாட்பணிதல்செய்தார்......(௰௨)

குழந்தைமதிக்கோடுரிஞ்சமுகைவாய்விண்டு கொழுநறவு
கொப்பளிக்குங்கொன்றைமாலைத்தழங்குதிரைப்புனற்கங்கைபசு
ம்பொன்றாற்றுந்தன்மையெனத்தாதுகுக்குஞ்சடிலத்தெம்மான்
முழங்குதிரைப்பாற்கடலுண்டுவெட்டுஞ்சமுருந்தன்முகநோக்கி
யறம்பொருளோடின்பம், வழங்குதிநீயெவ்வுயிர்க்கு முத்தியா
மேவழங்குதுமும்மலமெறிந்தமதியினோர்க்கே ... ...(௰௩)

ஆற்றல்வடிவாட்டடக்கையவுணராலுமகல்விசும்புதனிபுரக்கு
மமரராலு, மாற்றரிதாயெவ்வுயிர்க்குமயக்கஞ்செய்யு மாயைநி
னக்களித்தனமெய்யிடப்பானியே, பூற்றிருந்துநறவொழுகுந்
துளவத்தாரோ யுனையிகழ்ந்தோரெமையிகழ்ந்தோரென்னவோ
தி, பேற்றரியிருங்கொடியுயர்த்தகங்கைவேணியிறைவனுயர்த்த
டக்கையிலைபெய்திருனே ... ...(௰௪)

பொறிவரிவாளரவுபடப்புடைக்குஞ்சிற்றப்புள் ளரசுவலனுய ர்த்தபூவைவண்ணன்,மறியிளைமான்கரத்தேந்துமலனல்செய்ய மலரடிதன்மனத் திருத்திமகிழ்ச்சிகூர்ந்து, பெறலரியவைகுந் தத்தடைந்துதீர்தேன்பில்குபொலந்தாருக்குந்தருவினிழ-லு றைதருவா னவர்ப்பேணியவுணர்ச்செற்றுங் குறைந்தனனுன்ம றைதெரிந்தவுணர்வின்மிக்கோய் ... ...(யரு)

மூதுலகினிலையனைத்து மொழிந்தோமீளா முத்திபெறுந்தன் மையினிமொழிவல்கேட்டி, தீதறுமாயாபுரியினுடலநீத்த செய் தியினல்வைகுந்தத் தினிதுமேவிக், காதலுறுமாமகளிர் குமுத ச்செவ்வாய்க் கதிர்முறுவலின்னமுதங்களிப்பமாந்திப் -போது றைநான்முகன்யாண்டிலோரியாண் டெல்லைபுத்தேளிரடிபரவப் பொருந்திவாழ்வாய் ... ... (யசு)

உரு-வது - சிவசன்மாவுக்கு அண்டத்தினளவுகூறியதும்

மாலுக்குமுடிசூட்டியதுமாகிய அத்தியாயமுற்றும்.

ஆ அத்தியாயம்-உரு-க்கு - விருத்தம்-எரும.

உசு-வது.

சிவசன்மாமுத்திபெற்ற அத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பாகடுகுதலைக்கடைச்சியர்களைந்தபனிமலர்க்குதட்டிமோட்டெ ருமை,நாகிளங்கமுகினறுநிழற்றுஞ்சுநந்திவாற்றன மேனுநாட் டில்,வேகவெஞ்சிலைக்கையரசமோத்தெடுப்பவிருத்தகாளப்பெய ர்மருவி,யோகையோடுலகமொருகுடைநிழற்ற வுனதடிப்படுத் திவீற்றிருப்பாய் ... ... (க)

ஒண்டொடியனங்கலேகையேமுதலா வொருபதினாயிரமகளி ர்,வண்டுபாண்முரலுநறுந் தொடைகிடந்தவளரிளைவனமுலை ணந்து, தெண்டிரையமிழ்திற்கனிந்தமென் மதலைச்சிறுவர் முந் நூற்றுவர்ப்பயந்தாங், கெண்டிசையரசரிடுதிறையளப்ப விருநி லம்புரந்திடுநாளில் ... ... (உ)

சங்கைதீர்ப்படித்து காவடிகொணர்ந்தகலைமறைமுனிவர்திற்பர
வி, மங்கையோர்பாகத்தண்ணல்வீற்றிருக்கும் காசியில்வளனெ
ழித்துரைப்பத், தங்குமுற்பவத்தினறிவுவந் தெய்தித்தடங்கணீர்
வாரவுள்ளெகிழ, விங்கியாமுரைத்தயாவையுங்கருதி யின்பவாரி
தியினடந்தனையா ... ... (௩)

காவடிகொணர்ந்தமறையவர்க்களப்பில்காசொடுமிருநிதிவழ
ங்கிக், கோவடுசுடர்வேற்றிறல்கெழுமகற்குக்கொழுங்கதிர்மணி
முடிசூட்டிப், பேவருதடங்கட்செய்யவாயணங்கலேகையோடின்
னருள்சுரக்கு, மாவடுநோக்கிபங்கன்வீற்றிருக்குங்காசியினெல்
லையின்மருவி ... ... (௪)

அருமறைக்கிழவர்முகந்துகொண்டேக வளப்பருநிதிபலவழ
ங்கி, யிருவினையுடைக்குமிலிங்கமொன்றமைத்தாங்*ஈர்ம்புனல்
வாவியொன்றகழ்ந்து, திருவமர்செம்பொற்றினகரமியற்றித்திரு
விழாநடத்திடுமெல்லை, யுருவவார்சடில திலவுவெண்ணீற்றெரு
ருசிவயோகிவந்தடைவான் ... ... (௫)

அடைந்தநீயாரையணங்கிவ்வளியார்கொலாலயமியற்றினரியாவர்
தொடர்ந்தவல்வினைவே ரறுத்திடுமிலிங்கப்பெயரொதுசொல்லு
தியென்ன, மிடைந்துவண்டறைதார்விருத்தகாளப்பேர்வேந்தனி
யான்மென்சிறையறுகாற், குடைந்துமிழ்ந்தருந்து பூங்குழலிவ
ளென்கோமளைக்கிழந்திமற்றுமால் ... ... (௬)

திருவமரிலிங்கப்பெயருணர்ந்திலன்யான் சினகரமியற்றினன்
சிவனே, யரியநற்றவஞ்செய்முனிவரவென்று மன்புமீக்கூர்த
ரவிந்தக், குருகுபாய்தடத்தி னீர்முகந்தளித்தியென்னலுங்கொ
ணர்ந்துதீரவிப்பப், பருகலுங்கிழவத்தன்மைநீத்தெண்டோட்ப
வழமறையந்தணனுகி ... ...(௭)

திற்றலுமுன்னைக்கிழவுருநீத்துத்திருமலனுருவினையெடுத்த, தெற்
றெனமேலாடுபிலாநகைகோட்டிமிங்கிவண்முற்பவமதனிற், கற்று
ணர்சுபாசுப்பெயர்மறையவன்றன்கன்னிகைசுபானனையென்பா
வற்றவம்புரியுநயித்தருவிவளைமணந்துதன்னுளலந்தனனால்(௮

கைம்மையாயிவளுமந்நெறிவழா துகடவுளர்ட்பேணியெஞ்
ஞான்று, மும்மையினேற்ற வருந்தவப்பேற்றுலுரவுத்தோள்வ
ழுதிதன்மகளா, யிம்மையினுதித்துன்மனைவியாயினணி யிறந்த
முற்பவத்தினில்வளங்கூர், செம்மைசேர்மதுரா புரியினுன்ம
றைதேர்சிவசன்மனெனும்பெயர்தரித்தாய் ... (௯)

---

* ஈர்ப்புனல்-செயப்பாட்டுவினை.

வளங்கெழுமாயாபுரியினி லுடலமாய்ந்ததால் வைகுந்தமத னிற், களங்கனிவண்ணனடிமலர்த்தொழுதுகழிபெரும்போகங்க ளுகர்ந்து, விளம்பருஞ்சேடபுண்ணியமதனா னந்திவாற்றனமெ னவிளங்குந், துளங்கலிறேயத் தரசனாய்த்தோன்றிச் சுரிகுழ லோடுமிங்கடைந்தாய்... ... ...(ய)

வேந்தநீ யமைத்தவிலிங்கநன் னாமம் விருத்தகாளேசுரமாக வாய்ந்தநன்மலராலருச்சனை புரிந்தோரரும்பெறன் முத்தியின டைக, மாந்தளிர்மேனி யணங்கொடுநீயும்வருகென மலர்க்கரம் பற்றிப் பூந் துணர்க்கொன்றைவெறிமணங்கமழும்புராரிதன்னிலி ங்கத்திற்புகுவான் ... ... (யக)

என்றவர்கூறவருமறையோனுமீர்ந் தழாய் மாயவன்பதத்திற் சென்றினிதடைந்துபெறலரும்போகந் திளைத்தபினந்திவாற்றன த்தில்; வென்றிவேலிறையாய்க்காசியிலடைந்து மேதகுமுத்தி யெய்தினனென், றின்றமிழ்முனிவன்விழைவொடுமுலோபா மு த்திரைக்கினிதியம்பினனால் ... ... (யஉ)

உச-வது-சிவசன்மாமுத்திபெற்றஅத்தியாயம்-முற்றும்.

ஆக அத்தியாயம்-உச-க்கு-விருத்தம்-எஉஉ.

உரு-வது

அகத்தியர்முருகவேளையடைந்த அத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொருவருகற்பிற்பன்னி யோடின்னபுகன்றசீரருந்தமிழ்மு னிவன், சரிதையானின்னுமுரைக்குவலென்றதவமொருவடிவெ டுத்தனைய, விரிதருகேள்வி வியாதன்முன்னுரைத்தவண்ணம்யான் விளம்புவலென்ன, வருமறைக்கிழவ னனையநன்முனிவர்க்கரு ளொடுஞ்சூதனுண்டுரைப்பான் ... ... (க)

துயிலியல்கன்னிக்கற்புடைப்பன்னிதன்னொடுந் தூய்மறைமுனிவன், மயிலினமிகவுமுயர்திருச்சயிலம்வலங்கொடுமழலையாழ்மிடற்றக், குயில்குடைந்தாடமுகைமுறுக்குடைந்துகோங்கவிழ்ப்படப்பையூடேகி, யயிலுடைக்கடவுளினிதுவீற்றிருக்கு முலோகிதவனாமருங்கடைந்தான் ... ... (௨)

அன்னலங்குடுமிக்கவிழ்தலையருவிகொழித்திடுமறையுரலதனில், வன்னவான்முகத்துக்கொடிச்சியர்யானைமருப்பினுலவணமிடிக்குங், கன்னகன்சாரற்கா டெறிந்துழுநர் காழகில்சுடுபுகைதவழ, விண்முகில்வெதும்பிவெய்துறைபிலிற்றமீயுயர்பனிவரையிவர்ந்தான் ... ...(௩)

குலாகடல்வயிறுகிழிய வேரோட்டுங்கோடுயர் மாமுதறடிந்து,வளாயகடுங்கிளையமாட்டியநெடுவேல்வானவர்க்கிறைவனைநோக்கி,யிருகணீர்வாரமெய்ம்மயிர்சிலிர்ப்பவென்புநெக்குருகநெஞ்சுவந்து, முருகுகொப்பளிக்குநறுமலர்தூவிமுழுதுணர் முனிவனேத்துவனால் ... ... (௪)

முருகுவாய்மடுத்துக்கோடி வண்டரற்றுமுளரியந்தவிசுறைகடவுட், கரியநான்மறையின்பொருடெரிந்துணர்த்தோ யாய்ப்பிழிக்குறாத்தளியிலிற்றுந், தெரியல்சூழ்கிடந்த பன்னிருதடந்தோட்செம்மலேயெனவெடுத்தேத்திப், பொருவருமமரர்மணிமுடிபுரிஞ்சுபூங்கழல்சென்னிசேர்த்தினனால் ... (௫)

தொழுதலுமெழூ சென்றவன்முகநோக்கித் துகிரொளிதடந்திரைப்புனரி,முழுவதுங்குடங்கை கொண்டினிதருந்து முனிவரவமரர்வத்திரப்ப, வொழுகொளிப்பரிதிபோக்கற நிவர்ந்தவுயர்வரையிருநிலத்தடக்கி,'விழைவொடும்போந்ததுணர்ந்தனனிருத்திவிளம்புவலெனவிவைவிளம்பும் ... ...(௬)

பாடகத்தொடர்ச்சிப்பழைவினைச் சிமிழ்ப்பப்பற்றறவெறிந்துவிடலிக்குஞ், சேடமைகாசியுறையுநர்மேனி தீண்டினும்பவக்கடலுழந்தார், நீடுயர்தவமாண்டியற்றியீண்டடைந்தாய்நின்னிகரியாரெனவியவாத், தாடொழுமுனிவன் மேனிதைவந்துசரவணமுபர்த்தசேயுளப்பால் ... ...(௭)

திறந்தடைப்பில்லாவாயிலோரொன்பான்செறிந்ததோற்றுரு
த்திரியினானு, முறைந்திடும்பிராணவாயுவாதாரவுயிரஃதொருவுண
தல்வியப்பன், றறைந்தமற்றதனிற் றங்குதறானே யதிசயமென்
பதையுணர்ந்தாங், கறங்குநீர்க்கங்கைக்காசிமாநகராயொருவுதல்
கழிமடனாமால் ... ...(௮)

அவிசொரிந்தழலிணைம்புலனடக்கிய தன்பயன்விழைவுறுதோ
ங்கு, மிவுளிமாமகங்களளப்பிலவியற்றியென்வகையோகமாற்றி
னருங், கவையடிப்பொறிமான்கன்றுகைக்கொண்ட கறைமிடற்
றெந்தைவீற்றிருக்கு, நவையறுகாசிகாசியென்பவர்போ னவில
ருந்துறக்கவீடடையார் ... ... (௯)

என்றினிதுரைத்துக்காசிமாநகரா யிதயபங்கயத்தினிலிருத்தி
க், குன்றெறிசுடர்வேற்குரிசில்கண்முகிழ்த்துக் குழைவொடு மி
ருத்தலுமமலன், மன்றலங்கூந்தலுமையொடு முரைத்தல்கவான்
மிசைவதிந்துநீகேட்ட, தொன்றறவுரைத்தியெனமுனிகேட்ப வு
ருள்பகந்தாரவனுரைப்பான் ... ... (௰)

மாயிருஞாலமெறிபுனற்செந்தீவளியுயர்வானகமுதலா, மேய
தத்துவங்க ளனைத்தையுங்கடந்தவிண்ணவனினிதுவீற்றிருக்கும்
பாய்புனற்கங்கையாறுசூழ்கிடந்தபகர்வருங்காசியின்பெருமை,
யாயிரமுகத்தானுரைப்பரிதென்றாலறுமுகத்தெங்ஙன்யானுரைக்
கேன் ... ...(௰௧)

நளிபுனனகரின்மேருற்றமு மதற்குநவையறுகாசிமாமயான
ம், வளமலிவாரணசிபுகழுருத்திர வாசமானந்தகானகமென்*
றுளமகிழ்ந்துரைக்கும்பெயர்புணர்ந் தனவுமுயர்மணிகன்னிகை
வரவுந், தெளிவுறவுரைப்பல்கேட்டிநீயென்னாச்சேவலங்கொடிய
வன்புகல்வான் ... ...(௰௨)

௨௫-வது-அகத்தியர்முருகனையடைந்த
அத்தியாயம்-முற்றும்

ஆக அத்தியாயம்-௨௫-க்கு-விருத்தம்-௭௱௪.

௨௫-வது

மணிகன்னிகையின்சிறப்புரைத்த அத்தியாயம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இருபெருஞ்சுடரும்வானத்தியங்கிய கோளுநாளும், விரிதரு
புவனமியாவும்விளங்குதத்துவமுநேமி, யரியயன்முதலாவுள்ள
வமருங்குணங்கண்மூன்று, முரைசெயற்கரியவித்து நாதமு
மொடுங்குங்காலை ... ...(௧)

வாக்கொடுமனத்துக்கெட்டாவயங்குபேரொளியதாகிப், போ
க்கொடுவரவுமில்லிப்புனிதமாயேகமாகி, நீக்கரும்வியாபியாகிநி
த்தமாய்ச்சித்தாய்வைகு, மேக்குயர்பொருட்கிரண்டாம்விச்வச
யொன்றுநித்ததன்றே ... ... (௨)

அருவமாயேகமாய வரும்பொருளருளினாலே, ருருவினைய
லமைத்தநிந்தவுருவம்யான்யானேயார்க்கும், தெரிவரும்வியாபி
யாகிச்சித்துமாயெவரும்போற்றும், பொருவருமாதியாகியழி
வில்லிப்பொருந்துமேவனால் ... ... (௩)

ஏகனாயிருக்குமெல்லையென்னினீங்கரியளென்று, மோகமில்
பிரதானையென்றமொழிபிரகிருதியென்றும், போகமேபுரியும்
புத்திதத்துவச்சென்னியென்று, மோகையின்மறைகள் கூறுமு
னையினியளித்திட்டேனால் ... ...(௪)

பன்னெடும்பூதமெல்லாம்படைக்குமுன்பவளச்செவ்வா,யுன்
னெடுமினிதலைவகவொளிதிகழ்மஞ்சமாக, மன்னுமிக்காசி தன்
னைவகுத்தனனென்னவெந்தை, யென்னமரன்னையோடுமினிதெ
டுத்தியம்பல்செய்தான் ... ... (௫)

உடைநிலாப்பரவையேழுமுடைந்துயரண்டகோடி, யடைவு
கெட்டிறந்தஞான்றமலனுமுமையுமாக, விடலரிதாகியீங்குவீ
ற்றினிதிருத்தறன்னு, விடுபெயரிதற்குநாளுமவிமுத்த மென்பர்
மாதோ ... ...(௬)

பொருவருமறைகணான்கும்புனைந்துலாயென்றுகூறு, மருளு
டைமாந்தர்க்கித்தமறை மொழியுரைக்கிற்றீதாந், திருவமர்காசி
நாளுஞ்சிவானந்தமளிக்குமாற்றாற், பெருகுமானந்தகான மெ
னப்பெயர்பெற்றதன்றே ... ...(௭)

பொன்னவிர்கடுக்கைவேய்ந்தபுளிற்பிளைந்திங்கட்கண்ணி...*
மூன்னவன்பின்னுமற்றோர்புருடனைமுறையினல்க, மன்னியவி
ச்சையாற்றன்வாமபாகத்தைநோக்க, மின்னகுறிகிரியேந்தும்வி
ண்ணவனுதித்தானன்றே ... ... (அ)

தண்ணறும்பூவைவண்ணன் றூமனாவதனநோக்கி, நண்ணுநின்
பெயரொஞ்ஞான்று நாரணனாகமற்று, னுண்ணிகரூயிர்ப்புவேத
மவற்றினுலெவையுமோர்கென், றண்ணலுமுலகம்பூத்த வணங்
கொடுமறைந்துபோனான் ... ... (கூ)

ஐயனதாளைசென்னிகொண்டலர்கமலக்கண்ணன், கையுறு
நேமியாலோர்கடிமலர்வாவிதொட்டு, மெய்புறு வேர்வுதன்னு
னிறைத்தனன்கரையின்மேவி, மையிலைந்தபுதமியாண்டு வால்ற
வமாற்றினனே ... ... (௰)

சேட்டிளம்பரிதியன்னதிருமணிகிடந்தமார்ப. வீட்டியதவத்
தைநோக்கியிளம்பிறைக்கண்ணியெந்தை.பாட்டளிக்கூந்தற்செ
வ்வாய்ப்பனாயொடுமினிதினெய்தித், தோட்டலரிதழித்தண்டா
ர்ச்சுடர்முடிதுளக்கிச்சொல்வான் ... ... (௧௧)

முருகவிழ்துளவத்தண்டார்துயல்வருமுழவுத்திண்டோட், டி
யர் திங்களுமேழாமிடத்தில்வான்கதிரு, மொன்றுபவட்டின காலத்
தொளிகறுத்தும்பொற்கென்று, நின்றதோருருக்காணிஃநீங்குமுயி
ர்மூவாண்டில் ... ... (௪)

மும்மலமுமியல்புதிரிந்தறக்குறையின்முடிபுமுயி, ரம்மவொ
ருபருவத்திலாகாயந்தனிற்கரிய, மைம்மதவாரணந்தோன்றின்மறிந்
திடுவன் மதியாதிற், றம்முடலமலையாமல் நிழலலையிற் சாவணித்
தாம் ... ... (௫)

வாயினிடை நீர்ப்பெய்து வான்றுளிசிந் திடவுமிழின், மேயத
னுத்தோன்றுதேல் வீந்திடுவன் மதியாறி, லாயகிழிந்திடுங்காலமா
றுமதியளவை யெனிற், றூயநிறமோரைந்துஞ் சுவையாறு முறை
பிறழும் ... ...(௬)

அருந்ததிராகுதி துருவனணிமூக்கினுநிழற்றைப், பொருந்
துமுபர்விண்டு பதம்புருவநடுக்கட்கடைகள், திருந்தியிடமாதுரு
மண்டல மாகுமிவை தெரியா, திருந்திடுமேற் சின்னாளில் மற
லிநகர்க்கெய்துவரால் ... ...(௭)

இதழ்நாக்கு மிடறிவைக ளிரமறப்புலர்ந்திடுமேல், மதியாறி
ன மன்பகட்டின் மணியோசை கேட்பரா, லிதடுநாப் பல்லண்ண
மொழுகுதா றறக்கரப்பின், சிதைவருயிர்மதியாறிற் றென்புலத்
தோர்விருந்தாய் ... ... (௮)

கர்வாளிறையிர்புறத்த வோற்றிகலை யிடைவிழிற், றீர்வருயிர்சி
ன்றுளிற் பிழைரைங்கைக்லிவற்றி, னொடிற்றுயா துநீங்குமேன் மு
ய்மதியிற், காரர்வெம் பகடுலைக்கு மறலியூர் கடிதடைவார்...(௯)

சேற்றிடையின் பிதித்தவடிச் சுவடுசிதைவுறத்தோன்றி, னே
ற்றெருமைக் கடும்பாகனெய்து முரணித்தாளு, மாற்றுருநீர் கண்
ணாடி நேர்நோக்கிற்றலையவற்றிற், றுற்றிடாதெனிலாவியொரு ம
தியிற்றுறப்பால் ... ... (௰)

இபற்கைமதி பிறழினிர விற்றிரவிற்காணினுயர், முயற்கள
ங்கமதியிரவியோ ரிரண்டாய் முன்றுறன்றிற், பயக்குறுநன் பகலி
னுடுத்தெரிந்திரவு தெரியாதேல், மயக்குதமன்றமரெதிரோ வருவிரு
ந்தாய் செல்குவரால் ... ... (௰௧)

நாற்றிசைய மித்ரேவிற்றுறன்றிடினன் பகலிடையிற், றுற்
றுறவெம்பெயாடித் தாருகல்லிறுபர்மரனி, மேலற்றுயர் கந்திருவர்
நகரெதிர்ந் திடிலோர்திங் கடனிற், கூற்றமவனுவிதனைக் குடியாம
லொழியுமே ... ... (௰௨)

குடங்கையாற் செவிபுதைப்பிற்கு மிருமொலிகேளாதேற், ற
டம்புயமூட்டலமுழுதற் நழித்துள்ளோர் சாம்புவரே, லொழிந்திய
மெய்யினர்மிசவும் பருப்பரோல்மதியொன்றிற், கடத்திடுவர்வைத
ரணிநதியினைத்தங்காற்புணைபால் ... ... (௰௩)

தனதுநிழற்றென்றிசையிற் றனிதோன்றிலுருமெறியுஞ், சனி
ஞாலவெஞ்சினத்த கதம்பழுதிகாற்செக்கண்ணைப், டணைவகிர்ந்ததெனப்
பனைத்தபடர்கோட்டப் பகடூர்ந்து, அவ்வில்வருகொடுமறலியெறி
கயிற்றுவக்குண்பார் ... ... (௰௪)

பேய்பூதம் நரிகழுதை யவுணரிரக் கதர்பிறவ்வு, மாய்துவிக்
கருங்காக்கை பருந்துருக்கபுலிசெந், நாயேற வலைவதனைத்தி
ன்னைக் கனவுதனிற்காணின், மாய்வரோர்பருவத்தின் மறலிகதைக் கிரை
யாக ... ...(௰௫)

செய்யமலர் செய்யவரி செஞ்சாந்தமிவைதமரு, மெய்யிலணிந்திடக்காணில்விளம்புமதியிருநான்கி, லுய்வதிலர்புற்றதனிற்பூபதிற் றுயர்துகளிற்,கையறவோடுயிர்துறப்பாவையேற்கக்குருக்காணில் ( )

என்னெனைத்தலை முழுகமயி ரெறிந்திடவெங்காயிவர, தன்னை ருந்தென் புலத்தொருவர் கொடுபோக வுயிர்நடத்தோர், பன்னி யதம் மேலைமுனி தருபுற்சுமக்க மற்றைக், கன்னருந்தக்குருக் காணிலோர் மதியிற்கழிவரால் ... ... (௰௭)

சரியகுறள்மடந்தைதனைப் புல்லவுபசருந்தாதி, லுருவமைத் தகைதாங்கி யொழுகுகருந் துகில்வீக்கி, மருவுகருதிறத்தொரு வ ன்றனைக்காண வருகனவு,தெரிவுறக் கண்டவனுவிதிங்களொன்றிற் க ழிந்திடுமால் ... ... (௰௮)

குரக்கிவர்ந்து குணபாலிற்செலவயரக் கொடுங்கனவு, தெரிந் திடக்கண்டிடி லாவிசிதைவர் நாள்மூவைந்தில், விருப்பியளிக்குனே ரளியாவிடில்மிகவு மளியாதோர்,பொருந்தவனித் திடிலாவிபோ ன்றிடுவர் சின்னாளில் ... ...(௰௯)

இன்னுமளப்பிலவாய விறந்துபடுகுறி யவற்றில்,மன்னியிடுகு றியோர்ந்து வானிருஞ்சிடர்தோங்கிப், பொன்விழுதுவிட்டனைய புரிசடையோனினிதுறையுங், கன்னியெயில்புனைகாசி கடிதனடைந் திடல்வேண்டும் ... ... (௨௰)

வேறு.

என்றுமலையத்தமிழ் முனிவனினிதுகேட்பக் குருகுபெயர்க், குன்றமெறிந்தசுடரிலைவேற் குமாரனுரைத்தா னெனத்தெரிந்து, ம ன்றமறைக ளொருநான்காய் வகுத்தமுனிவற்பணிந்துபுலன், வென் றருதல்முனிவருவந்தெருளுமாறு விளம்பினனால் ... (௨௧)

௪௧-வது காலமறியுமத்தியாய முற்றிற்று.

பூர்வகாண்ட-முற்றிற்று - ஆக விருத்தம்- ௩௨௱௰௩.

அவிமுத்தேசன்கதையுரைத்த

அத்தியாயம்.

சீர்கொண்டமலரயனுந் திருமாலுங்காண்பரிய, வேர்கொண்டபேரொளியை யெளியேன்றன்னுள்ளத்து, நீர்கொண்டகாசியினு நிலவுபழமறைக் கொழுந்தைக், கார்கொண்டமணிமிடற் றெங்கண்ணுதலை வழுத்துவாம் ... ... (௧)

வேறு.

தேசுறுஞான மளப்பிறர்யோகஞ் செய்திடினலதுசேர் வரிதாற், காசியினடையிற் கணத்தினில்முத்தி யெய்தலாமெனக்கரைந்தனையான், மாசிலந்நகரில் விடாதுறைபாமன் கதையினைவழங்கென முனிவன், பேசலுமவுணரிரத்தமுண்டொளிறு பிறங்குவேற்குமரனுங் கரைப்பான் ... ... (௨)

மற்றையதலங்க ளெவற்றினுந்தவத்தால் யோகினுல்மருவருமுத்தி, பெற்றிடல்வேண்டுங் காசியில்வாளா வுறைந்திடில்முத்தியாம் பெட்பி, னுற்றவணிங்கா வுறைதலேயோகமொன்ற மலரிடுவதேதானங், கற்றையங்கதிர்கால் முத்திமண்டபத்தி லிருப்பதேகருதருந்தியானம் ... ... (௩)

அளப்பருங்கால மைந்தழல்நாப்பணருந் தவம்புரிந்தவர்பெறும்பே, றளத்தினிலின்புற்றுச்சிவனிசியேகா தசியினிலுண்டிநீத் துறையிற், களிச்சுரும்பார்த்தறுங் கடுக்கைபந்தெரியற் கண்ணுதலளிக்குநின்போல, வளத்தநற்காசி யிரித்திறைவருத்துங் கதையினைக்கேளென வழங்கும் ... ... (௪)

அருமறைக்கிழவன் முன்னமோர்பிரமகற் பத்திற் சுவாயம்புமனுவா, மொருபெருந்திகிரி மன்னவனிறப்பவறுபதாண்டுறைபெயலின்றிப், பருவரலுழந்தாங் குலமெலாங்காடாய்ப் பயின்மகவின்றிநன் னிலனம, திரிசருக்கமலப் பொகுட்டினிதிருக்கு மறையவன்சிந்தையி லினைத்தான் ... ... (௫)

ஆழிபொன்றுருட்டி புலகெலாம்புரக்கு மரசனாயின்றி யிவ்வுலகந், தாழ்துயருழந்த தெனமனத்தெண்ணித் தவறில்சீர்மனுகுலத் துதித்த, வூழிவெப்பருதி பனையவேற்றடக்கைப் புரஞ்சயனென்றுலகேத்துந், பாழிபந்தடந்தோள் மன்னவன்காசிப் பதியினிற்றவஞ்செயக்கண்டான் ... ... (௬)

காண்டலுமரசன் றவத்தினைவியந்து கதிர்முடி துளக்கிநான் மு
கத்தோன், மாண்டவிவ்வுலக மனைத்தினுநீயே புரந்திடல்வேண்டு
மென் றுனக்குத், தூண்டுதல்செய்யா மணிவிளக்கன்ன சுடரிழைய
னங்க மோகினியைச், சேண்படர்பருதி சிரமணிச்சூட்டுப் பஃற
லைச்சேடன்வந் தளிப்பான் ... ... (௭)

மாயிருஞால மனுநெறிவழாது மன்னநீகாத்தலால் நினக்கா
ங், காய்மணிக்குட்பைதெய்வமென்சாந்தமைந்தருநறுமலரனைத்து
ஞ், சேயுயர்விசும்பினமரர்நல்குதலாலுயர்திவோதானனும்பெயரு
மெய்வுறங்கலைகள் முழுவதுமளித்தே மேய்பலோடிருத்தியென்
றிடலும் ... ... (௮)

தாமலர்த்தவிசிலரசுவீற்றிருக்குஞ்சதுமுகற்றெழுதியான் கே
ட்ட, காமுறுவரமொன் றளித்தியேலுலகங் காக்குவலெனவுள மகி
ழ்ந்து, யாமதுதருது மென்னலுமமரர் விஞ்சையர்கின்னர ரியக்க
ர், தூமவெந்தழற்கண்ணுரகரிந்நகரந்துறந்துதம் பதிபுக வே
ண்டும் ... ... (௯)

என்றலும்வழங்கிச்சேட்டிளங்கதிரினெரிகதிர்மணிமுடிசூட்டி
க்,குன்றுறழ்திணிதோள் மன்னவனமரர் குழுவினைத்தனித்தனி நோ
க்கிச்,சென்றுநும்பதியிற் போகெனமுரச மறைதலுஞ்செழுமறை
க் கிழவன். பொன்றிகழ்கடுக்கைப் புரிசடைப்பரமனினிதுறைசின
கரம்புகுந்தான் ... ... (௰)

அடிதொழுதேத்தும் விரிஞ்சன்முன்றோன்றி யலங்குநீர்க்கா
சியங்கடவுள், குடுமிவான்றோயுமந்தரமிழைத்த தருந்தவமாங்க து
குறுகி, பொடிவில்சீர் வரங்க ளுதவுதல்வேண்டு மொல்லையிலெழுக
நீ ரென்ன, விடையிவர்ந்தயன்மால் நந்தியேமுதல விண்ணவர்சூழ்
வரவெழுந்தான் ... ... (௰௧)

கண்களுமனனுங் காசியிற்கிடப்பக் கறைமிடற்றெந்தைபா
ண்டேக, விண்புகுகுடுமி மந்தரந்தாழ்ந்து மென்மலர்தூய்மகிழ்ந்
தேத்தப், பண்களித்தொழுகு மென்மொழிபாகன் விழைந்தனபக
ர்தியென் றிடலு, மொண்சுடராகி யாவதுமுணரு முனக்குயானுரை
ப்பதொன் றுண்டோ ... ... (௰௨)

கங்கையம்புனல்சூழ் காசியம்பதியிலுறை வதுபோற்றுசத்தி
விற், றந்துமென்னிடத்து முறைந்திடல்வேண்டும் யாருமத்தனிநக

ர்போலப், பொங்குசீரோடும் பொலிந்திடல்வேண்டுமென்றனும்
பொழிகதிர்நிலவுந், திங்களங்கண்ணிப் புரிசடைமறையோன் சிந்
தைகூர்ந்திருந்திடு மெல்லை ... ... (௰௩)

மலரயன்வணங்கி மதியவிர்புனைந்த வரதநின்னருளினா லணிப,
னுலகெலாமமைத்தேன்காக்குநரின்றியுறைபுயல்வறந்தனவதனா, லி
லருவேற்றடக்கைரிபுஞ்சயன்காக்கப் பணித்தனனங்கயலிமையோ
ரலைபுனற்காசி யொரீஇத்தம் பதியிலடைந்திடி லனிப்பனென்றுரை
த்தான் ... ... (௰௪)

அவ்வரமளித்தல்வேண்டு மென்றிறைஞ்சமைந்தரவனை யினுக்க
ளிப்பா, னிவ்விடத்துறைந்தேம் யாமுமாங்குறையு மிமையவர்தத்த
ம்பதியிற், செய்வனேயேகப் பணித்தனமென்னச் செங்கனிப்பவ
ளவாய்மலர்ந்து, நவ்விமென்னோக்கி பங்கன்மால்வரைக்கு நல்வரம
ளித்தவ ணிருந்தான் ... ... (௰௫)

அன்றுதொட்டோங்கு மந்தரவரையு முத்திமால்வரையென வ
மர்ந்த, நின்றளிர்கவர்ந்து மேற்றெழில்மேனி யேழையோர்பாக
னுங்காசி, யொன்றிநீங்குறும விபாவருமுனோர் லிங்கமொன்றமை
த்தவ ணுறலாற், பொன்றவழ்குடுமிப் புரிசைசூழ்காசிக் கவிமுத்த
மெனப்பெயர் புனைந்தார் ... ... (௰௬)

விளங்குமவ்விலிங்க மமைத்தனபின்னர்விரிஞ்சனேமுதலியோ
ர்யாருந், துளங்கொளிபிலிங்கம் பற்பலவமைத்தார் சொன்னவவ்வி
லிங்கத்தி னும, முளங்குழைந்துரைத்தோர்கருதினோரியாண்டுச் செ
ன்று தம்முயிரிறந்திடினுங், களக்கனியனைய கண்டன்வாழ்காசி யிற
ந்தவர்பெறுகதி யடைவார் ... ... (௰௭)

௪௨-வது அவிமுத்தேசன்கதை யுரைத்த அத்தியாயமுற்றிற்று.

ஆ. விருத்தம்- ௲௨௩௫.

௬௩-வது

திவோதானனோட்டிற்படுத்த

அத்தியாயம்.

விண்ணவரகன்றரசம் பதியுறைபவிரிபுனற் கங்கைசூழ்கிடந்த வண்ணலங்காசிதனிற்றிவோதான னரசுபூண்டளிக்குநா ளதனிற், கண்ணுதல்முதலோ ரவனரசிருமைகடிந்து வாய்மொழிமதிற்காசி, நண்ணியதனைத்துமென முனிமேட்பராமவேற் பண்ணவனுணைப்பான் ... ... (௧)

நாகிளந்திங்களவை நிலாமுகிழ்க்குநளிர்சடை வானவன்முதலோர். போகியபின்ன ரிருநிலமுழுதும் பொதுவறவொருகுடை நிழற்றி, வேகவெஞ்சிலைக்கைமருவலர்க்கடந்துவிளா வளந்தருமலர்ச்சோலை; மாகமூடறுக்குங் கொடிநெடுவீதிமாநகர்க்காசியி னிருந்தான் ... ... (௨)

செயிரிடைச்சிற்றப் பகைதரும்விழிக்குத் தீமைகூரிதயமென் மலர்க்கும், வெயில்பொழிந்திமைக்கும்வெங்கதிர்ப்பருதிவேந்தனேபோன்றுமெஞ்ஞான்று, முயிரொனவியந்து தன்னுழையடைந்தோர்க்குயர்விசும்பகடுகிண்டெழுந்த, முயலடைகிடக்குமுழுமதித்திங்கள் முதல்வனேபோன்றும் வீற்றிருந்தான் ... ...(௩)

குனிசிலைக்குமேயி குழைபநாண்பிணித்து குருதிநீராட்டுவெம்பகழி, முனிவிலிற்றுங்கிக் கவைமிநெடுங்கோட்டு மூரிவெங்கடாக்களிறனைத்துந், தனிவிசும்பளிக்கும் வானவனென்பர் தரியலருயிர்செகுப்பதனாற், களைகுரத்புரிகோட் டெருமையேறுகைக் குங்கதழ்சினமறலியென் றுரைப்பார் ... ... (௪)

எற்றெதிர்கொடியபகை நெடுங்கானிற் செரிசுடர்வழங்குதிக்கடவு, ளாற்றல்வெஃபாசத்தொன்னலர் கடந்தவென்றியா லாழ்கடற்இறைவன், போற்றுமிவ்வுலகி லுயிரொலாமுயிரித் புரப்பவனரும்பொருளவையு, மாற்றிடாதெவர்க்குமுதவலாலளகை மன்னவனென்ன வீற்றிருந்தான் ... ... (௫)

வாட்படையுழவர் கூற்றெனத்தெழிக்கு ஞாட்பினுட்பார்க்கரும் பலத்தாற்; கோட்புலிப்போத்தி னுருபுனைந்தகூன் பிறைக்கண்

ணிபஞ்சடிலச், சேட்டிமைப்பருதியோட்டறநிவந்ததிரள்வரைப் பு
யவலியகற்றி, பாட்டளிதுதையும் பசுந்துழாய்ப் படலைப்பங்கயச்
செங்கண்மாலனையான் ... ... (௬)

எண்ணிருகலையாலுள்ளமே மாப்பவிருவிசும் பியங்கியமதி
போல், நண்ணருமெண்ணெண் கலையொடுநிறைந்த வாக்கினைநாகர்
காந் திருவர், பண்ணவருருவ சாத்துவைந்தல்லேறுஞ் பணித்தனபுரிகு
வமொல்லு, லண்ணறஞ்சிர்த்தியா யிரம்பகுவாய்ச்சேடனையன்றிய
ருரைப்பார் ... ... (௭)

நனந்தலையலக மொருகுடைநிழற்று நாளின்மேற்கிள்ளையந்
தீஞ்சொற், கனிந்தமுதொழுகும்பச்சிளங்கழைத்தோட்கருங்கயல்ம
ருட்டுவாட்டடங்கண், மனங்கவருருவச்செழுங்கொடிப்புருவவாளா
க்கூட்டிகழ்க்கனிவா; யனங்கமோகினியைப் பஃறலைச்செஞ்சுட்ட
ணிசெழு சேடன்வந்தளித்தான் ... ... (௮)

ஆங்கவடனை வேட்டிள மூலைப்போகமருந்திமற்றிவணிகர்வன
ப்பிற், பூங்குழைமாதர்பலரொடு முயக்கிப் பொற்பொடு புதல்வ
ரைப்பயந்து, வாங்கிருஞ்சிலைத்தோட் புரவலன்புரப்ப மழைவள
ஞ்சுரக்குநன்னாட்டி, னீங்கரும்பெருமைதன்னை யீங்கெவர்க்குமிற்
றென நிகழ்த்துமாறரிதே ... ... (௯)

கிள்ளையங்குதலைமொழி யினுங்கனிந்தகேழ்கிளாமுதுதமிழ்தீஞ்
சொ, லெள்ளிழையவரி லருந்ததிக்கற்பின்வழியினொருவருமில்லை
வெள்ளிவெண்புரிநூல் விளங்குபொற்றடந்தோள் வேதியர் தம்மி
லெஞ்ஞான்றுந், தெள்ளிதினுணர்ந்து மறைவழியொழுகுஞ் செய்
தியிற்பிறம்பினோரில்லை ... ...(௰)

அழன்முகம்பழுத்தவாடகப்பசும்பொ னரம்வீற்றிருந்துவெ
ங்கதிர்கா, லொழுகொளிந்தடந்தோள் வேந்தரிற்பணைத்தபுயவலி
யொழிந்துளோரில்லை, முழுதுணர் கேள்வியுடைப் பெருங்கேண்
மைவணிகரில்முதலனைத்தும், விழைதவவுடைய பொருணனிபீட்
டும் விரயம்விட்டுறைகுநரில்லை ... ... (௰௧)

கன்னமூற்றெற்றத் துளைமெயிற்றகல்வாய்க்கட்செவிப்பணமு
டிக்கிடந்த, மண்மகள்பயந்த பின்னவர்தம்மிற் றந்திலைவழுவினரில்
லை, யென்றுநல்வருணத் தவருமற்றவரினிழிந்துளோர்களுந்தம
தியல்பிக், நன்னூல்நீபல்லனபுரிந்துதிநெறிநடக்குநரில்லை ()

கொடைக்கடனிறுக்குந் தடக்கைவேலுழவ னளிக்குநாடெவற்றி னுங்குறையா, வுடைப்பெருஞ்செல்வ ரல்லதுவறுமை யுழந்துளோ ரொருவருமில்லை, விடற்கருங்கற்பின் றம்மனையல்லது பிரர்மனைவிழை குனரில்லை, யிடர்க்கடற்புணையாய்ப் பிறவிவேரறுக்கு மகவிலாதுறை குனரில்லை ... ... (௪௩)

குழைமுகந்தூங்குசெம்மணிப்பசும்பொற்குண்டலவேதியர்நாளு மழல்முகத்தாற்று மருமகத்தன்றிச் செந்தலைசயருந்துனரில்லை, விழைவொடுபயத்தோர்ப் பழிச்சிடாரில்லைவெங்கவராடுனரில்லைக், கழிபெருங்குணத்துக் குரவரைப்பிழைப்போ ரரும்பொருள் கவருநரில்லை... ... ...(௪௪)

மழைமுகில்வறப்ப நிலமிசைப்பைங்கூழ் வாடினரில்லையெஞ்ஞான்றுங், கழிபெருநோயின் வருந்தினரில்லைக் கனியினுமினியமென்மழலைக், குழவியம்பருவத்திறக்குனரில்லைக் குற்றமிலொழுக்கமேயன்றிப், பழிபடுகரும மென்பதுமற்ந்து பயில்குனரில்லையப்பதியின்()

ஆறறிபுலவர் தவத்துறைபோய வந்தணர்தொழுவர்மற்றவரு, மூறொளியோசைநாற்றமென்சுவையி னொழுகிடாத்தொழுவர் மற்றவரு மீறிலாஞானப் பெருங்கடற்படிந்தோர்ப் பணிகுவரிசைத்தவத்தவரு, நீறுபூத்தலர்ந்த நெடுநிலாநெற்றி நிகரொறிமுனிவரைத்தொழுவர்()

விழுதவிட்டொழுகு வெண்ணிலாமுத்தம் விளிப்பெறுந்தெரிமணிகுயின்ற, மழகதிர்ப்பசும்பொ னெடுமுடிபுனைந்த வலம்படுதிகிரி யொன்றுருட்டி, யெழுகடல்வரைப்பு மின்னணம்வழாம லெண்பதினாயிரம்பருவம், கழிபெருங்காதல் நிலமகளுவப்பக் களைகணாப்பினிதளித்தனனால்... ... ... (௪௭)

திவிடங்கடைவாய் மடையுடைத்தொழுகு செம்மணிச்சுட்டராமுடியின், மேவலர்க்கிடந்த கனைகடலாடை வியனிலமுழுவதுமுவப்பக், கோவியல்வழாது பகைபுறங்கண்ட குருதிவேன்மன்னவன் காப்பப், பூவியல்பொதும்பர் கற்பகநீழல் விண்ணவர்புந்தியினேர்ந்தார் (௪௮)

பூம்பொறிச்செங்கட் சுரும்புவாய்நெகிழ்ந்த புதுமலர்த்தாதுமேய்ந்துறங்குந், தேம்படுநறிய நறுமலர்ச்சோலைப் பனியிருவிசும்புறை தேவர், மேம்படுமிவன்ற விருநிலக்கிழமை விலக்குவமெனக்காகமலங், கூம்புநாத்தழும்புபடமறைவடித்த தங்குலக்குரவனுக்குரைத்தார்,

விரிதலைத்தெங்கினெட்டிலைப்பொந்தைக்குடக்கனிவீழுருப்புடை
க்கா, யருவிவீழ்ந்தென்னப் புனலருந்தொழுகு மகன்பணைக்காசியினு
றையுந், திருவநீண்மார்பன் றவத்துறைச்சிறிதுந் திறம்பலனவனுல
களிக்கும், பொருவருசெங்கோ லிழுக்குறவியற்ற லெங்ஙனெனப்புந்
தியிலோர்ந்தான்... ... ... (௨௰)

பண்ணவர்மவுலியெயிற்கதிருரிஞ்சப்பழந்கழும்பிருந்தசேவடியர்,
வண்ணலங்குரவ னூழற்கடவு ளிவ்வெனிலருமகமுதல, வெண்ணரு
ங்கரும மியற்றுமாறறிய வெரிக்குழாமுழுவதுமீண்டு, நண்ணுமா
றியற்றி லன்னவன்புரியு நல்லறனிழுக்குமென்றுணைத்தான் .... (௨௧)

ஆயிரஞ்சுடிகை மணிவிளக்கேந்து மழல்விழிப்பாந்தண்மேற்கிட
ந்த, மாயிருஞாலத் தெரியெலாமழைத்தி யென்றுவண்டேறல்கொ
ப்பளிக்கு, மீயுயர்பசும்பொற் கற்பகநீழல் வேந்தெடுத்துரைத்தலு
ம்விரைவிற், காயெரிக்கடவு ளிருநிலத்தெரிகள் யாவையுந்தன்னுழை
க்கார்ந்தான் ... ...(௨௨)

கடற்பெரும்புவியி லெரியெலாஞ்செந்தீக் கடவுடன்னுழைக்காந்
ததனாற், கொடைக்கடன்பூண்ட தாழிருந்தடக்கைக் கொற்றவேன்ம
ன்னவற்குறுகி, மடைத்தொழில்வல்லோ ரழலிலாமையினால் வான்ப
டர்வெய்யவன்கதிரி, லடப்படுவனவ ளமைத்தனமென்ன வரசனுஞ்
சிந்தையுற்றிருந்தான்..... ... .(௨௩)

நம்முடைநகரி னழலன்று நளிகடற்பாரழலெவையு மம்மவோ
வமரர் புணர்ப்பினாற்காந்த தாமெனவெண்ணுறுமேல்வைச், சும்மை
நீர்வேலி யுலகினிலமர்ந்த யாவருந்தொழுதகையினராய்த்,தெம்முனை
கடந்த சினவுவேற்றுனை செழுமணிவாயிலினடைந்தார் .... (௨௪)

சுடுபொரிசிதற மெரிமுகக்கடவு ளின்மையாற்சுருங்கெடல்வளாகத்,
துடையுநற்கரும முதலவேள்விகளு மாற்றுதலொழிந்தன வென்று,
கடையளந்தறியா விடுதிறைகிடக்குங் கற்றைபஞ்சுடர்மணிப் பரு
உத்தாட், கொடிநெடுவாயில் காவலர்க்குணர்த்திக் கொற்றவன்றன்னு
ழைவிடுத்தார் .... (௨௫)

நாக்கடைப்புரட்டித் திப்படவிளக்கு நகுமணிச்சுடிகைவாளரவின்,
மேக்குறக்கிடந்த வுலகமோரேழும் விரிகதிராழியொன்றுருட்டி, கா
க்குநிக்கோயிற் கடைப்புறத்திருந்த தலைகெழுவாயிலோர் சழறத்,

நிக்கடையொழுகு சிறுகண்மாவியானைச் செம்மலுங்கொணர்கெனவி
லசைத்தான்... ... ...(௨௬)


வெயிலுடன்றுளைத்துக் கிளைத்தபொற்கழற்கால் வேந்தர்கோன்ப
ணித்தனன்வருகென், றுயர்மணிக்கொடித்தேர்தாய் வாயிலோருனைப்ப
வொல்லையின்வேந்தவைபுகுந்து, செயிரறுகமல மலரடிதொழுஞ்
சிந்தையுற்றவர்முகநோக்கி, வயிரவாட்டடக்கை புடைத்துவெண்டக
ளவாணகைகோட்டியீதுரைப்பான்... ....(௨௭)

எங்குநீர்போந்த நடுத்தழலின்றி பென்பதைபுணர்ந்தனன்செந்தீ,
நீங்கிலெங்வருணன் வளியகன்றிடிலென் நீள்கதிர்மதிமறைந்திடிலெ,
ஞங்கவருருவ மனைத்தும்யாறுகியளிக்குவேன்வெருவனீயென்ன, வீங்
குநீர்வேலியுலகெலாம்புரக்கும்வேந்தர்கோன்விடைகொடுத்தனனால்.

வெண்ணிலாக்கற்றை விளிம்புவிட்டெறிந்து விளங்குபூண்டுயல்வ
ருதடந்தோ, ளண்ணலாங்ககன்ற வமரர்தம்முருவ மனைத்துமாயரு
ந்தவப்பயத்தாற், கண்ணகன்ஞால முழுவதுந்தானே கனகனுயளித்
தனனென்னி,லெண்ணருந்தவத்தி னின்றுளோர்பெருமை யாவரோயி
சைப்பனென்றறைந்தான் ... ...(௨௯)

௪௰-வது திவோதாஸனுட்டிம்படுத்தவத்தியாய முற்றிற்று.

ஆக விருத்தம்-௩௨௰௭.



௪௪-வது

காசியின்சிறப்புரைத்த

அத்தியாயம்.

கொண்டல்தவழுமுகம்புலரா மதிதோய்குடுமிமந்தரத்தி, லண்டர் பெருமானடைந்ததற்பி னுற்றவாறுமவ்வரையிற், றண்டாவளனுமு ரைத்தியெனத் தமிழ்சேர்முனிவன்சாற்றிடலும், புண்டோய்குருதி நெட்டிலைவேற் புத்தேள்முறுவல்பூத்துரைப்பான் ... ...(௧)

குன்றிச்செங்கட்கருங்கேழல் கோட்டினகழ்ந்தசிறுகுழியை, மன் றற்பொலம்பூஞ்சினைவேங் கைத்தாதுதூர்க்கும்வாலுளைய, கன்றுசின வெங்கொலைமடங்கல்களிற்றின்மருப்பின்குருத்துடைத்து, மென்று சமெஞ்சூற்பிணாவினெடும் பெருவான்முழையின்விழிதுயிலும்...(௨)

அறைவாய்க்குழித்தகவிழ்தலைய வருவிதூங்குதடஞ்சாரற், கறவாமு லைப்பால்கன்றருந்திக் கயவாய்வேதிகண்படுக்கும், பிறைவார்கோட்டி லிருளழிந்து பெய்யுநறவப்பேராற்றின், றுறைவாய்ப்படிந்துபிடி யினொடுங் களிநல்யானைதுளைந்தாடும்... ... ... (௩)

சேர்ந்தகழல்கட்டெழிலுளைய வரிமாக்கொன்றகனக்களிற்றி, னே ந்துபிறைக்கோட்டுகுமுத்த மலர்க்குருகிலைபவெரிபுரைசெங், காந்தண் மலர்மேற்கிடந்திமைத்தல் காமர்குலமால்வரைமடந்தை, வாய்ந்தசெ ழுமெய்மலர்க்கரத்தால் கழங்காட்டயரும்வனப்பாமால் ..... (௪)

அக்கண்வானத்தினிதுறைபு மமரர்குழுவுமரம்பையரு, மக்குறவ ழ்பொற்குவட்டிழிந்து மன்றற்சாரற்பளிக்கறைமேற், றங்கிவிளையாட் டயர்தோறும் பரிந்துநீத்ததண்மலர்ப்பூங், கொங்குகமழுமந்தார மாலைநறவம்பொழித்திடுமால்... ... . (௫)

குறுங்காற்குரம்பைக்கொடிச்சியர்போனெழுகு குவட்டுமுகடே றி,நறுந்தேன்பிலிற்றுங்கற்பகத்தி னறவுகமழுமலர்கொய்வர்,புறந்தா ழ்கூந்தலரமகளிர்பொன்னந்தருவினறியமலர்,துறந்தாங்கிழிந்துபசு ந்தேறல் துற்றுஞ்செழுந்தண் மலர்கொள்வார் ... ...(௬)

வேட்டம்படருமுடக்குளமாய்புனிற்றக்குருளைவிழிதுயில, மோ ட்டுமுதுநீர்ப்புலிற்றலைய வருவிதூக்குமுறைவழ்பொற்,கோட்டிற்கெரு

டுக்கவிரூஉமொளிர் குளிர்மாமதியுமினிதுணர்வாய், காட்டுமென்னக்
குலமகளிரந் தங்கணவர்க்குருகெதாழுவார்... ... ... (எ)

சோலைக்குழைக்கன்றிறந் துருத்த சுடர்நீத்திலமு நெடுஞ்சுடினை,
யாலக்கொடுந்தியொழுகுதுளை யெயிற்றரவாவின்பணமணியுஞ், சேர
லச்செங்கட்கரும்போதத்தின் கோட்டுமுத்துமம்பரன்திருவை, மாலைப்
பெருக்காயிரமுகத்த வருவிகொழிக்குமருங்கெல்லாம்... ... (அ)

சினைப்பூவேங்கைதொடுத்தவிரல் சிதையப்புளிற்றுப்பிறைக்கோ
ழுந்தின், பனிக்கோடுழக்கவிழிந்தருவிப் பசுந்தேன் குறிப்பவெருக்
கொண்டு, கனத்தகன்சுழற்றும்பகட்டாளிப் பிணவுகுருளைவாய்க்கவ்விச்
சுனைக்கட்குவளைக்கண்பரப்புந் துறுகன்முழையிலொளிக்குமால்,()

கலைவெண்டிங்களிருந்தியங்கணைக்காற் கமலத்திருமடந்தை, மலர்
மென்சினைப்பூங்கற்பகமான் வயக்குங்கடவுண்மணிபயிர்த, மிலவச்
செவ்வாயரமகளிர் யாவுமெறிநீர்திரைசுருட்டும், புலவுக்கடலைமதித்த
ளித்த தென்றலிதன்சீர்புகலவற்றே ... . (௰)

வேறு.

திருந்துபைங்கொடிக் கவன்முத்தஞ்சேர்த்திமென், கருந்தினைப்
பசுங்கிளி கடியுமங்கையர், முருந்துறழ்நகைமுழு நிலவெண்ணும்ப
மெல், லரும்பினஞ்சுனைதொறு மலர்ந்துகாட்டுமால் ... ...(௰௧)

மடிசெவிநெட்டுடற்றறுகண்வாரணம், படர்சினைக்கற்பகத்தொடித்
தபைந்தழை, துடியடிக்கயமுனியோடுங்குளிளம், பிடியினமருந்து
றப்பெட்பினல்குமால்... ... ... (௰௨)

மைத்திருடேக்குவான் முழையில்வாளராப், பைத்தலைமிடந்தொளிர்
மணியைப்பையத்தன், கைத்தலத்தெடுத்துவுங் கனலென்றஞ்சியே,
துய்த்தலைச்செம்முகமந்திசாருமால் ... .(௰௩)

களிக்கயல்மருட்டிய கருங்கண்மங்கையர், பளிக்கறைமுன்றிலி லு
ணக்கும்பைந்தினைக், கிளிக்கவராதுவா கிளக்குமோகைபாற், றளிர்த்
திடுமுளிசினைத் தருக்கள்யாவுமே..... .... (௰௪)

அகின்முருடுருட்டி வீழருவிச்சாரலின், முகிலினந்தவழ்தரு மூரி
வேழமென்; நிகலொடுந்துடர்ந்துசென் றெழுந்துகோட்டுவெம், பு
லிமுகக்களிற்றினம் போரினேனுமால்..... ... ...(௰௫)

குளனைச்சுற்றிய குறமடந்தைய, ரிளமூலைச்சாந்திடை யிழுமேறிய, தளிர்நடைக்குழவியந் தென்றல்தாழ்சினைத், துளிமதுக்கற்பகத் தாவிற்றுஞ்சுமால் ... ... (௧௬)

பூச்சுழைமிடறுசாய்ந் தாற்றாப்பொற்புடை, யோங்குயர்சாலி னுறையுங்கின்னரர், நீங்கருங்காதலி னாரம்புளர், தூங்கிசைவிணையஞ் சுருதிபோன்றதே ... ... (௧௭)

ஒருபுடைவெண்முகி லுறையவான்றளிக், கருமுகிலொருபுடை யிடக்குங்காட்சியால், மரகதக்கொடியினை வாமம்வைத்தொளிர், புரிசடைவானவன் போலும்பொற்பிற்றே... ... ...(௧௮)

நீனிறமுகிறவழ் சாரனெற்றியின், மானிளம்புனிற்றய மென்மறிகள் வைகிய, பானிறக்கதிர்விரி பளிக்குப்பாறைகள், தூறிலாமதிபலதோன்றல்போலுமால் ... ...(௧௯)

முகிறவழ்சாரலின் முத்தந்தெள்ளிநீ, டகில்சுமந்திழி சையருவி பாய்வன, யிகலுடையிராவணற் கிடைந்ததென்னெனத், திசையொளிக்கயிலையைச் சிரித்தல்போலுமால்... ... . (௨௰)

தாழ்வரைக்கிடந்தொளிர் தயங்குபன்மணி, சூழ்சுடர்விண்ணின்மேற்றோன்றுபொற்பினல், வீழ்கதிரோவியம்விசும்பிற்பூத்ததென், றியாழ்மொழியரம்பையர் வியத்திசைப்பரால் ... ...(௨௧)

இரவிகாந்தத்தழ லிடையினன்பகல், மருவியுமொளிர்மதி காந்த வான்றிரைச், சுனைபுனல்கற்குழிற் குளித்துநிற்றலாற், பொருவருமருந்தவம் புரிதல்போன்றதே... ....(௨௨)

பாய்திரையருவிகள் படுக்குஞ்சாரலிற், சேயொளிவிரிகதிர்ச் செல்வஞ்சேறலால், மீயுயர்குடச்சுனை மலர்கள்மேற்புறச், காய்கதிர்க்கரங்களாலலர்ந்துகாட்டுமால்... ... ...(௨௩)

குடவரைநெற்றியிற் குருதிவெய்யவன், படுதலுமுதயமால்வரையிற்பாயொளிச், சுடர்மதிவாயிடைத் தோன்றுபொற்பினாற், புடைமலிவிசித்தமால் களிறுபோலுமால் ... ...(௨௪)

சினைமலர்க்கோட்டிடைத் தொடுத்ததேனிறால், வினைபுரிவயிரவாட்புலிதன்மேற்செலச், சுனைதிரையருவிஞ்ம் விலக்கல்காவலன், புனைதிருட்டுடைமதித்தல்போன்றவே ... ... (௨௫)

இன்பமால்வரைதனிலிருவிசும்புறை, கனகமிர்ப்புன்குழலமர்க்கைதொழ, தனிமுதலுமறந்துறீர்த் திடம்கொள்காசியை, நினைதலுமுறதுயர் நிகழ்த்தலாவதே... ... ... (௨௬)

காசியைப்பிரிதலிற்மனற்றும்வெம்மையாற், பூரியசாந்தமேற்பெரரிந்நதன்றுகொல், மாசறுமிளமதிக் கண்ணிவார்சடை, யீசன்மேல் நிறெனவின்றுஞ்சொல்வதே... ....(௨௭)

ஊரொபொருகக்கைக்குழ் காசிமாநகர்ப், பிரிவெனுமழல்சுடப் பெயிதசெயிதழ், மருமலர்த்தாமரை வலயமெம்பிரா, னரவெனநினைத்லாலரவமாயதே .. .. (௨௮)

நீற்றொளிமேனியன் காசிநீங்கிய, மாற்றருந்துயர்க்கனல் மாற்றற்கன்றுகொல், ஏற்றிளந்திங்களைக் கிளருந்தெண்டிரை, யாற்றினைச்சடையிலின் றளவும்வைத்ததே ....(௨௯)

எரியுருவாகிய வெந்தைமேனியு, முருகிநெஞ்சழிவுற வுடன்றசுட்டதால், விரிபுனற்காசியை விடுப்பின்யாவரோ, பிரிவெனுந்தழலிடைப்பிழைக்கவல்லரோ ... ... (௩௰)

ஊழிவெங்கனலினை யொர்விக்கிடுந்திறா, யாழ்கடல்விடத்தினைத்தரித்தவன்னனும், வீழ்புனற்காசியை விடுத்தவாற்றினாற், சூழ்துயர்க்கனலையென் றரித்திடாததே..... ... .(௩௧)

மலர்தலையுலகுளோர் மருட்சிநீக்கிய, தலைவனுங்காசியைத் தணந்தவாற்றினால், நிலைபெறுநெஞ்சக மருண்டுநின்றன, லைர்பசுந்தெரியலையரவமென்னவே ....(௩௨)

மறைபயில்தக்கனன் மகளைத்தீர்துயர், பெறவரும்வரைமகட் பெற்றநீங்கினேன், நிறைபுனற்காசியை யகன்றவெந்துயர், குறையுமந்நகரவதொழிக்குமோவெனும்... .... (௩௩)

இன்னலுற்றபர்வுறும் காசிகாசியென், றன்னுமக்காசியி னுலவுதென்றல்வந், தென்னுடைமேனியி லிழுகியேகுமேல், மன்னுயிர்தழைத்திடு மென்றுமாழ்குமால்... ... ... (௩௪)

விருப்பொடும்வெறுப்பிலா விமலர்சிந்தையுந், திருப்பதிக்கெனினையென் நிமயப்பூங்கொடி, திருப்பவளக்கனிமலரச்சேண்டொடு, பொருப்புவிலந்தனைன் புரதல்மேயினன் .... (௩௫)

காசியைப்பிரிந்தவெந் துயரங்காழ்கொள, மாசறுமதிநுதல் வருந்
திமெல்லென, வீசருங்குணாத்தலுங் காசிகாசியெய், ஞாசலாடினள்
வளா மகளுருமுள்ளமே ... ... (௫௬)

கவிழ்குலநெட்டிலைக் கதலிக்காட்டிடைத், தவழ்குடவயிற்றருத்ச
கமீன்றமுள், தவிரொளிபரப்பிடு மந்தண்காசியி, னுவகையினுறை
வதற் குருத்தெறங்கேருதினுன் .... (௫௭)

தாரணிதொழுந்திவோ தாநன்றண்கடற், பார்முழுதளிக்கெனப்ப
ணித்தனாய்றவன், சீர்கெழுமமரர்பாற் சேரொனுமெதன, வோர்வர
க்கேட்டன னுவந்துநல்லினம்........................... ... . (௫௮)

அன்றுதொட்டின்றள வவனியாவையு, மன்றநல்லறநெறி வழாம
லோம்பினுன், பொன்றுறுதவத்வன் புரியினல்லதை, யொன்றமே
யாசிய லொழிக்குப்வண்ணமே... .... (௫௯)

என்றுயர்மால்வரா யினிதினீன்றருள், பொன்றவழிளமுலைக் கோ
திபூங்குழ, லொன்றியயோகினிச் சக்கரத்துடன், சென்றையம்புரி
சடைக் குழகன்கூறுவான் ... ... (௬௰)

அறந்திறம்பாதல களிக்குமன்னவன், சிறந்தநன்மனுநெறி திறம்
பிக்காசியைத், துறந்திடவியற்றுமி னென்னத்தொக்கவர்ச், கறங்கு
நீர்க்கங்கைசூழ் காசியெய்தினர்..(௬௧)

௪௪-வது காசியின்சிறப்புரைத்தவத்தியாயமுற்றிற்று,

ஆ. விருத்தம்-௩௨௧௮.

௪௫-வது

யோகினிகள்காசியையடைந்த

அத்தியாயம்.

கல்விசெயிக்குழுவர் காசியைவியப்புற், றுன்னலருமாயை
புரி யோகினிகள்யாரு முன்னையருமாதியுயி மோகம்விளைவிக்கும்,
மன்னுபலநல்லுருவு கொண்டினிதடைந்தார் ... ... (௧)

விண்ணவர்தம்மாருயிரும் வேரொடுபிடுங்குங், கண்வலையெறிந்தி
ளைஞர்மேயகடைதோறும், பண்ணொடுகொழுங்கனி பழுத்தனையவி
ன்சொல், வண்ணமகளாகியொரு வாணுதல்நடந்தாள் ....(௨)

காலனையமர்க்குவருகென்றுகடன்ஞாலத், தோலைவிடுமைக்கணுயி
ரோவியதிகர்ப்பாள், கூலமறுகிற்குமரர் கொள்கெனநறுந்தண், மாலை
பகர்மாதரி னொருத்திதனிவந்தாள் .... (௩)

முறத்திடுகநெற்குறி மொழிந்திடுவனின்னே, பெறற்கருமகப்பெ
றுவை பெட்பினுடன்முற்றுஞ், சிறப்புடைமயிற்றொகை சிலிர்த்த
தெனவோதிக், குறக்கொடியெனத்தனி யொருத்திகுறுகுற்றாள் (௪)

வேதியர்தம் முன்னணுகி மெல்லெனநடந்தே, யேதமறுகற்பு
டைய ரேனுமவர்நம்மேற், காதலுறமென்மொழி கரைந்திடுவனென்
போற், றாதியரிலென்றொரு சுடர்த்தொடிபுகுந்தாள் .... (௫)

அந்தமறுவிஞ்சையபற வோரொடுபயின்றேன், வந்தியர்மகப்பெ
றும்மருந்துளதுமக்குத், தந்திடுவலென்றுரைகள் சாற்றிமனைதோறும்,
பைந்தொடியொருத்திவிழை வோடுபடர்குற்றாள் .... (௬)

தையலொருபாகனுறை யுங்கயிலைதன்னை, அய்யமறவெள்ளிவரை
யாக்கினன்முன்னென்று, வையகமனைத்தையுமருட்டிரசவாதஞ், செ
ய்யுமவளென்னவொரு சேயிழைபுகுந்தாள்.................... (௭)

அங்கிபுனல்மாருத மடக்குவன்விசும்பிற், றங்கிடுவன்மீள்வனொரி
மைப்பொழுதுதன்னிற், கங்குல்பகல்செய்துகதிர் மாறிவருவிப்பன்,
பைங்கொடியன்னீரென வொர்பாசிழைநடந்தாள்.........|......... (௮)

விண்ணவர்மனத்தினை விழைந்திடுதிரேனு, மண்ணுலகின்வந்தவர்
மணந்திடவருத்த, மெண்ணரியவிஞ்சைகளியற்றிடுவனென்னக், கண்
மலர்குளிர்ப்பவொரு காரிகைபுகுந்தாள் .... (௯)

பாறுதொடர்வேலரசர்வந்துபடைவிட்டான், மாறழியும்வண்ணநவி
ல்விஞ்சைபலவல்லேன், றேறுநரல்லாலிவை தெளிந்திலர்தமக்குக்,
கூறுகிலனென்றொரு குலக்கொடிபுகுந்தாள் ....(௰)

கட்புலனுறுதுடல் கரப்பனொரிமைப்பின், விட்புலமடந்தையரை
மண்ணிடைவிடுப்ப,னுட்பவனுவாவன்மலைபாவனெனநொய்திற்,பெ
ட்புறாபயிற்றியொரு பெண்கொடிநடந்தாள்..................... (௰௧)

எஞ்சலில்நிலத்திடை புதைத்தபொருள்யாவுங், கஞ்சமலரங்கையி னாமலகக்கனிபோல, வஞ்சனம்வரைந்துதெரிவிப்ப வஃதொன்று, விஞ்சையெனவோதியொரு மெல்லியலணைந்தாள்.......... (௰௨)

வள்ளைபொருகாதிடை மலர்ந்தகுவளைக்க; ணள்ளியுமதாருயிரை யுண்ணுமகல்வீரொ, ரொள்ளிழையுநூபுரமு மொல்லெனவொலிப்பத், தெள்ளமிர்தமொத்தவொரு சேயிழைநடந்தாள்......... (௰௩)

கண்டவர்வியப்பவணி நீற்றொளிகனிந்த, புண்டரநுதற்கிடைபுனைந்தினியகற்றோய், நுண்டுகிலசைத்துமிக நோற்றுடலம்வாட்டு, மொண்டொடிகொலாமென வொருத்திபுகுகின்றாள் .... (௰௪)

இறந்தனநிகழ்ந்தனவெதிர்ந்திடுவதெல்லா, மறிந்திடுவன்யானென வொருத்தியகன்மாடஞ், சிறந்திடுமடந்தையர் குழாற்றெரியதீந்தெல், குறுந்துளிபிலிற்றுமயர் வோமறுகடைந்தாள்.................. (௰௫)

மாதர்களின்மைந்தர்களில் வல்லவர்களுண்டேற், சூதுபொரவம்மி னெனமெல்லுரைகள்சொல்லிச், சோதையொடுவண்டின மலம்புகுழலாட, வீதியிடைமின்னனவோர் மெல்லியல்புகுந்தாள் ...(௰௬)

மல்லன்மறுகிற்குலமறைக்கிழவர்பாலிற், கல்லுமுருகும்படிகனிந் தமுதுகுக்கு, நல்லிசையமென்புரி நரம்புளரவல்ல, மெல்லியலெனு வொருவிளக்கிழைபுகுந்தாள் ... ...(௰௭)

நீடுயர்மதிற்குடுமி நீண்மறுகுதோறு, மாடகமுறுக்கிமணி வீணை கையினேந்தி, யோடரியமைக்குவளை போலுமலருண்கட், பாடன்மகளென்னவொரு பைந்தொடிபுகுந்தாள்... ... ... (௰௮)

வேறு.

உருவமின்னனகொண்டுடன், பருவமொன்றுபடுக்கவு; மருவுகாசி யில்வைகின்றோர், திருமநீதிதணந்திலார்... ... ...(௰௯)

அங்கண்போகினிபன்னலார், மங்கைபாகனை வாழ்த்தியு, கங்கைசூழ்தரு காசியிற், றங்கியிக்க தவஞ்செய்தார் ... ...(௨௰)

வடுக்கண்மங்கைபோர் டக்கிருள், 'மித்தவேவல்வியப்பினால், முடித்திலே மலமுன்னர்பா, மடிப்படுதன்னை யஞ்சினர் ... (௨௧)

இனையரிங்ஙனமெய்தவு, மனையநாமமருந்தவன், வினவலோரும் விளங்கவெஞ், சினவுவேலிறைசெப்பினன் .... (௨௨)

இன்னநாமமியம்பினோ, ரன்னபூசனையாற்றினோர், நன்மகாரொடு நாமடாறு, மன்னிவாழ்வுறவைகுவார் ... ...(௨௩)

அரசரித்தவமாற்றிடிற், செருவில்வெற்றிதிறம்பிலா, ருருவமைத்த ரோடொன்றியே, பொருவில்வாழ்வுபொருந்துவார்... .... (௨௪)

௪௭-வது-யோகினிகள்காசியடைந்தவத்தியாயமுற்றிற்று.

ஆ விருத்தம்-௲௨௨.

§§

௪௮-வது.

லோலாதித்தன்கதையுரைத்த.

அத்தியாயம்.

மன்னுதீம்புனல் வளங்கெழுகாசியின் வேந்தன், றன்னெழுக்கினைத் தவிர்கெனவிடுத்தயோகினிக, ளின்னும்வந்தில ரென்கொலென்றிறை யுளத்தெண்ணி, மின்னுசெங்கதிர்க் கடவுளைநோக்கினன்விளம்பும் (௧)

காசிமாநகர்க் கெய்தியக்கடிநகர்புரக்கு, மாசில்மன்னவ னறநெறி வழுக்குறப்புரிகென், றீசனேவலுமடியவர்தைதொழுதேத்தித், தேசு லாங்கதிர்ப்பருதியங்கடவுளுஞ்சென்றான் ... ... (௨)

அறனிழுக்குறுமன்னவன் காசியிலடைந்து, பெறலரும்பொருள்யா தெனப் பெட்பொடுமோர்ந்து, வறியரிற்றுயருழந்துயர் மணிக்கடை தோறும், குறையிரக்குமாங் கதுபெறினுமனுடுக்குன்றயும் ...(௩)

ஈட்டுவன்பொருள் யாவையும்யாவருமுவந்து, கூட்டுணும்படியளி க்குவ மென்பதுகுறித்து, வேட்டகொள்கென விடுக்குமவ்விழை பொருளெவருங், கேட்டுவாங்குன ரின்மையாற்சென்னி கீழ்ப்படுக்கும் (௪)

தூம்புடைப்பிறையெயிற்றவெம்பணுமுடிச்சுடிகைப், பாம்படுத் தகன்விஞ்சை வலம்லனைப்பகருந், தேம்புவாரினின்றலர்வருஞ் செஞ்சடைதாங்கி, மேம்படுந்தவப்பள்ளி சேர்முனிவரின்மேவும் ()

அருள்சுரந்துயர்தருமநூன்முறைபுகன்றதனால்,வருபயன்றனைத்தெ ருளுறக் காட்டுநான்மறையின்,பொருடெரிந்தமெய்ஞ்ஞானிற்புசு தரும்பொருவி, லிரதவாதியென்றியாரையு மருட்டுவாமெய்தும் (௬)

மறைவழுத்து நாத்தழும்புற முனிவரின்மருவும், பிறையெயிற்றிள நிலவுகொப்பளித்திடும்பேழ்வாய்ப், பொறியனற்பெரும்பாந்தள்மேற்கிடந்தபார்புரக்கு, மறைகழற்றொழுங்குருதி வேலரசரினுறையும்... ... ...(எ)

அரும்பெறற்குலவணிகரினுவந்தினிதமரும், விரும்புவேட்கையின் மண்மகள்புதல்வரின்மேவுந், திருத்துநான்மறைப் பயின்மறைச்சிறுவரிற்சேரும், பொருந்துமில்லறந் திறம்பிலாமாந்தர்போன்றிருக்கும் ... ... (அ)

பைங்கதிர்க்கொடிப்படர் நெடுஞ்சாரல்சூழ்கானிற், றங்கிநற்றவப்புரிஞர் போன்மெனச்சாரும், பொங்கிருட்பிழம்பெறிசுடர் விரிபகற்போதுங், கங்குலுந்திரிந்தாற்று நற்றவருருக்காட்டும் ... .(௯)

வேண்டுநல் லுருவின்னனவெய்யவனெடுத்துச், சேண்டொடுங்கொடிப்புரிசைசூழ் காசியிற்றிரிந்து, மாண்டுமூன்றளவறநெறிதிறம்புதல்சிறிதுங், காண்டல்செல்கிலனுதலிற் கருதினனிருந்தான் .....(௰)

மூவிலைச்சுடர்முரட்படை யேந்தியமுதல்வ, னேவல்மற்றதுமுடித்திலன் காசிவிட்டினியான், போவதெங்ஙனம் புரிசடைவானவன்முனியின், வேவதல்லதை யாவரோகாக்குநர் விளம்பின்... ... ...(௰௧)

ஒரிவனேவலிற் றிரிகுநர்க்கரும்புகழுறுதாற், றிருகுசீற்றவெம்புலியதளாடையஞ்செல்வ, னருள்பெறூக்கொடும்பாவமிக்காசியினமரின், வெருவியேகுமென்றிருந்த னல்கனைகதிர்வேந்தன்... ...(௰௨)

சேட்டிளங்கதிருள் படச்செங்கதிர்பரப்பு, மோட்டுநன்மணிமுன்றுறல்விடுத்தறச்சிதைந்த, வேட்டையங்கையிற் கோடலேபோது மொன்முத்தி, வேட்டுளோருயர்காசிவிட்டயலிடம்விரும்பல்...(௰௫)

நல்லுலோலனுத்தாவியற்சாம்பனைற்றருப, னெல்லொளிக்கதிர்க்கடோற்கனேடருணனேர்விருத்தன், புல்லுகேசவன்விமலன்வானதிநம னென்னச், சொல்லுநாமமோர்பன்னிரண்டாயினன்சுடரோன் (௰௪)

மதிவடிம்பிடறுங்கொடிமாடநீண்மறுகிற், கதிர்மணிக்குலஞ்சேட்டிளம்பருதியிற்காட்டு, மதிர்தடம்புனற்காசியினடைவனென்றுசை, யிதயமெய்தலால்விளக்குலோலாதவனென்பார் ... ...(௰௫)

௪௧-வது லோலாதித்தன்கதைமுற்றிற்று.

ஆ. விருத்தம்-௧௩௩௭,

௪௭-வது.

உத்தராதித்தன் கதையுரைத்தது.

அத்தியாயம்.

மிடறுவீக்குலைபைங்காய்க்குலைவிரிதலைக்கமுகின், மடலுடைத்திடவாளைபாய்காசியின்வடபால், கடவுணல்மணிதெளித்தன வாவியங்கரையி, னடையுமுத்தராதித்தன்கதையினையறைவாம்... ... ...(௧)

உலகெலாமகிழ்விரதனென்றுளனொருமறையோன், கலவமாமயிலினிகர்சுபவிரதையைக்கலந்து, நிலவுமூலத்திருள்முதற்காறணிவிசரி, விலகும்பமொழிற்சுலக்கணைதனையினிதீன்றான் .... (௨)

குங்குமச்செழுங்கனி மெழுக்கெறிந்த மென்கோங்கிற், றங்குபூண்முலைப்பிறை யெனவளரு நாடன்னில், வெங்கொடும்பிணி நலிதலிற்றந்தைவிண்புகுத, வந்தவன் றிருமனைவியு மழலின்வீழ்ந்தவிந்தாள் (௩)

மழலைமென்மொழி மைந்தரின்மையின் மறிந்தோர்க்கு, விழுமநல்கடன் யாவையும்விதிமுறை யாற்றித், தழுவுதற்கடங் காதுயர்தடமுலைக்கோதை, யொழுகொளிக்கதி ருத்தராதபனுழையெய்தி.()

அலங்குதெண்டிரை யாமையின்கூன்புறத் தமர்ந்த, நிலங்கொளேழினு நிகரில்சீருந்தவ மாற்றுங், கலஞ்சுமந்தபூங் கற்பகக்கொம்பனுடன்னே, வலஞ்செயுந்தினம் பார்க்குமோர்தகரிளமறியே ... (௫)

கற்றையங்குளிர் வெண்ணிலாக்கதிர்பரந் தெறிக்கு, மொற்றையங்குழை யத்தணனுமையொடும் போந்து, பொற்றசும்புறழ் முலையினுள்விழைவொடும் புரிய, நற்றவத்தினை நோக்கினனன்றென வியந்தான் ... .(௬)

அலங்குபேரொளி யிளவெயில்வயிறுவாய்த்தன்ன, கலங்கிடந்தொளிர் கதிரிளவனமுலைக் கவுரி, நலங்குபேரொழிற் கன்னிகைபத்தோழி யாயெனக்கின், றிலங்குசாமரை யிரட்டுவான்றருகென விசைத்தாள்()

புரியுநற்றவ மொழிதிநீபுகன்றநல் வரங்கள், விரைவினல்குவனெனவிடைப்பாகனுண்டுரைப்பத், தருதிநல்வர மென்னவித்தவிள மதிக்கு, மரியயற்கரியாய்வரந்தருகென வறைந்தாள் ... ... (௮)

யாசில்பூண்முலைக்கவுரிதல்லேருழியாய்வருகென்,றுசில்நற்றவப்பூங் கொடிக்கவ்வரமளித்துக், காசிமன்னவன்புதல்வியாய்க்கயிலையில்வருகென், றீசனம்மதிக் கெய்துறுநல்வர மீந்தான் ... ... (௯)

இனையநல்வரமளித்துமாலயன் றெழுதேத்துங், கனைபொலங்கழற் கடவுளுங்கயிலையி னகன்றான், வினையொழிக்குமிக் காதையைவிழைவொடுங் கேட்டோர், துணையில்யாவரும் பெறலருந்துறக்கவீ டடைவார்... ... ... (௰)

௪௭-வது-உத்ப்ராரித்தன்கதையுரைத்த வத்தியாயம் - முற்றிற்று.

ஆக விருத்தம்-௲௬௪௭.

௪௮-வது.

சாம்பாதித்தன்கதையுரைத்த அத்தியாயம்.

மண்மகடன்பொறைபாற்றித் திரைக்கடலினறிதுயில்கூர் நெடியமாயன், கண்ணனெனமுழுதுலகுந் தேவகிதன்வயிற்றுதித்துக் காக்குநாளி, லண்ணலந்தாமரைத்தவிசி லரசிருக்குமறைக்கிழவ னருளினின்ற, பண்ணமையா ழிசைபயிலு முனிவனுயர்துவாரகையிற் பரிவிற்போந்தான்... ... ... (௧)

இருள்பருகிவெயில்கான்ற கடவுண்மணிகெடந்திகைக்கு மிலங்குகின்மேலாட், டிருமறுமார்பினன்புகலவர் யாவருமம்முனிவனடி சென்னிசேர்ப்ப, வுருவின்மிகவேமாந்த சாம்பன்முனிவனைப்பணியா துறைதலோடும்,புரிநரம்பினிசைபயிலு முனிவன்மணிவண்ணனுழைப் போயினனே .... (௨)

போந்தமுனிவானுவப்ப வருக்கியபாத்தியமுதல பூசைநல்கி, யேந்திழிலாசனமளிப்ப வாங்கதனின்மலரோனி லினிதுவைகிக், காந்தமணிச்சுட்டாவின் கன்பிதுங்கநடம்பயிலுங் கண்ணனேருமி,மாய்ந்த செழுமறைக்கிழவன் வேறிருந்தாங்கொருமாற்ற மறைதலுற்றான் (௩)

தந்தைதாயினும்விழை விற்றன்றுடனேயொருவயிற்றிற் சார்ந்தாரேனு, மைத்தாயினுமிகவும் வளப்புடையசொலிலவர்மேல் மட

நல்லார்தஞ், சிந்தைதடந்திடுமதனாற் சாம்பன்மலர்க்கணைமேவிற் செவ்விவாய்நம்பிரான், பைந்தொடியாரினிதமரு முவளகத்திற்றனிவருதல்பான்மையன்றே .... (௪)

என்றுமொழிந்தன்னேகிச் சின்னாளின்மீட்டுமவ னெய்திமாயச், குன்றுகொடுகணிவெறிந்த காயாம்புமலர்வண்ணன் கமலவாழ்க்கைப், பொன்றவழுமுலைமாதர் பலரோடுந்தனித்துறையும்போதுநோக்கிச், சென்றெம்வரவுரைத்தியெனச் சாம்பனொடும்யாழ்முனிவன்செப்பினானே... ... ... (௫)

சேறலருமமையத்திற் செல்றிடினம்மற்றுமுனியுஞ் சென்றிலேமேற்; கூறலருங்வெகுளியொடுங் குலமனைத்துமவைதருமுனி கொல்லுமென்னப், பாறுதொடர்நெட்டிலைவேற் சாம்பன்மணிவண்ணனுறை பள்ளிமுன்னர்; மாறுவில்லிளைவையெனச் சேறுமம்முனிவனுமாண்டடைந்தானன்றே .... (௬)

பாண்கிடந்துதேன்பிலிற்று மஞ்சியாழ்முனிவரவு பார்த்தலோடு நான்சுமக்கலாகாது வளைந்ததெனமுகங்கோட்டி நகைவெண்டிங்கட் பூண்கிடந்தமுலைமீதிற்போர்வைபசைத்தலரமளிப்புறத்தினீங்கிச்சேண்படருங்குழைமின்னின் மடநல்லார்பொற்றாளஞ்சேர்ந்துநின்றார்.

அண்டர்முகட்டரசிருக்கு மயனொடுபார்திருவுந்தி யலர்ந்தமாயன், பண்டருதீந்தொடைமகதி யாழ்முனிவன்வருகவெனப் பரிந்துவெண்ணை, யுண்டகனி வாய்மலர வினிதளித்த வாசனத்தி லுறைதலோடும், வண்டுபடுகடாயானைச் சாம்பனுந்தன்றாதையடி வழுத்திப்போனான் .... (௮)

எழிலுடையோர்முகநோக்கி யழன்முகத்தினிழுதென்ன மாதருள்ளங், குழையுமெனயானுரைத்தல் குறிக்கொண்டாயிலைபோலுங்குலவுத்திண்டோள், மழவிடையினீங்கலடைந்த சாம்பனைக்கண்டவும்மினைய மடவார்நெஞ்சின், விழைவுகனிந்தொழுகியபோல் வேர்வொழுகல்காண்டியென விளம்பிப்போனான் .... (௯)

மட்டுலவும்பசுந்துளவோன்றனித்துறைபுமமைதிதனில் வந்தவாற்றாற்; குட்டநோய்க்கடலகத்துக் குளித்தியெனச்சாம்பனுடன் கூறவன்றே, ரிட்டதழற்கொடுஞ்சாப மகன்றிடுமோதினிதருளிவுற் றிடுதியென்ன, விட்டொளிபொ[illegible]ழற்றும் பனித[illegible]னைவிரவி[illegible]ந்தாள் ... ... (௰)

இழைத்திடுதீக்கனைத்துமிசையாழ் முனிவன்புணர்ப்பென்ன வுளத்தினெண்ணிச், குழைக்கரும்பு கன்னுடைக்குந் தேறல்வழிந்தொ

றுருவயற்காசிநன்னகர், தொழத்தருசெங்கதி ரோனைவழிபடிவித்தோ
யனைத்துந்தொலையுமென்று, மழைத்தகருணையினுரைப்ப வாங்கலனு
முத்திநகர் சென்றுசார்ந்தால் ... ... (௰௧)

மருவலாருயிர்மாந்திப்பசிசத்தங்கொப்பளிக்கும் வைவேற்காளை,
யிருள்விழுங்கி வையிலு மிழுமிரவிபதமலர்க்கமலமிறைஞ்சம்லாடும்;
பெருமிபெற்றாயகல்றதவன் வழிபடலாலன்றுமுதல் பிறங்குமெய்
யோற், கருள்புரியுங்கனைகதிர்ச் சாம்பாதித்தனெனும் பெயர்வந்த
டைந்ததன்றே ... . (௰௨)

பொருவறுமிக்கதையனைத்தும் விழைவினொடுகேட்டோரும் பு
கன்றுமோரும், திருமருவுபெருஞ்செல்வத் தளங்கசனெனவுலகிற் சிற
ந்துவாழ்வர், விரிதருகூரிருள்பருகுபயிற்சிபா லன்பருளமேவுகின்ற,
விருள்பருகுமுருவாதித்தனியற்சரிதைதனையியம்பல்செய்வாம் (௰௩)

௪௮-வது - சாம்பாதித்தன்கதையுரைத்த அத்தியாயம்-முற்றிற்று.

ஆக விருத்தம் - ௩௯௰௨.

௪௯-வது.

துருபாதித்தன்கதையுரைத்த.

அத்தியாயம்.

ஈறுக்குழவிப்பிறைபலக்கலெம்மானருளாற்குந்திவயிற், றுனைச்செ
ல்வந்தழைக்தோங்கவைவர்பிறந்தாராங்கவர்க்குத், தானேர்மனையாய்ப்
பாஞ்சால் புதல்வியாகித்தழன்மகத்தின், மீனூர்தடங்கட்டுரோப
தையுமின்னுங்கொடி போல்வந்துதித்தாள் ... ...(௧)

கமலாசனத்திலாசிருக்குங்கடவுளோடுமூலகேந்த, விமையப்பாவை
க்கரும்பாகனுலகநலியுமிலாசர், தமராருயிர்வெங்களகடியத்தரும
ன்முதலோர்க்குறந்தணைபா, யமையார்தடந்தோட்டேவகிதன்வயிற்
றிவினிநிவைதரித்தான்... ... . (௨)

கடுபொன்பழுக்குஞ்சினைப் பலவின்கனிவாய்கு தட்டித்துய்த்தல
பக், கடுவன்முதலுவிவமந்திக் கருத்தங்கழனிசூழ்கிடந்த, வொடிவில்
வளங்கர்பாஞ்சலத் திறைவிழ்றவோண்ணுதலைக், கொடுவெஞ்சி
னத்தசுழல்பன்றி யெய்துவிலமுயிற்கொண்டனால் ... ... (௩)

நிலவுபொழிதண்மதிக்கவிகைநிழற்றியரசர்திறையளப்ப, வுலகமுழுதும்புகழ்த்தருமனொருகோலோச்சிவருநாளி, லலகில்புணர்ப்பாற்சுயோதனன் சூதாடியவனிகவர்ந்திடலு, மிலகுமவுலிதுறந்துசடைதாங்கிக் கானத்தெய்தினரால் ....(௪)

உடுப்புமுகத்தகூன் கொழுவினுழுதசாலி னிடைத்தவழ்ந்து, குடக்கூன்சங்கமுத்துயிர்க்கும் வளங்கூர்காசிக் கோநகரில், வடிக்கட்குவளைகுழைதடவுமயிலஞ்சாயற்கரும்பெறிந்த, தொடித்தோட்கனிவாய்ப் பாஞ்சாலியையவரோடுந் துன்னினளால் .... (௫)

வடிவேல்நெடுங்கட் பாஞ்சாலிவயக்குங்கதிரோன் றனைநோக்கி, பொடியாத்தவமாண்டி யற்றுதலுமுவந்தாங்கவள் றுய்த்திடுமளவும், கடல்சூழ்கிடந்த வுலகனைத்துங்கனற்றும் பசியால்வருந்திடினு, மடிசிலுலவாப்பொற்குழிசிமகிழ்வினோடுமளித்தனனால் ... ... (௬)

அதனாற்றுருபவாதித்தனெனும்பேர் கதிரோற்காசியதிக், கதையாற்றினமு நவில்வரவர்கனற்றும்பசியினுடல்வருந்தார், மதிநூற்கடலின்றுறைபடிந்தோய்மயூகாதித்தன்கதையதனைப், புதிதாயமிழ்தின்சாவதுபோற்கேட்டியென்னப்புகன்றிடுவான் ... ...(௭)

சகூ-வது-துருபாதித்தன்கதையுரைத்த அத்தியாயம்-முற்றிற்று.

ஆக விருத்தம்-௩௱கூள.

௫௰-வது.

யூகாதித்தன்கதையுரைத்த

அத்தியாயம்.

இருள்சீத்தொளி ரோழ்பரிவெங்கதிரோன், பரிவாலுயர்பஞ்சநதிக்கரைவா,யருளாலோரிலிங்கமமைத்திதயத், தெருளாலுயர்பூசனைசெய்தனனால் ... ... (௧)

ஆறேறியசெஞ்சடையந்தணனை, நாலாயிரம்யாண்டோர்நொடிப்
பொழுதாய், மாறாவுயர்வான்றவமாற்றுதலும், வீறார்கதிரொங்கும்விரி
ந்ததுவே ... ... (௨)

அரிதாயதவம்புரியாதவன்மேல், விரிவெங்கதிரண்டம் விழுங்குத
லாற், றருநீழலில்வானவர்தானவர்வான், றரியாதுடல்வெந்துதிகைத்
தனரால்... ... ... (௩)

மதிதாழ்தருசெஞ்சடைவானவன்வெங், கதிரோன்முன்னடைந்தற
காதலினு, லெதுநீதருகென்னவிசைப்பினுமற், றதுநல்குவனென்ன
வறைந்திடலும்... ... . (௪)

விடயங்களில்நெஞ்சம்விடாமையின்யாம், நொடிகின்றதவிந்தில
னுண்மையனெவ், றடைகின்றபரம்பொருளாதபனைத், தடவந்தண
ன்மேனிதளிர்ப்புறவே.............. ....(௫)

செய்யுந்தவம்விட்டொளிசிந்தொளிரு, மொய்செங்கதிர்வான வ
ன்முன்னணுகி, மெய்யங்கையினீவவிழித்தருளால், மையுண்டொளி
ர்கண்டனைவாழ்த்தினனால்...... ....(௬)

விண்ணோருமகிழ்ந்து வியப்பவெனைப், பண்ணார்மொழியோடுப
ழிச்சலினென், கண்ணாகவிருத்தியெனக்கழறு, வெண்ணார்புரமட்டவ
னைகினனால் ... ...(௭)

வேறு.

இலகுபேரொளிகிளைத்தலாலெறிபுனலுமித்த, உலகின்மேல்மயூகா
தபனெனும்பெயருற்ற, தலகில்கேள்வியோய்நற்கடோற்காத பன்க
லதைய, நிலவுமாறுனாக்குவனதுகேளென நிகழ்த்தும்..... ....(௮)

௫௰-தாவதுமயூகாதித்தன்கதையுரைத்த அத்தியாயம்-முற்றிற்று.

ஆக விருத்தம்-௲௱௭௫.



கடோற்காதித்தன் கதையும்.

கருடேசன்கதையுமாத்த-அத்தியாயம்.

வேறு.

அருமகம்புரிந் தாற்றல்சால் தக்கனுக்கருளால், பொருவில்பேரெழில் வினதைகத்துரு வெனப்புகலு, மிருவர்நன்குலப் புதல்வியருளரி யைந்தவளை, விரியுநன்மறைப் பொருடெரிகாசி பன்வேட்டான்()

உலைமுகம்பழுத்துடைந்தற வொழுகியபசும்பொற், கலனணிந்தபூங் கொம்பனாரிருவருங் காலி, லிலகுநாண்மலர் கொய்தலுங்கத்துரு வென்பாள், விலகிவில்லுமிழ் பூண்முலைவினதையோ டுரைப்பாள் ()

தேவர்கோனிவர் புரவியிந்நிறமெனத் தெரிப்பி, னேவலின்னுழை செய்குவன்யானஃதியம்பிற்; காவியுங்குழையுங் கடந்தெறியும்வாட் டடங்கட், பூவையென்னுழை யேவல்நீசெய்கெனப் புகன்றாள்....(௩)

அண்ணல்வானவர்க் கிறைவனூர்ந்திறற் புரவி, வெண்ணிறத்ததென் றணிநுதல்வினதைதேர்ந்துரைப்பப், பண்ணுலாங்கனி மென்மொழிக்கதிர்முலைப் பாவா, யெண்ணின்மற்றது கரிதெனக்கத்துரு விசைத்தாள்..... ... ... (௪)

ஈதுகாண்டுமென் றற்றைநாளில்வயினேகி, மாதர்வாணுதற் கத்துருவானவர்க் கிறைவன், காதல்கூர்தருபுரவியைக்கருமைசெய் திவணீர் போதுகென்றுதா னுயிர்த்தவாளரவொடும் புகன்றாள்............(௫)

மரகதப்பருமணிச் சுடருடுத்தொளிர் வளைத்தோட், டெரிவைசாற்றிய வெம்மொழிச்செவிப்படலோடும், வெருவுகின்றதெம் முள்ளநீ விளம்பிய தெம்மாற்; புரிவதன்றெனப்புகன்றனகறையனற் புயங்கம்.

ஆயகாலையிற் கத்துருவழலெழ நோக்கிப், பாயசெம்மணிச் சூட்டு வெப்பஃறலைத் துத்திக், காய்சினத்தவா ளரவெலாங்கலுழனுக் கிரையாய்ப், போய்மறிந்திடு கென்னவெந்தீமொழி புகன்றாள்.........(௭)

வைதபின்சில வாளெயிற்றரவுபா தலத்தி, னெய்தலுற்றனசில கறவொடும்வினாந்தேகிக், கைதவத்தினு லொழுகுதீவிடத்தினற் கருமை, செய்தவின்னவர் தலைவனூர்புரவியைச்சினவி ....(௮)

மன்றல்வார்குழ லிருவருமவ்வகை கழிந்த, பின்றைவானிடைச்சே
றலுங்கத்துருப் பிறங்கித், துன்றுவெங்கதிர்க் குளம்பெரித் தனிவொ
ழுங் கடோற்க, மென்றதாற்கடோற் காதபனென்னவீற்றிருந்தான்.()

ஆண்டுநின்றபோ மளவையினமரர்கோன்செருவிற், றாண்டுவெம்
பரி யெதிர்தலுநீனிறத் தோன்றக், காண்டலோடுநீ வென்றனைக்கத்து
ருவினக்கு, வேண்டுமேவல்செய் குவலெனவினதைசெப் பினளால்.()

நெய்கனிந்திருள் விழுங்குசெங்குருதிவே னெடுங்கட், டையலின்னு
யிர்ச்சிலதியாயுறையுநர் டன்னி, லையறுண்ணிடைத் .தேமொழிவின
தைபா லடைந்து, வெய்யவண்ணலம் புள்ளரசினையன விளம்பும்(௰௧)

வயிறலைத்தெறி விரிசிறைச்சூட்டுவா ரணங்கூய்த், துயிலெழுப்பிய
காலையிற்பெயர்தியெஞ் சுடர்கால், வெயிலவன்றினாக் குடகடற்குளித்
திடின்மீள்தி,பயர்தியேற்பயந்துறுதுயபொன்னெனவறைந்தான்.(௰௨)

மாதர்யாழிசை மருட்டுமென்மழலையந் தீஞ்சொற், பேதைசத்து
ருவென்றனளென்னுணா பிழைத்த, தாதலாலவட் கடிமைபூண்டழுந்
தின னென்னுக், காதல்கூர்ந்தினி துயிர்த்தவெங்கலுழனுக் குரைத்
தாள்... ... ... (௰௩)

பூவையன்னவ ளினிதருள்புதல்வர்பா லடைந்து, தேவரும்பெறற்
கரும்பொருளாயினுந் தெரிந்து, மேவல்யான்செயா தொழித்திடற்
றருகுவ லென்ன, வாவியன்னவென் னன்னைபோயுரைத்தியென்றறை
ந்தான்... ... ...(௰௪)

கலுழனல்லுணா கேட்டலுங்கதுமெனப் போகி,யிலகுவாளெயிற்ற
ரவுசுட்கியப்பலு மிமையோ, ருலகிலின்னமிர் தளித்திடல்விடுதுமெ
ன்றுரைப்ப,மலர்பெய்வார்குழல்வினதைதன்மைந்தனுக்குரைத்தாள்,

அகல்விசும்புறை யமிழ்துகொல்கொணர்வதற் கரிய, திசலும்வெ
ம்பசி தணிப்பதற்கருளுதி யென்னத், தகர்மருப்பினிற் றிருந்துவீழ்
தாடிவில் வேடர், துயிர்படுந்திரைத் தொடுகடற்கரையினிற்றெருக்கார்.

அனையபாருயி ரருந்திவெங்கனற் பசியாற்றிக், கனைவிலேகுதியவ
ருழைச்சுருதிநூல் முனிவன், றனைவிழுங்கலை விழுங்கிலின்மிடற்றி
டைத் தழல்போற், கனலுமாற்றவன் றனையுமிழ்ந்தேகுதி கடிதின்.()

என்றுகூறிய வன்னைதனிணையடி வணங்கிக், குன்றம்பாலவையுஞ் சி
றைதருவளியிடைக் கொட்ப,மன்றநீடியர் பொய்யலவாவான்சிறைப
ரப்பிச், சென்றதாமெனச் சென்றனனெறுழ்வலிக் கலுழன்...(௰௮)

விரித்தவாயினை விண்டொடர்வரைமுழை யென்ன, வருத்தவெஞ்சி
னவேடரான்கொருங்கடைந் திடலுங், கருத்தினன்மறை யிடந்தலம்பு
குதலுங் கனற்று, வருத்தியோடவன் றனையுமிழ்ந்தெயினரை யயி
ன்றான் ....(௰௯)

எழ்தடங்கிரியேழ் கடலேழ் நிலவரைப்பும், பாழியஞ்சிறைக் காற்
றினாற்பருவரலெய்த,வூழிவெங்கனல்சிறையொடுபுகுந்த தென்றமரர்,
மாழ்கிநெஞ்சழிந்தலம்வரவானகத்தடைந்தான்... .... (௨௰)

அடைந்தவான்சிறைக் கலுழனையடர்த்துமென் றெண்ணி, மிடை
ந்தவானவர் சூழ்வரவிண்ணவர்க் கிறைவன், றொடர்ந்துவண்டிலம்
படுகவுட்சூழிமா முகத்த, கடங்கொள்சீற்றவெங் கனல்விழிக்களிற்றி
ன்மேற் போந்தான்... ... ... (௨௧)

விண்ணவர்க்கிறை நடவியவெஞ்சினக் கடாத்த, வண்ணலங்கரி மு
தலியவூர்திக ளனைத்து, முண்ணடுக்கிமெய் பதைபதைத்தொழிந்திட
க்கலுழன், கண்ணகன்சிறைக் காற்றினாற்களத்திடைக் கவிழ்ந்த...()

ஈறில்வானவர் நடவியவூர்திகள் யாவுஞ்,சூறைநீள்வளிப் பட்டமெ
ன்சருகெனச் சுழன்று, வேறுவேறுபோய் வீழ்தலும்விரிசிறைக் க
லுழ, னூறுதீஞ்சுவைத் தெள்ளமிர் துறையுளி னுற்றான்... ...(௨௩)

தணிவருஞ்சினத் தழல்விழித்தாட்சிறைக் கலுழ; னணுகுமெல்லை
யுப் புகுதினூறுநூறாகத்,துணிசெயும்படி சுழல்வரமயன்முன
மமைத்த, மணிநெடுஞ்சுடராழியைநோக்கினன் மருண்டான் (௨௪)

அருந்துமாறமிர் தெடுத்திடற்கடைந்தன னல்லன், பொருந்துகற்
படை மகளிரைப்பொருவில் தந்தையினை, வருந்தியீன்றநல் லன்னை
யைமகிழ்ந்தினி தளிப்பான், புரிந்தபாவமும் பூத்திடாதீதென வெ
ண்ணி..... .... (௨௫)

புனிற்றுவெண்பிறைக்கண்ணியன்பூங்கழலன்றி,மனத்தின்மற்றொ
ருகடவுளைவழிபடேனுயி, னினைப்பதற்கரு முருவொடுதிகழ்ந்திடல்
வேண்டு, மெனக்கருத்திடை யெண்ணலுமவ்வுரு விலைபத்தான்(௨௬)

அறுவுமால்வரை போன்மெனுநன்னுருவதனாற், பணிசெய்நே
மியுட் புகுந்தியேந்திரப்பொறி பறித்துத், தனிவருஞ்சுவைத்தெள்
ளமுதட்டியதசம்பைத், துணிவொடுங்கவர்ந் தேகினன்வானவர் துயர.

அவிரொளிப்பசும் பொன்னிலத்தமரர்கள் யாருந், துவர்பெருந்தி
ரைப்பாற்கட லமளியிற்றுயில்வோன், குவலயம்பொதி குரைகழற்
செய்யதா மரையை, யுவகையுற்றொழு தடிகள்கேட்டருள்கவென் று
ரைப்பார் ... ... (௨௮)

இமிழ்கடங்கடல் கடைந்துநீயெமக்குமுன் னீந்த, வமிழ்தம்யா
வையுங்கவர்ந்தனனெம்மையு மடர்த்தான், கமலகேள்வவென் றுரை
த்தலுங்கைம்மலர் கவியா,வுமிழ்செழுங்கதிராழியோனஞ்சலென் று
ரைத்தான் ....(௨௯)

அலகில்சூட்சியால் வெல்குதலன்றிமற் றவனை, விலகிவில்லுமிழ்
படையினால்வெலற்கரி தென்ன, வுலகெலாம்வயிற் றொருபுடைகிடத்
திய வுரவோன், கலுழன்முன்னர்வந் தெய்திமற்றினையன கழறும்.()

வயிரவாட்படை யுழவனை வென்றுவா ளமரிற், செயிரிலின்னமுதெ
டுத்தனைபோகிய திறலாற், பயில்கொடுஞ்சிறைக் கலுழயாமுவந்தனம்
பகர்தி, யியையுமோர்வரந் தருதுமென் றிசைத்தன னெடியோன்()

மருவுயிர்த்தபூந் துளவினோய்வரமிரண் டுனக்குத், தருவனீதரல்
வேண்டுவதென்னெனச் சாற்றுந், திருகுசீற்றவெங் கலுழனைச்செங்
கண்மா னோக்கி,யினாவினவ்வரந்தருகெனவியப்பொடுமுரைத்தான்.

கேட்டநல்வர மளிப்பல்யானினித்தென வெனைத், தோட்டடத்
தினிற் சமைப்பதோர்வரமமிழ் தாவிற்,கூட்டிடாதவை யொழிப்பதோ
ர்வரமென முகுந்தன் , வேட்டிரத்தலு மளித்தனன்வெஞ்சினக் க
லுழன்... ... ...(௩௩)

மாயவன்சொல வரமிரண்டிவிதினின் வழங்கிக், காய்சினத்தவாளர
வொடுங்கத்தரு வுவப்பத், தூயதீஞ்சுவை யமிழ்தினைத்துனைவினிற்
கொடுபோய்த், தாயின்வெஞ்சிறை விடுத்தனன்றடஞ்சிறைக்கலுழன்.

இனியதெள்ளமு தாவினைமுனைத்தரு செனலும், புனிதமுள்ளவர்க்
கல்லதுபொருந்தரு தென்னத், துனிவின்வாளராத் தூயநீராடுவான
ஞெ, வினைபெயர்த்திடத் தருப்பைமேல்வைத்தன னகன்றான் ,.. (௩௫)

அண்ணலஞ்சிறைப் புள்ளரசேகு மமுதைத், தன்னைநீதாமரை
த்தாக்கணங்கிளமுலைச் சாந்த, மண்ணுறுநீள்புயத் தன்னறன்கையி
னூல் வவ்வி, விண்ணவற்கிறை மகிழ்ந்திடவிரைவினலளித்தான் (௩௬)

கரியமேனியன் செய்யதாமரைத்தடங் கண்ணன், விரைவினின்ன
மிர் தெடுத்துவிண்போகிய துணரா, அரவம்யாவையு மவ்வுழியடை
ந்துதெள் ளமிர்தும், பருகநேடலுங் காண்கலாதாருயிர் பதைத்த. ()

உருத்துநெஞ்சழன் றண்ணுமின்சுவையமு திருந்த, தருப்பைய
ன்முறை நக்கலாற்றழல்விழிப் பாம்பின், விரித்தநாக்கடைப் பிளந்
திரண்டாயின வினதை, யருத்திகூர்ந்துபுள் ளரசொடுங்காசியினடை
ந்தாள்... ....(௩௮)

அடைந்துநற்கடோற் காதபன்றனைவழிப் படலால், மடந்தைநா
மம்வெங் கதிரவற்காயது வலத்தாற், படக்கொள்சேடனைப் பறித்து
மேலணிந்தவெங் கலுழன், றடர்ந்தவன்பிறு விலிங்கமொன்றமைத்
தடிதொழுதான்... ... ...(௩௯)

கழ்ழனற்றியகாமருதவத்தினைவியந்து நிலவு தூங்கிளம்பிறையணி
நீள்சடைக் கடவு, ளலகில்நல்வர மளித்துநம்மடியரிற் சிறந்தோ, னு
லகுபூத்தசெந் தாமரையுந்தியங் கடவுள் ....(௪௰)

ஆங்கவற்குநீ யூர்தியாயடைதியென் றறைந்து, நீங்கினல்வரமுவந்
தனஞ்செல்கெனக் கலுழன், வீங்கினன்றடம்புய மூளங்குளிர்ப்புற
விழிநீர், தூங்கமெய்ம்மயிர்சிலிர்ப்புறத்தொழுதிவைசொல்வான் (௪௧)

அய்யநின்னுடை யடியர்தம்மடியர்பூங் கமலச், செய்யசேவடி செ
ன்னியிற்சூட்டுத லடியற், கெய்திநின்றதோர் கடனெனவிருகரங் கூ
ப்பி, மையில்பாற்கடற் றுயின்றவன்மருங்குசென் றடைந்தான். ()

௫௪-வது-கடோற்காதித்தன்கதையுங்கருடேசன்கதையுமுரைத்த

வத்தியாயம்-முற்றிற்று.

ஆ-விருத்தம்-தசாயஎ.

௫௨-வது.

அருணாதித்தன் முதலாதித்தர் கதையுரைத்த அத்தியாயம்.

கல்லெனார்ப்புடைக் கருங்கடல் குடங்கையிற்கவரா; வில்வலன்றனைச் சினவிய அருந்தவமுனிவ, மல்குசீவிரு ணாதபன்கதையினை வகுத்துச், சொல்வல்லேனெனக் குருதிமேற்பண்ணவன் சொல்லும் ... (௧)

காமர்பொழிற் கத்துருகாசிப னருளால், நாமமைந்தரோர் நூற்றுவர்ப்பயந்தன ணலங்கொள், வாமமேகலை வினதையுமம் முனிவரத்தா, லேமநல்லெழிற் புதல்வரோர் மூவரையீன்றாள் ... ... (௨)

அறையுமக்களோர் மூவரிற்கூகை மூத்ததனாற், பறவைவேந்தென வைத்தலும் பறவைகள்குழுமி, யுறவாற்ற லாலுறுபகற்கண் டெரிவிலதா, விறைமைபூண்பது தகாதிதற்கென விலக்கினவே... ...(௩)

முன்னளித்ததன் கூகையையிகழ்ந் திடுமுனிவால்; மன்னுமாயிரம் வருடமுஞ்செல்லு முன்வலிதிற், பின்னளித்தநன் முட்டையையுடைத்தனள்பிறங்கித்; துன்னுமென்குறங் கொழிந்திடத்தோன் றினனருணன்... ... ... (௪)

சிற்றமிக்குள வருணனுங்கன்னையைச் சினவி; மாற்றவட்குநீ சிலதியாய்வைகெனச்சாப, மேற்றல்தீர்குவதென்றெனமற்றையிம்முட்டைத்; தோற்றமைந்தனின் றுயரொழித் திடுமெனச்சொன்னான்...... ...(௫)

இனையகூறிநற் காசியின்விரைவினி லெய்திக், கனைகதிர்ச்சுடர்ப் பழிச்சலுங்கதிரவன் றோன்றி, யெனதுதேர்விடும் பாகனீயாகுதியென்ன, வினையவாற்றினாலாதவற்கவன்பெய ரறைந்தார்...... ......(௬)

அருணவெங்கதிர்க் கதையினைத்தெருளுற வறைந்தேங், கருணையால்விருத் தாதபன்கதையினைக் கேளென், றுருவவாணகைக் குறமகள் முலைமுகடுழக்குந், தெரியல்தாழ்புயன் குறமுனிக்கினையன செப்பும்...(௭)

கன்னிபம்பெடை வண்டொடுஞ்சிறகண் படுக்கும், புன்னையம்பொழில் சூழ்தருகாசியிற் பொருவில், பன்னுகேள்விய னான்மறைக் கடலிடைப் படிந்தோன், மன்னுநாமமும் விருத்தனென்றுளனொருமறையோன்... ... ... (௮)

தமரவெண்டிரைக் கங்கையந்தடங்கரை தன்னிற், குமரிவண்டினங்
கூட்டுணுங்கமல நாயகனை, யமரநெஞ்சகத் திருத்திமெய்த்தவம்புரி
ந்ததனாற், றிமிரமேய்ந்தொளிர் செங்கதிர்ச்செல்வன்வந் தடைந்தான்.

தாளதாமரை நாயகன்றாளிணை வணங்கிக்,'காளையம்பரு வந்தருளெ
ன்றலுங் கடிதின், வேளினல்லுரு வளித்தனன்வியந்தவன் றொழிலா
ல், நாளுநல்விருத் தாதபனெனும்பெயர் நவின்றான் ... .(௰)

ஆசில்நல்விருத் தாதபன்கதையினிதறைந்தேங், கேசவாதபன்கதை
யினைக்கிளக்குவ னென்னத்,தேசுபூத்தொளிர் செந்தமிழ்முனிவரன்
கேட்ப, வாசவன்சிறை விடுத்தவேற்பண்ணவன் வழங்கும்... (௰௧)

காம்பினால்நிலா குவித்தசெந்தாமரைக் கண்ணன், பூம்புனற்றி
ரைக் கங்கைசூழ்காசியிற் போந்து, கூம்புகையினன் குழைந்திடுமன
த்தினனாகி,யேம்பல்மீக்கொளப் பழிச்சிமெய்த்தவம்புரிந் திருந்தான்

சேவுயர்த்தவன் சேவடிசிந்தைசெய் திருந்த, பூவைமேனிய னரு
ந்தவம்பொலிவொடு நோக்கி, வாவுமேழ்பரி நிறுவிவான்செலவயர்
பருதி, யோவிலன்பொடு மிருநிலத்தவனுழை யுற்றான் ... (௰௩)

ஆலமுண்டமைக் கண்டனையகத்தினு ளிருத்திச், சாலமெய்த்தவம்
புரிந்திடுதாமரைக் கண்ண, னேல்வைநோக்கிவந் திறைஞ்சியவிரவி
யைக் காணா, ஞாலநீடிருள் சீப்பவநடந்ததென் னென்றான் ...(௰௪)

அலகிலாமுதுமறை பயிலந்தணனோடு, மூலகம்யாவையும்பூத்தரு
ளுந்தியங் கடவு, ளிலகுபேரொளிப் பிரமநீ நினக்கெவ ரிறைவர்,புல
னவித்தருந் தவமெவன்புரிகுவ தென்றான்... ... ...(௰௫)

உலகினீடிருள் யாவையுமொழிக்குநின் மேனி, யலகில்பேரொளி
யகத்திருளகன்றில போலு, மலர்செழுங்கதிர் வானவமாய்ந்துமாய்ந்
துதிக்கு, நிலையில்யாக்கையேம் பிரமமென்றெங்ஙன நினைந்தாய்.()

அண்டம்யாவையும் படைத்தளித்தாங்கவை துடைக்கும், பண்
டைநான்மறை முடிவுறைபசுபதி யவன்றன், றொண்டர்நாமெலாமவ
னடிதொழுதவரன்றோ, வுண்டபேதமை யொழிந்துயர்பவக் கடலு
ருதார்,... ... ...(௰௭)

பொருவருஞ்சிவபூசனை புரிந்துளோர்தாளில், மருவுறுங்கடுக்
ன் வலியிருல்வந்தும்மற்படினும், வெருவும்வெவ்வினையவன்பெயர்
விளம்பினரன்றே, கருவடைந்துபோந் தன்னையர்கதிர்முலை யுணு
தார்..... .... (௰அ)

ஆதலாலிவணி லிங்கமொன்றமைத் துயரன்பாற், போதுதூய்
வழிபடுகெனமாதவன்புகலக், காதல்கூர்ந்துவெங்கதிரவனிலிங்கமொ
ன்றமைத்துத், தாதுலாநறுந்தண்மலர் தூய்வணங்கினனால்...(௰௯)

கேசவன்புகன்றிடு தலாற்கேசவாதபனென், றாசில்நாமமொன்
றடைந்தகக்கதிரவன்றன்னை, வாசநாண்மலர்க டேய்த்தினம்வழுத்தி
டுவார், பேசருங்கொடுவினை யகன்றுயர்கதிபெறுவார் ... ...(௨௰)

இன்னவாறுயர் கேசவாதவன்கதையிசைத்தோம், பன்னுசீர்வி
மலாதவன்கதையினிப்பகர்வே, முன்னருந்தவ மாற்றியமுனிவகே
ளென்ன, மின்னுநக்கவேற்புங்கவன் றெருளுறவிளம்பும்... (௨௧)

விமலனென்றுளனொருவன் மற்றவன்முனம்விளைந்த, தமனி
யச்சுளைபழுத்தமென்குடக்கனிதகர்ந்தாங், குமிழ்நறைப்பசுந்தேற
ல் வான்றிரையலைத்தொழுகு, தமழுறுந்துறைக்கங்கைசூழ் காசியின
டைந்தான்..... .... (௨௨)

சொட்டுளைப்பசம்புரவியூரிரவிமெய்குளிர்ப்பச், செய்யநாண்ம
லர் தூய்வழிபடுதலுஞ்செங்கேழ், வெய்யவன்றெழு தேத்திரவிமல
ன்முன்றோன்றி, யுய்யுமாறுநீவேண்டியகேளென வுரைத்தான்.(௨௩)

விட்டிலக்கொளி வெங்கதிர்ச்செல்வவெம் மரபிற், குட்டநோயுறு
தருமெனவிரத்தலும் குழைந்து, மட்டுலாஞ்செழுந் தாமரைநாய
